E Paper

மின்னிதழ்

2022 ஓகஸ்ட் 6 சனிக்கிழமை

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்

THINAKARAN

1932 - 2022

வரு. 90 இல. 184 | Saturday 06, August, 2022 | 13 பக்கங்கள்

## இலங்கை ஜனாதிபதிக்கு எகிப்து ஜனாதிபதி வாழ்த்து

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 8ஆவது நிறைவேற்று ஜனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்து கொண்ட ரணில் விக்கிரமசிங்கவுக்கு எகிப்து இஸ்லாமிய குடியரசின் ஜனாதிபதி பட்டாஹ் அல்சசி, விசேட அறிக்கையொன்றில் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

## கூரையை உடைத்துக்கொண்டு வீட்டுக்குள் புகுந்த ஆண் புலி

### மயக்க ஊசி செலுத்தி உயிருடன்பிடித்த வன அதிகாரிகள்

**ஹற்றன் விஷேட நிருபர்**





தலவாக்கலை பகுதியில் வீட்டுக்குள் புகுந்து மறைந்திருந்து சிறுத்தை தாக்கியதில், குடும்பஸ்தர் ஒருவர் நுவரெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம், தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலவாக்கலை மல்லிகைப்பூ தோட்டத்தில் நேற்று (05) காலை ஏழு மணியளவில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் குறித்து தெரிய வருவதாவது, நேற்று காலை 06

## இலங்கைக்கு இந்தியா எப்போதும் உதவும்

### ஜெய்சங்கர் அலி சப்ரியிடம் உறுதி



இலங்கைக்கு உதவுவதற்காக இந்தியா எப்போதும் தயார் நிலையில் இருப்பதாக இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் மற்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரிக்கிடையில் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது. இதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## அத்தியாவசிய சேவைகளுக்கு எரிபொருள் விநியோகம்

### CTB டிப்போக்கள் மூலம் தொடர்ந்தும் வழங்குவதை உறுதிப்படுத்தவும்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

### உயர் நீதிமன்றம் நேற்று அறிவுறுத்தல் விடுப்பு

அத்தியாவசிய சேவைகளுக்காக இலங்கை போக்குவரத்து சபை மூலம், எரிபொருளை விநியோகிக்கும் செயற்பாடுகளை தொடர்ந்தும் மேற்கொள்வது அவசியமென உச்ச நீதிமன்றம் நேற்று தெரிவித்துள்ளது.

சட்டத்தரணிகள் சங்கத்தினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த இரண்டு அடிப்படை உரிமை மனுக்கள் மீதான விசாரணை, நேற்று நடைபெற்ற போதே உயர் நீதிமன்றம் இவ்வாறு தெரிவித்துள்ளது.

நாட்டின் தற்போதைய 06



சென்னையிலுள்ள இலங்கை துணைத் தூதுவர் டாக்டர் டி.வெங்கடேஷ்வரன், கடந்த (04) தமிழக பா.ஜ.க தலைவர் திரு.அண்ணாமலையை மரியாதை நிமித்தமாகச் சந்தித்தபோது பிடிக்கப்பட்ட படம்.



### மக்கள் இடம்பெயர்வில் தீவிர முனைப்பு

### கடந்த ஏழு மாதங்களில் 06 இலட்சம் பாஸ்போர்ட்கள் 03

### தற்போது பொருளாதார போராட்டத்தில் வெற்றிபெற வேண்டும்

# போராட்ட இளைஞர்களுடன் இணைந்து பணியாற்ற தயார்

### காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்களுடனான சந்திப்பில் ஜனாதிபதி ரணில்

### போராட்டக்களத்திலுள்ள அனைத்து தரப்பு இளைஞர், யுவதிகளுக்கும் ஜனாதிபதி அழைப்பு விடுப்பு



ஆர்ப்பாட்டக்காரர்கள் மற்றும் இளைஞர்களுடன் இணைந்து வெளிப்படைத் தன்மையுடன் செயற்பட தான், தயாரென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். நாம், இப்போது பொருளாதாரப் போராட்டத்தில் வெற்றிபெற வேண்டும் என்பதை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி விக்கிரமசிங்க, 06

### அவுஸ்திரேலியாவுக்குள் நுழைய முயன்ற

## இலங்கையர் 46 பேர் கப்பலில் நாடு கடத்தல்

### நேற்றுக் காலை கொழும்பை வந்தடைந்தனர்



இலங்கையிலிருந்து அவுஸ்திரேலியாவுக்குள் பிரவேசிக்க முயன்ற 46 சட்டவிரோத குடியேற்றக்காரர்களை,மீளவும் ஏற்றிக்கொண்டு அவுஸ்திரேலிய கப்பலொன்று நேற்றுக் காலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

இலங்கையைச் சேர்ந்த 46 பேர் கடந்த ஜூலை மாதம் 21ஆம் திகதியன்று சட்டவிரோதமாக கடல் வழியாக அவுஸ்திரேலியாவுக்குச் செல்ல முற்பட்டனர். இதன் போது அவுஸ்திரேலிய 06

## குரங்கு அம்மை தொற்றுக்கு முகம் கொடுக்கத் தயார்



குரங்கம்மை தொற்றுக்கு முகம் கொடுக்க இலங்கை தயாராகவுள்ளதாக தொற்று நோய் ஆய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்று நோய் ஆய்வுப் பிரிவு பிரதானி விசேட வைத்தியர் சமித கினிகே இதனைத் தெரிவித்துள்ளார்.

குரங்கம்மை தொற்று நாட்டில் பரவுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் இதுவரை நாட்டில் குரங்கம்மை தொற்றுக்குள்ளான எவரும் அடையாளம் காணப்படவில்லையெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## வடக்கில் ஐந்து நாட்களும் பாடசாலைகள் நடைபெறும்

### வடமாகாண கல்வி அமைச்சு தீர்மானம் - தொற்று நோய் ஆய்வுப் பிரிவு தகவல்



வட மாகாணத்திற்குட்பட்ட அனைத்து பாடசாலைகளிலும் நாளை மறுதினம் (08) திங்கட்கிழமை முதல் 05 நாட்களுக்கும் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. வட மாகாண கல்வி அதிகாரிகளுக்கிடையில் நேற்று (05) நடைபெற்ற கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

## தனியார் பஸ்கள் நேற்று பணிப் புறக்கணிப்பில்

### பயணிகள் பெரும் சிரமத்துக்கு முகம்கொடுப்பு

### புறக்கோட்டை வர்த்தகர் சங்கம் தெரிவிப்பு



தனியார் பஸ்கள் நேற்று வெள்ளிக்கிழமை சேவையில் ஈடுபடாமையால் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகினர்.

அகில இலங்கை தனியார் பஸ் சங்கத்தினர் நேற்று முன்தினம் (04) வியாழக்கிழமை இரவு முதல் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

ஒரு பஸ்சுக்கு வழங்கப்படும் 40 லீற்றர் டீசல் போதாதென தெரிவித்தே, மாகாணங்களுக்கு இடையிலான தனியார் 06

### சீனி,பருப்பு,கிழங்கு, வெங்காயம், மிளகாய்

## அத்தியாவசிய பொருட்களின் விலைகள் கணிசமாக குறைவு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



சீனி, பருப்பு, வெங்காயம் உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்கள் பலவற்றின் மொத்த விலைகள் குறைவடைந்துள்ளதாக புறக்கோட்டை மொத்த வர்த்தக சங்கத்தின் முக்கியஸ்தரான ஜெ.தேவபிரான் தெரிவித்துள்ளார். கேள்விப் பத்திரமின்றி நேரடியாக அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் சந்தர்ப்பம் வழங்கியுள்ள நிலையிலேயே இவ்வாறு அத்தியாவசிய 06

## ரஞ்சனுக்கு விரைவில் பொது மன்னிப்பு கிடைக்கும்

### ஜனாதிபதி வழங்குவாரென்கிறார் நீதி அமைச்சர்



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்குவாரென்ற நம்பிக்கை, தனக்குள்ளதாக நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு விவகார அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அமைச்சரென்ற வகையில், சட்ட மாஅதிபரிடமிருந்து வழக்குச் சுருக்கங்களைப் பெற்றதாகவும், நெறிமுறையின்படி தனது பரிந்துரைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் சமர்ப்பித்ததாகவும் 06

## நாயை அடித்துக் கொன்ற இருவர் யாழ்.நகரில் கைது

### ஊர்காவற்றுறை பொலிஸார் அதிரடி



யாழ்ப்பாணத்தில் நாயொன்றை கொடூரமான முறையில் கொலை செய்து, அந்தக்காணொளியை சமூக வலைத்தளங்களில் பதிவிட்டவர்களில்,

இருவர்,வியாழக்கிழமை கைதாகினர்.இச்சம்பவத்து டன் தொடர்புடைய ஏனையவரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

புங்குடுதீவு 09ஆம் வட்டாரத்தை சேர்ந்த நான்கு இளைஞர்கள், கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னர் நாய் ஒன்றின் நாலு 06

## மக்களை நெகிழ்வுறச் செய்த மதுரங்களி பொலிஸார்



### பெறுமதியான நகைகள் உரியவரிடம் ஒப்படைப்பு

புத்தளம் – கொழும்பு வீதியில் கிடந்த பல இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் அடங்கிய கைப் பையை கண்டுபிடித்த மதுரங்குளி பொலிஸார், அதனை உரியவரிடம் ஒப்படைத்த சம்பவம் ஒன்று பொதுமக்களை நெகிழ்ச்சியுறச் செய்துள்ளது. சம்பவம் தொடர்பில் தெரியவருவது,

மதுரங்குளி பொலிஸ் வாகன பிரிவில் பரிசோதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போக்குவரத்துப் பிரிவின் பொலிஸ் சார்ஜன்ட் டி.எச்.எம். ருவான் (9099) 06

## 24 மணித்தியாலங்களுக்கு கடலுக்குச் செல்ல வேண்டாம்

### மீனவர்களுக்கு வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை

மீன்பிடி மற்றும் கடற்பயண நடவடிக்கைகளில் எதிர்வரும் 24 மணித்தியாலங்களுக்கு ஈடுபட வேண்டாமென வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

மன்னாரிலிருந்து புத்தளம், கொழும்பு, காலி, அம்பாந்தோட்டை மற்றும் பொத்துவில் வரையான கடற்பரப்புகளில் மீன்பிடி மற்றும் கடற்பயண நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கே இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதால், நாட்டின் பல பகுதிகளில் பெய்து வரும் மழை குறையும் சாத்தியம் தென்படாததாலே,இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. 06

## வாய்த்தர்க்கம் ஒருவரது காதைத் துண்டாக்கியது

வவுனியா வீரபுறம் சின்னத்தன்பனை பகுதியில் இரு தரப்பினருக்குமிடையில் ஏற்பட்ட மோதலில் இளைஞர் ஒருவர் மற்றைய நபரின் காதை கடித்துள்ளார்.

இச் சம்பவம் 04 இரவு 7.30 மணியளவில் இடம்பெற்றது.

இரு தரப்பினருக்குமிடையே ஏற்பட்ட வாய்தர்க்கம், பின்னர் காதை கடித்து துப்பிய சம்பவத்துடன் நிறைவடைந்தது.

பிரச்சினையின்போது ஒரு இளைஞர் மோதலில் ஈடுபட்ட மற்றைய நபரின் காதை கடித்து துண்டாக்கியுள்ளார்.

மற்றைய நபரின் தலையில் வாள்வெட்டு காயம் ஏற்பட்டது.இவர், வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## 80 அடி பள்ளத்தில் குடைசாய்ந்து பஸ் விபத்து

**(ஹற்றன் சுழற்சி நிருபர்)**




பூண்டுலோயாவிலிருந்து கம்பளை நோக்கி பயணித்த தனியார் பஸ்ஸொன்று பூண்டுலோயா கொத்மலை பிரதான வீதியில் மல்லாவ பகுதியில் விபத்துக்குள்ளானது.

பூண்டுலோயா பகுதியிலிருந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு, கம்பளை பகுதிக்குச்சென்ற பஸ் நேற்று முன்தினம் மாலை 04 மணியளவில் வீதியை விட்டு விலகி சுமார் 80 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானது. இவ்விபத்தில், பஸ்ஸில் பயணித்த 14 பேரில் ஒருவர் உயிரிழந்ததுடன், 06

# சர்வதேச செய்திகள்

தாய்வான் பதற்றம்

## அமெரிக்காவுடனான ஒத்துழைப்பை கைவிட்டது சீனா: போர் ஒத்திகைகள் தொடர்ந்தும் உக்கிரம்

தாய்வான் தொடர்பில் இரு வல்லரசு நாடுகளுக்கு இடையிலான உறவுகள் விரிசல் அடைந்திருக்கும் நிலையில் காலநிலை மாற்றம், போதைப்பொருள் எதிர்ப்பு முயற்சிகள் மற்றும் இராணுவ பேச்சுவார்த்தைகள் உட்பட முக்கிய விவகாரங்களில் அமெரிக்காவுடனான ஒத்துழைப்பை கைவிடுவதாக சீனா நேற்று வெள்ளிக்கிழமை அறிவித்துள்ளது.

அமெரிக்க பிரதிநிதிகள் அவையின் சபாநாயகர் நான்சி பெலோசி, தாய்வானுக்கு பயணித்ததை அடுத்து சீனா அதற்கு கடுமையாக எதிர்வினையாற்றி வருகிறது. தாய்வனை தனது பிரிந்து சென்ற மாகாணமாக கருதும் சீனா, அதனை இணைப்பதற்கு தேவை ஏற்படின் இராணுவத்தை பயன்படுத்துவதற்கான வாய்ப்பையும் மறுக்கவில்லை.

கடந்த வியாழக்கிழமை தொடக்கம் தாய்வானை சுற்றிவளைத்து பாரிய போர் ஒத்திகைகளை சீனா நடத்தி வருகிறது. இதனை அமெரிக்கா மற்றும் ஏனைய மேற்கத்திய நாடுகள் கண்டித்துள்ளன.

இந்நிலையில் சீன வெளியுறவு அமைச்சு நேற்று அமெரிக்காவுக்கு எதிராக மேலும் அதிரடி நடவடிக்கையை அறிவித்தது. இதன்படி காலநிலை மாற்றத்திற்கு எதிரான போராட்டம் உட்பட இரு நாடுகளுக்கும் இடையிலான பல்வேறுபட்ட உடன்படிக்கைகள் தொடர்பிலான பேச்சுவார்த்தைகள் மற்றும் ஒத்துழைப்புகளை இடைநிறுத்துவதாக சீனா அறிவித்தது.

உலகின் மிகப்பெரிய சூழல் மாசுக்குக் காரணமான இந்த இரு நாடுகளும் காலநிலை மாற்றத்தை கட்டுப்படுத்த ஒன்றிணைந்து செயற்படுவதாக கடந்த ஆண்டு உறுதி பூண்டிருந்தன. காலநிலை பற்றிய பிரச்சினை தொடர்பில் வழக்கமாக சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவும் இந்த இரு நாடுகளும் இணங்கின.

மறுபுறம் தாய்வானுக்கு பயணித்த பெலோசி மீது சீனா தடைகளை அறிவித்துள்ளது. எனினும் நேற்று தனது பயணத்தை காத்துப் பேசிய பெலோசி, தாய்வானை சீனா தனிமைப்படுத்துவதற்கு அமெரிக்கா அனுமதிக்காது என்று குறிப்பிட்டார்.

ஆசிய நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் அங்கமாக தாய்வானுக்குச் சென்ற நான்சி பெலோசி, நேற்று ஜப்பான் தலைநகர் டோக்கியோவுக்குச் சென்றார். அங்குள்ள அமெரிக்க தூதரகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், சீன எச்சரிக்கையை மீறி தாய்வானுக்குச் சென்றதால் தமக்கு எதிராக அறிவிக்கப்பட்டுள்ள சீன நடவடிக்கை குறித்தும் பேசினார்.

அப்போது அவர், “எங்களுடைய பயண நிரலை வடிமைப்பது சீனா கிடையாது,” என்று தெரிவித்தார்.

இந்தப் பயணத்திற்கு எதிராக சீனாவின் பதில் செயற்பாடுகள் பற்றி தாய்வானும் கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளது. பதற்றத்தை தணிப்பதற்கு கூட்டணி நாடுகளுக்கு தாய்வான் பிரதமர் சூ செங் சென்ச் அழைப்பு விடுத்துள்ளார்.



‘அண்டையில் இருக்கும் கொடிய அயலவர் எமது அதிகாரத்தையும் உலகின் பரபரப்பான கடல்பகுதியில் தன்னிச்சையான ஆபத்தை ஏற்படுத்தும் அதன் போர் ஒத்திகையையும் கைவிடும் என்று எதிர்பார்க்க முடியாது’ என அவர் நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

தாய்வான் தீவின் வடக்கு, தென்மேற்கு மற்றும் கிழக்கு கடல் பகுதியில் போர் ஒத்திகையை மீண்டும் ஆரம்பித்திருப்பதாக சீன இராணுவத்தின் கிழக்கு படைப்பிரிவு தலைமையகம் தெரிவித்துள்ளது. விமானப்படை மற்றும் கடற்படையின் போர் தளவாட திறன்களை பரிசோதிக்கும் நடவடிக்கையாக இந்த கூட்டுப்படை ஒத்திகை நடத்தப்படுவதாக சீன சமூக ஊடக தளமான வெய்போ தெரிவித்துள்ளது.

தனது போர்ப்பயிற்சியின் ஒரு பகுதியாக 11 ஏவுகணைகளை தாய்வானைச் சுற்றியுள்ள எல்லைப் பகுதியில் சீனா ஏவியது. அதிக உயரத்துக்குச் சென்று இலக்கை நோக்கி விழும் பாலிஸ்டிக் ரகத்தைச் சேர்ந்தவை இந்த ஏவுகணைகள்.



தாய்வானின் நிலப்பரப்புக்கு மேலே சில ஏவுகணைகள் சென்றதாக சீன ஊடகங்கள் கூறுகின்றன. ஆனால் இது தொடர்பாக அதிகாரப்பூர்வமாக சீனா எதுவும் கூறவில்லை.

இதேவேளை ஏவுகணை அமைப்புகளை தாய்வான் தனது எல்லையில் நிலைநிறுத்த ஆரம்பித்துள்ளது. விமானங்களும் கப்பல்களும் எல்லையை ஒட்டி கண்காணிப்புப் பணியில் ஈடுபடுவதற்காக அனுப்பப்பட்டிருக்கின்றன.

எனினும் சண்டைக்குத் தயாராக இருப்பதை உறுதி செய்வதற்காகவே இந்த நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் போரிட தங்களுக்கு விருப்பமில்லை எனவும் தாய்வானின் பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

தாய்வான் மட்டுமல்லாமல் அருகேயிருக்கும் ஜப்பானுக்கும் சீனாவின் போர் ஒத்திகை கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. 4 ஏவுகணைகள் தாய்வானுக்கு மேலே பறந்ததாகவும், 5 ஏவுகணைகள் ஜப்பானின் எல்லைக்கு உட்பட்ட கடல் பகுதிக்குள் விழுந்ததாகவும் ஜப்பானின் பாதுகாப்பு அமைச்சகம் கூறியுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை நண்பகல் வரை இந்தப் போர் ஒத்திகை தொடரும் என்று சீனா குறிப்பிட்டுள்ளது.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், சீனாவின் பிரதான நிலப்பகுதியில் தேசியவாத அரசாங்கத்தின் படைகளுக்கும் சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடையிலான சண்டை நடந்தபோது, சீனா மற்றும் தாய்வான் பிரிவு ஏற்பட்டது.

கம்யூனிஸ்டுகள் 1949ஆம் ஆண்டில் வெற்றி பெற்றனர். அவர்களுடைய தலைவரான மாவோ சேதுங் பீஜிங்கில் ஆட்சியைக் கைப்பற்றினார். இதற்கிடையே, கோமின்டாங் என்று அறியப்பட்ட தேசியவாதக் கட்சி, தாய்வானுக்கு தப்பி ஓடியது.

தாய்வான் வரலாற்றின் குறிப்பிடத்தக்க காலத்திற்கு ஆட்சி செய்து வரும் கோமின்டாங், தைவானின் மிக முக்கியமான அரசியல் கட்சிகளில் ஒன்றாக இருந்து வருகிறது.

இப்போது, தாய்வானை இறையாண்மை கொண்ட நாடாக கத்தோலிக்க கிறிஸ்தவத்தின் தலைமையகமான வாத்திகனும், வேறு 13 நாடுகளும் அங்கீகரிக்கின்றன.

தாய்வானை அங்கீகரிக்கக் கூடாது அல்லது அங்கீகாரத்தைக் குறிக்கக்கூடிய எதையும் செய்யக் கூடாது என்று சீனா மற்ற நாடுகள் மீது கணிசமான ராஜ்ஜிய ரீதியிலான அழுத்தங்களைச் செலுத்துகிறது.

## சீன 5 ஜி அலைக்கற்றை தொழில்நுட்பத்துக்கு முதன்மை நாடுகளில் தடை: தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என அச்சம்




சீனாவின் இரு பெரும் இலக்ட்ரோனிக் பொருட்கள் உற்பத்தி நிறுவனங்களான ஹுவாவி மற்றும் இஸட்.டி.ஈ. ஆகியவற்றின் மீது பல உலக நாடுகள் அவை சீன இராணுவத்தின் கையாட்களாக செயல்படுவதாகக் கருதி கட்டுப்பாடுகளை விதிக்கத் தொடங்கியுள்ளன.

5 ஜி தொழில்நுட்பத்தில் அதி முன்னேற்றம் கண்டுள்ள ஹுவாவி நிறுவனத்தைத் தமது நாடுகளில் தொழில் செய்ய அனுமதிப்பது அந்நாடுகளின் தேசிய பாதுகாப்புக்கு ஊறுவிளைவிக்கும் எனக் கருதப்படுவதையடுத்தே ஹுவாவி நிறுவனத்தின் 5 ஜி அலைக்கற்றை தொழில்நுட்ப செயல்பாடுகளை தடைசெய்வதற்கு அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, ஜப்பான், இந்தியா, இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய நாடுகள் முன்வந்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிறுவனம் சீன அரசுடனும் சீன இராணுவத்துடனும் நெருக்கமான தொடர்புகளை பேணி வருவதாகவும் இதனால் சீனாவின் ஏனைய தொழில்நுட்ப பெரு நிறுவனங்களை பின்னுக்குத் தள்ளிவிட்டு ஹுவாவியினால் முன்னணியில் திகழ முடிகிறது என்றும் இந்நாடுகள் கருதுகின்றன. 2019 ஆம் ஆண்டு அமெரிக்க தொலைத்தொடர்பு நிறுவனங்களில் ஹுவாவி 5 ஜி தொழில்நுட்ப பயன்பாட்டுக்கு அமெரிக்கா தடை விதித்தது. அமெரிக்க நீதித்துறை 2019 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் வர்த்தக இரகசியங்களைத் திருடுவதாகத் தெரிவித்திருந்தது. இதே ஆண்டில் ஹுவாவியினால் உற்பத்தி செய்யப்படும் தொலைத்தொடர்பு கருவிகளை தமது நிறுவனங்கள் பயன்படுத்துவதற்கு அமெரிக்கா தடைவிதித்தது.

2018 ஆம் ஆண்டு இந்நிறுவனத்தின் 5 ஜி பயன்பாட்டுக்கு அவுஸ்திரேலியா தடைவிதித்தது. இதே போன்ற தடையை ஜப்பானும் ஹுவாவி மற்றும் இஸட்.டி.ஈ. நிறுவனங்களின் மீது கொண்டு வந்தது. 2020 இல் இந்தியா இந்த அலைக்கற்றை பாவனைக்கு தடை கொண்டு வந்தது. 2018 இல் பிரிட்டன் தடையை அமுலுக்குக் கொண்டுவந்தது. தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகக் கருதி 5 ஜி பயன்பாட்டின் மீது தடையைக் கொண்டுவந்த கனடா, 2018 ஆம் ஆண்டு அந்நிறுவனத்தின் உயர் அதிகாரி ஒருவரை கைதுசெய்ததாக கனடிய தகவல்கள் தெரிவிக்கின்றன. ஐரோப்பிய நாடுகள் ஹுவாவி மீது முழுமையான ஒரு தடையை விதிக்காவிட்டாலும் தமது அடுத்த ஜெனரேஷன் கைபேசி வலைப்பின்னல் உருவாக்கத்தில் இந் நிறுவனத்தின் செயற்பாடுகளின் மீது தடையைக் கொண்டுவர ஐரோப்பிய ஒன்றியம் ஆலோசித்து வருவதாக தெரிய வந்துள்ளது.

## ஈராக்கில் சுட்டெரிக்கும் வெப்பம்: அரச ஊழியர்களுக்கு விடுமுறை



ஈராக்கின் பல பகுதிகளிலும் வெப்பநிலை 50 டிகிரி செல்சியஸுக்கு மேல் அதிகரித்ததை அடுத்து அரச ஊழியர்களுக்கு ஒரு நாள் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பல நகரங்களும் கடந்த வியாழக்கிழமை உலகின் அதிக வெப்பமான பகுதிகளாக பதிவாகின. சுட்டெரிக்கும் வெப்பம் காரணமான குறைந்தது 10 மாகாணங்களில் அரச ஊழியர்களுக்கான பணிகள் இடைநிறுத்தப்பட்டதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த ஜூலை மாதம் தொடக்கம் ஈராக்கில் வெப்ப அலை பாதிக்கப்பட்டிருப்பதோடு இந்தக் காலநிலை தொடர்ந்து நீடித்து வருகிறது.

எரிக்கும் வெப்பம் ஈராக்கில் அசாதாரணமானது இல்லை என்பதோடு அது உலகின் அதிக வெப்பமான இடங்களில் ஒன்றாகவும் உள்ளது. ஆனால் நிலைமை மோசமாக இருப்பதாக குடியிருப்பாளர்கள் விபரித்துள்ளனர்.

தெற்கு துறைமுகமான பஸ்ராவில் வெப்பநிலை குறிப்பிடத்தக்க அளவு உச்சம் பெற்றிருக்கும் நிலையில் அங்கு அரச ஊழியர்களுக்கு நான்கு நாள் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

## உத்தர பிரதேச பொருளாதார மேம்பாடு தொடர்பில் கூட்டம்



உத்தர பிரதேச பொருளாதாரத்தை 1 ட்ரில்லியன் டொலருக்கு முன்னேற்றும் இலக்கை நிறைவேற்றும் மற்றொரு படியாக உத்தர பிரதேச அரசின் உட்கட்டமைப்பு மற்றும் வர்த்தக மேம்பாட்டு திணைக்களம் மற்றும் டிலொயிட் இந்தியா இடையிலான சந்திப்பு அண்மையில் இடம்பெற்றது.

மாநிலத்தால் முன்னெடுக்கப்படும் முதலீட்டாளர்களை கவர்வதற்கான யோகி அரசினால் அமைக்கப்பட்டுள்ள கொள்கைகள் தொடர்பில் இந்த இரு நிறுவனங்களும் அவதானம் செலுத்தின.

அடுத்த ஐந்து ஆண்டுகளில் ஒரு ட்ரில்லியன் டொலருக்கு உத்தர பிரதேச உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதற்கான வழித்திட்டத்தை தயாரிப்பதற்கு ஜப்பானிய அலோசனை டிலொயிட் டச் டொமட்சு உடன் ஒப்பந்தம் ஒன்றில் யோகி அதித்யனாத் அரசு கைச்சாத்திட்டமை குறிப்பிடத்தக்கது.

## செமிகண்டக்டர் உற்பத்தியில் முதலிடம் பெற சீனா முயற்சி

### எதிர் முகாம் அமைக்க அமெரிக்கா திட்டம்

செமிகண்டக்டர் உற்பத்தியில் உலகின் முதன்மை நாடாகத் திகழ்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் சீனாவை அதில் வெற்றி பெறுவதைத் தடுக்கும் வகையில் அமெரிக்கா வியூகங்களை வகுத்து வருவதாக தொழில்நுட்பத்துறைத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

நவீன தொழில்நுட்பம் சார்ந்த உற்பத்திகளில் செமிகண்டக்டர்கள் அதிக அளவில் பயன்படுத்தப்படுவதால் 2030 ஆம் ஆண்டில் உலக செமிகண்டக்டர் உற்பத்தியில் முதன்மை நாடாகத் திகழ சீனா முயன்றுவருகிறது. தற்போது உலக செமிகண்டக்டர் உற்பத்தியில் முப்பது சதவீதத்தை அமெரிக்கா மற்றும் ஜப்பானிய உற்பத்திகள் நிறைவுசெய்கின்றன.

சீனாவின் இந்த முயற்சிகளுக்கு எதிராக தென்கொரியா, ஜப்பான் மற்றும் தாய்வானை இணைத்து ஒரு செமிகண்டக்டர் உற்பத்தித் தளத்தை தனது தலைமையில் உருவாக்குவதற்கு அமெரிக்கா முயன்று வருவதாகவும் அமெரிக்க தொழில்நுட்பம், ஜப்பானிய பாகங்கள் மற்றும் கொரிய, தாய்வான் உற்பத்தித் திறன் என்பனவற்றை ஒன்றிணைத்து இத்தளம் உருவாக்கப்படும் என்றும் இதுபற்றி தகவல்கள் வெளிவந்துள்ளன. தென்கொரியா வருடாந்தம் 150 பில்லியன் டொலர் பெறுமதியான செமிகண்டக்டர் ஏற்றுமதி வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளது. இதில் 30 சதவீதம் சீனாவுக்கு ஏற்றுமதியாகிறது. எனினும் செமிகண்டக்டர் உற்பத்தியில் தன்னிறைவு காண்பதில் சீனா ஈடுபட்டுள்ளதாகவும் தெரிகிறது.



செமிகண்டக்டர் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் தன் நட்பு நாடுகளுடன் இணைந்து செயல்படும் அமெரிக்கா, கடந்த மே மாதம் தனது வர்த்தக அமைச்சரான ஜினா ரெய்மன்டோவை ஜப்பானிய வர்த்தக அமைச்சரை சந்திக்க டோக்கியோ அனுப்பி வைத்தது. அவர்கள் செமிகண்டக்டர் உற்பத்தி தொடர்பான உயர்மட்ட பேச்சுவார்த்தைகளை நடத்தினர்.

## பிரச்சினைக்கு ஒரு சமாதான தீர்வு எட்டப்பட வேண்டும்

### லண்டன் வாழ் காஷ்மீரிகள் கோரிக்கை



ஜம்மு – காஷ்மீர் பிராந்தியத்தில் இருந்து பாகிஸ்தானும் சீனாவும் வெளியேற வேண்டும் என்றும் பிரச்சினைக்கு ஒரு சமாதானத் தீர்வு எட்டப்பட வேண்டும் என்றும் லண்டன் வாழ் காஷ்மீரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். கடந்த மாதம் 28ம் திகதி லண்டன் லீட்ஸ் மைதானத்தில் காஷ்மீரைச் சேர்ந்த மனித உரிமை செயற்பாட்டாளர்கள், சிந்தனையாளர்கள், அரசியல்வாதிகள் மற்றும் லண்டன் காஷ்மீரிகள் கலந்து கொண்ட சர்வதேச காஷ்மீர் மாநாட்டில் இவ் வேண்டுகோள் முன் வைக்கப்பட்டது.

ஜம்மு காஷ்மீர் என்பது ஒன்றிணைந்த ஸ்திரமான ஒரே அரசியல் அமைப்பு கொண்ட ஒரு பிரதேசம் என்பதே எமது லட்சியம் என்றும் அப்பிராந்திய மக்களின் மனித உரிமைகள் நசுக்கப்பட முடியாதது என்றும் பணவீக்கம், அநீதி, மின்சாரவசதி தரப்படாமை, அதிக வரிவிதிப்பு என்பனவற்றின் ஊடாகவும் துப்பாக்கி முனையிலும் அவர்களை வாய்மூடி வைத்திருக்க முடியாது என்றும் இக்கூட்டத்தில் உரையாற்றியோர் தெரிவித்தனர். ஜம்மு – காஷ்மீர் ஆக்கிரமிப்பு, வன்முறை பயங்கரவாதம் என்பனவற்றை 1947 முதல் சந்தித்து வந்துள்ளது. இப்பிராந்தியம் பிரித்து வைக்கப்பட்டிருப்பதற்கு ஒரு முடிவு காணப்பட வேண்டும்.

## உக்ரைனில் இருந்து மூன்று தானிய கப்பல்கள் பயணம்



உக்ரைனின் துறைமுகங்களிலிருந்து 3 கப்பல்கள் தானியங்களை ஏற்றிக்கொண்டு புறப்பட்டுள்ளதாகத் துருக்கியின் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

ரஷ்யப் படையெடுப்பு ஆரம்பித்ததில் இருந்து முதன்முறையாக உக்ரைனியத் துறைமுகமான ஒடேசாவிலிருந்து தானியக் கப்பல் ஒன்று சென்ற திங்கட்கிழமை புறப்பட்டது.

உக்ரைனியத் தானிய விநியோகங்கள் போரால் தடைபட்டுள்ளதால் உலகளாவிய ரீதியில் பஞ்சம் ஏற்படக்கூடும் என்று ஐக்கிய நாடுகள் சபை முன்னதாக எச்சரித்திருந்தது.

அது தொடர்பில் ஐ.நாவும் துருக்கியும் மொஸ்கோவுக்கும் கீவுக்கும் இடையில் இராஜதந்திர ரீதியான உடன்பாடு எட்டப்படுவதற்குக் கைகொடுத்துள்ளன. அதன்படி தானியங்களை ஏற்றிச்செல்லப் பாதுகாப்பான விநியோகப் பாதையை ஏற்படுத்தித்தர ரஷ்யாவும் உக்ரைனும் ஒப்புக்கொண்டுள்ளன.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

# தினகரன்
THINAKARAN

2022 ஓகஸ்ட் 6 சனிக்கிழமை


**தொழுகை நேரம்**
05 முதல் 09 வரை
சுபஹ் - 04.45
ளுஹர் - 12.18
அஸர் - 03.38
மஃரிப் - 06.29
இஷா - 07.43

**இன்றைய சுபதினம்**
சுபகிருது வருடம் ஆடி 21
ராகுகாலம் : பகல் : 9.00 - 10.30வரை
சுபநேரம் : காலை : 7.30 - 9.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: நவமி



இன்றைய பொருளாதார பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டுமானால்

# இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியத்தைத் தவிர வழியில்லை



## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

இலங்கையின் இன்றைய பொருளாதார பிரச்சினைக்கு தீர்வுக் காணப்படவேண்டுமானால் சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்படிக்கைக்கு செல்வதை விட வேறு வழியில்லை என்று ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இது விரும்பியோ, விரும்பாமலோ மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கையாகும் என்றும் ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் இன்றைய பொருளாதார வீழ்ச்சி, பிரித்தானியர் காலத்திலும், ஒல்லாந்தர் காலத்திலும், போர்த்துக்கேயர் காலத்திலும் ஏற்படாத ஒன்று என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

எனினும் ரஜரட்ட ஆட்சியில், ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி,தற்போதைய வீழ்ச்சியை ஒத்திருந்தது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று (05) முற்பகல் நடைபெற்ற இலங்கையின் பொருளாதார சீர்திருத்தங்கள் தொடர்பான ஆய்வறிக்கைகள் வெளியீட்டு விழா மற்றும் புத்திஜீவிகள் ஒன்றுகூடல் சொற்பொழிவு நிகழ்வில் அதிதி உரை ஆற்றிய போதே ஜனாதிபதி விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

1997ம்ஆண்டு ஐரோப்பாவில் ஏற்பட்ட பொருளாதார பின்னடைவின்போது, சர்வதேச நாணய நிதியமே முன் வந்து செயற்பட்டது என்றும் ரணில் குறிப்பிட்டார்.

உடல் சீரின்மையின்போது கசப்பான மருந்தை பயன்படுத்தியேயாக வேண்டும். அதன்படி, எதிர்வரும் 6 மாதக்காலங்கள் கஸ்டமான காலங்களாகவே இருக்கும் என்றும் ரணில் தெரிவித்தார்.

அத்துடன் 2023ஆம் ஆண்டு உலகப் பொருளாதாரத்தில் சிறப்பாக காணமுடியாது.

2024ஆம் ஆண்டில் பொருளாதாரத்தில் முன்னேற்றத்தை அவதானிக்கமுடியும் என்று ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

இதேவேளை பங்கு சந்தை, குறிப்பிட்டவர்களின் கட்டுப்பாட்டில் இல்லாமல், அனைவருக்கும் நன்மையளிக்கும் சுயாதீனத் தன்மையைக் கொண்டிருக்கவேண்டும் என்றும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

"LET'S RESET SRI LANKA" என்ற தொனிப்பொருளில் அட்வகாட்டா நிறுவனத்தினால் (Advocata Institute) இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததோடு, நேற்றும் இன்றும் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்திலுள்ள லோட்டஸ் மண்டபத்தில் நடைபெறுகிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) பிரேரணை நல்லதோ, கெட்டதோ, எவரேனும் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு அதனை அமுல்படுத்த வேண்டுமென சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. அதனை எந்தவொரு தரப்பினரும் எதிர்த்தால் அதற்கு அவர்களின் முன்மொழிவுகள் எவை எனக் கேள்வி கேட்க அரசாங்கத்திற்கு உரிமை உண்டு என்றும் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறியதாவது:


முதலில் நாம் சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். இரண்டாவது மிக முக்கியமானது நிலையான கடன் ஒன்றைப் பெறுவது. இந்தக் கடனைப் பெறுவது தொடர்பில் எவருக்கேனும் ஆலோசனைகள் இருந்தால் அது இலகுவாக இருக்கும். உண்மையாக

06

மக்கள் இடம்பெயர்வில் தீவிர முனைப்பு

# கடந்த ஏழு மாதங்களில் 06 இலட்சம் பாஸ்போர்ட்கள்

### 33 வீத அதிகரிப்பு என்கிறது குடிவரவு திணைக்களம்



இலங்கையில் முதல் ஏழு மாதங்களில் சுமார் 06 இலட்சம் கடவுச்சீட்டுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. இது பொருளாதார நெருக்கடி காரணமாக மக்கள் இடம்பெயர்வதற்கான முனைப்புக்கள் தீவிரமடைந்துள்ளதை குறிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு இதே காலப்பகுதியில் இலங்கையில் 1,47,192 கடவுச்சீட்டுகளே விநியோகிக்கப்பட்டன.

இந்த வருடத்தின் முதல் ஏழு மாதங்களில் கடவுச்சீட்டு வழங்கல் 33% ஆல் அதிகரித்து 5,90,260 கடவுச்சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை ஜூலை மாதத்தில் ஒரு நாள் மற்றும் சாதாரண சேவை கடவுச்சீட்டுக்காக மொத்தம் 1,01,777 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன.

அதில் 98,124 பேருக்கு மாத்திரமே கடவுச்சீட்டுக்களை வழங்க முடிந்துள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் பிரதிக் கட்டுப்பாட்டாளர் பியுமி பண்டார தெரிவித்துள்ளார்.

06

வடகிழக்கின் கதிர்காமம் பாத யாத்திரிகர்களுக்கு

# அனைத்து வசதிகளையும் ஏற்படுத்துமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்பு

### 2.04 மில்லியன் ரூபா நிதியும் ஒதுக்கீடு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய, கதிர்காமம் எசல பெரஹெரவுக்கு வடக்கு, கிழக்கிலிருந்து பாதயாத்திரையாக வரும் பக்தர்களுக்குரிய பாதுகாப்பு, நீர் விநியோகம் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த 2.04 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பாதயாத்திரையாக வரும் யாத்திரிகர்கள் எதிர்நோக்கும் சிரமங்கள் குறித்து மொனராகலை மாவட்டச் செயலாளர் குணதாச சமரசிங்க, ஜனாதிபதியிடம் தெரிவித்த பின்னர், அதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இதற்கான வசதிகள் ஜனாதிபதி செயலகத்தின் ஊடாக வழங்கப்படுகின்றன.

வருடாந்த எசல விழாவை முன்னிட்டு, முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் ஒகந்தவிலிருந்து பாதயாத்திரையாக 90 கிலோமீற்றருக்கும் அதிகமான தூரம் நடந்து கதிர்காமம் தலத்துக்கு வருவது காலங்காலமாக இடம்பெற்று வருகின்றது. இந்தப் பயணத்தின் போது பல்வேறு சிரமங்களை அவர்கள் எதிர்கொள்வதுடன், சில சமயங்களில் வன விலங்குகளால் பேரிடர்களையும் எதிர்கொண்டுள்ளனர்.

இது தொடர்பில் அவதானம் செலுத்தி, அந்த பக்தர்களின் பாதுகாப்பு மற்றும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக செயற்படுமாறு ஜனாதிபதி, உரிய தரப்பினருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

தாய்நாட்டைப் பற்றி சிந்தித்து

# சர்வகட்சி அரசுடன் இணைய சகல கட்சிகளுக்கும் அழைப்பு

### இலங்கை அமரபுர மகா நிகாயவின் மகா தேரர்

நிலையான பொருளாதாரக் கொள்கையொன்றை அமுல்படுத்துவதன் மூலம் நாட்டின் நெருக்கடியான பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வுகாண பலமான அரசாங்கம் அவசியம். இதற்கு சர்வகட்சி ஆட்சி மிகவும் முக்கியமானது. இலங்கை அமரபுர மகா நிகாயவின் அதியுயர் மகா சங்க தலைவர் அக்கமஹா பண்டித வண. தொடம்பஹல சந்தசிறி தேரர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வியாழக்கிழமை மாலை தேரரை சந்தித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இராஜகிரிய, கலபலுவாவ, கோதமதபோவன விகாரைக்கு (04) விஜயம் செய்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அமரபுர மகா நிகாயவின் தலைவர் வண.தொடம்பஹல சந்தசிறி தேரரை சந்தித்து ஆசி பெற்றார்.

விகாரைக்கு வருகை தந்த ஜனாதிபதியை, நிர்வாக சபையின் தலைவர் அஜித டி சொய்சா உட்பட சபை உறுப்பினர்கள் வரவேற்றனர்.பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மத வழிபாடுகளில் ஈடுபட்டார்.

மகாநாயக்க தேரர் தலைமையிலான மகாசங்கத்தினருடன் கலந்துரையாடலில் ஈடுபட்ட பின்னர், தாது மன்றத்திற்குச் சென்று அங்கு சமய கிரியைகளை மேற்கொண்ட பின், மகாசங்கத்தினர் பிரித் பாராயணம் செய்து ஜனாதிபதிக்கு ஆசிர்வாதம் வழங்கினர்.

விவசாயத்திற்கு முன்னுரிமை அளித்து நாட்டை தன்னிறைவு அடையச் செய்யத் தேவையான வேலைத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் என்று கூறிய தேரர், திறமையின் அடிப்படையில் வேலை வாய்ப்புகளை இலக்காகக் கொண்ட தேசிய கல்விக் கொள்கையொன்றை உருவாக்குதல் மற்றும் எதிர்கால உலகை வெல்லக்கூடிய பொருத்தமான பாடங்களை பாடசாலை பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்நிகழ்வில் இலங்கை அமரபுர மகா நிகாயவின் பதிவாளர், கலாநிதி வண.பல்லேகந்த ரத்தனசார தேரர் மற்றும் அந்த நிகாயவை பிரதிநிதித்துவப்படுத்தும் சங்க சபைகளின் தேரர்கள், நிர்வாக சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

காலிமுகத்திடல் கூடாரங்கள்

# 10ஆம் திகதி வரை அகற்றப்பட மாட்டாது

காலி முகத்திடல் போராட்டக்களத்திலுள்ள சட்டவிரோத கூடாரங்கள் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை உரிய சட்ட நடவடிக்கைகளின்றி அகற்றப்படுவதை தடுப்பதாக சட்ட மாஅதிபர் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு உறுதி வழங்கியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் பொலிஸ் மாஅதிபருக்குத் தேவையான ஆலோசனைகளை விரைவில் வழங்குவதாகவும் சட்ட மாஅதிபர் சார்பில் நீதிமன்றத்தில்ல் ஆஜராகிய மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் சுமதி தர்மவர்த்தன அறிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், இக்காலப்பகுதிக்குள் சட்டவிரோத கூடாரங்களை அகற்றுவது தொடர்பான ஆரம்பகட்ட சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு பிரதிவாதிகளுக்கு எவ்வித இடையூறுகளுமில்லையென அறிவிக்கப்பட்டுள்ளது.

போராட்டக்களத்திலிருந்து சுயவிருப்பின் பேரில் வெளியேற விரும்பும் நபர்களுக்கு, இந்த இணக்கப்பாட்டினால் எவ்வித இடையூறுகளும் ஏற்படாதென மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

காலி முகத்திடல் போராட்டக் களத்திலிருந்து நேற்று மாலை 05 மணிக்கு முன்னர் வெளியேற வேண்டுமென பொலிஸாரால் விடுக்கப்பட்ட பணிப்புரையை வலுவிழக்கச் செய்யுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே சட்ட மா அதிபரால் இந்த உறுதியுரை வழங்கப்பட்டது.

# தனியார் பஸ் வேலைநிறுத்தம் நேற்று முடிவுக்கு வந்தது

QR குறியீட்டு முறைமையினூடாக ஒதுக்கப்பட்ட எரிபொருள் ஒதுக்கீட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆரம்பிக்கப்பட்ட பணிப்புறக்கணிப்பு வாபஸ் பெறப்பட்டுள்ளதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, பணிப்புறக்கணிப்பை கைவிடுவதற்கு தமது சங்கமும் தீர்மானித்துள்ளதாக அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்க சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் அஞ்சன பிரியஞ்சித் தெரிவித்துள்ளார்.

தனியார் பஸ் சங்கங்கள் முன்னெடுத்துள்ள வேலை நிறுத்தப் போராட்டத்தினால், நாள் முழுவதும் பல பயணிகள் கடும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

# கொவிட்19 தொற்று மேலும் 4 பேர் பலி

இலங்கையில் மேலும் 04 பேர் கொரோனா தொற்றினால் மரணித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (04) இடம்பெற்ற இந்த மரணங்கள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

உயிரிழந்தவர்களில் இரண்டு பெண்களும் இரண்டு ஆண்களும் அடங்குகின்றனர். அதன்படி, நாட்டில் பதிவான மொத்த கொவிட்19 மரணங்களின் எண்ணிக்கை 16,578 ஆக பதிவாகியுள்ளது. மொத்தமாக அடையாளம் காணப்பட்ட கொவிட்19 தொற்றாளர்களின் எண்ணிக்கை 6,66,232 எனவும் பதிவாகியுள்ளது.

# கண்டி பெரஹராவை பார்க்கச் சென்ற சிறுவனைக் கடத்தியவர் ரயிலில் கைது

### மஹரகம பொலிஸார் அதிரடி நடவடிக்கை

கண்டி, தலதா பெரெஹாவை பார்வையிடச் சென்ற 09 வயது சிறுவனை, கொழும்பிலிருந்து அவிசாவளைக்கு சென்ற ரயிலில் ஏமாற்றி அழைத்துச் சென்ற நபர், மஹரகம ரயில் நிலையத்தில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு ரயிலில் சந்தேகத்திற்கிடமான நபருடன் குழந்தையொன்று பயணிப்பதை அவதானித்த பயணிகள், இது தொடர்பில் மஹரகம பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு அறிவித்துள்ளனர்.

06

# திங்கள் நள்ளிரவு முதல் Gas விலைகள் குறைப்பு

### லிற்றோ நிறுவன தலைவர் அறிவிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

திங்கட்கிழமை நள்ளிரவு முதல் சமையல் எரிவாயுவின் விலைகள் குறைவடையுமென லிற்றோ கேஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் லிற்றோ கேஸ் நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவிக்கையில்:

பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையிலேயே இந்த விலைக் குறைப்பு மேற்கொள்ளப்படுவதாக தெரிவித்துள்ளார்.

அதேவேளை கடந்த 20 தினங்களில் 22 இலட்சம் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

06

# ஊடகவியலாளரின் தந்தை கலுத்துறையில் காலமானார்



ஊடகவியலாளர் ஜெயரட்ணத்தின் தந்தை நாராயணசாமி நேற்று (05) கண்டி, அம்பிட்டிய மீகனுவவிலுள்ள அவரது இல்லத்தில்

காலமானார். இவர், தனது 86ஆவது வயதில் காலமானார்.

அன்னாரின் தகனக்கிரியை இன்று (06) மாலை ஆறு மணிக்கு கண்டி, மஹியாவ மயானத்தில் நடைபெறவுள்ளது.

# எரிபொருள் QR Code புதிய பதிவு சேவை 48 மணிநேரம் நிறுத்தம்

தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திரத்திற்கான (QR CODE) புதிய பதிவுகள் சேவை 48 மணித்தியாலங்களுக்கு செயற்படாதென எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர தெரிவித்துள்ளார்.

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் இடம்பெற்றுவரும் சில திருத்தப்பணிகள் காரணமாக இந்த சேவை தற்காலிகமாக இடைநிறுத்தப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், QR முறைமையை ஏற்கனவே பயன்படுத்திவரும் பயனாளர்களுக்கு இந்த விடயம் பாதிப்பை ஏற்படுத்தாது எனவும் எரிசக்தி அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

# முல்லைத்தீவு ஹோட்டல் நீச்சல் தடாகத்தில் சடலம் மீட்பு

(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)

முல்லைத்தீவில் ஹோட்டலொன்றின் நீச்சல் தடாகத்திலிருந்து சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு நகரிலுள்ள தனியார் ஹோட்டலின் நீச்சல் தடாகத்திலிருந்து இளைஞன் ஒருவரின் சடலமே நேற்று (05) காலை மீட்கப்பட்டது.

முல்லைத்தீவு நகரிலுள்ள ஹோட்டலில் அக்கரைப்பற்றைச் சேர்ந்த 30 வயது நபர் பணியாற்றி வந்துள்ளார். இவர் கடந்த (04) காணவில்லையென முல்லைத்தீவு பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. எனினும் நேற்றுக் காலை அவர் ஹோட்டலின் நீச்சல் தடாகத்தில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவரது சடலம் நீச்சல் தடாகத்தில் காணப்பட்டமை தொடர்பில் ஹோட்டல் அதிகாரிகள் முல்லைத்தீவு பொலீஸாருக்கு தெரிவித்தனர். சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 246.73 | 258.44 |
| கனடியன் டொலர் | 276.09 | 289.20 |
| யூரோ | 361.55 | 376.29 |
| ஜப்பான் யென் | 2.5659 | 2.6696 |
| சிங்கப்பூர் டொலர் | 257.32 | 268.29 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 431.68 | 449.77 |
| சுவிஸ் பிராங்க் | 369.23 | 386.78 |
| அமெரிக்க டொலர் | 357.22 | 368.54 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 957.32 | கட்டார் ரியால் | 98.04 |
| குவைத் டினார் | 1,176.03 | சவூதி ரியால் | 95.99 |
| ஓமான் ரியால் | 937.45 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.26 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் ஆடி மாதம் 21ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 முஹர்ரம் பிறை 07

**குறள் தரும் சிந்தனை**

நூலாருள் நூல்வல்லன் ஆகுதல் வேலாருள்
வென்றி வினையுரைப்பான் பண்பு

*வேற்று நாட்டாரிடம், தனது நாட்டுக்கு வெற்றி ஏற்படும் வண்ணம் செய்தி உரைத்திடும் தூதுவன், நூலாய்ந்து அறிந்தவர்களிலேயே வல்லவனாக இருத்தல் வேண்டும்.*

# சர்வகட்சி அரசை தமிழ்க் கட்சிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மிக நெருக்கடியான ஒரு காலப்பகுதியில் நாட்டின் பொருளாதாரத்தை கட்டி எழுப்பி ஒரு புதிய அரசியல் மற்றும் பொருளாதாரக் கட்டமைப்பை ஏற்படுத்துவேன் என்ற இலக்கை நோக்கி செயற்படுபவராக பதவியேற்றுள்ளார். அவர் ஒரு நீண்ட அரசியல் பாரம்பரியம் கொண்ட கட்சியைச் சேர்ந்தவர்.

ஜனாதிபதி மீது அரசியல் ரீதியான விமர்சனங்கள் தொடர்ந்து முன்வைக்கப்படுவதை ஒருபுறம் வைத்துவிட்டு இதை சாதகமாகப் பார்ப்போமானால் சில முக்கியமான விஷயங்களை அவதானிக்கலாம். நெருக்கடியான ஒரு காலகட்டத்தில் மதியைக் கூர்மையாகப் பயன்படுத்தக் கூடிய ஆட்சியாளரே அவசியம். அவர் மீது விமர்சனங்களை வைக்கும் அனைவருமே உள்ளூர இவர்தான் இப்போதைய சூழலைக் கையாளக் கூடியவர் என்பதை ஏற்றுக் கொள்வார்கள்.

அதேசமயம் பாராளுமன்றத்தில் எவ்வாறு அவரால் 134 வாக்குகளைப் பெற முடிந்தது என்பதையும் சித்தித்துப் பார்க்க வேண்டும். மிகச் சாதாரண சிங்கள மக்களும், இன்றைய பொழுதுக்கு இவர்தான் பொருத்தம் என்பதை ஏற்கவே செய்கிறார்கள். தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களிடமும் இந்த எண்ணத்தைப் பரவலாகப் பார்க்க முடிகிறது.

எனவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எல்லா நகர்வுகளையும் வேறொன்றுடன் தொடர்புபடுத்தி வியாக்கியானங்கள் செய்வதை விட்டுவிட்டு, நாட்டின் பொதுநலன்கள் தொடர்பாக உடனடியாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளையும் திட்டங்களையும் அவர் சரியான முறையில் மேற்கொள்கிறாரா, அவருக்கு பாராளுமன்றமும், கட்சிகளும் உதவுகின்றனவா என்பதே இங்கே முக்கியம். சுழியில் சிக்கிக் கொண்டு உயிருக்குப் போராடுபவரை உடனடியாக மீட்பதா அல்லது எந்த முறையில் மீட்டால் அது ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இருக்கும் என்று விவாதித்துக் கொண்டிருப்பதா?

நாட்டை மீட்பது தொடர்பில் தமக்குக் கிடைக்கும் வாய்ப்புகளை கட்சிகள் பயன்படுத்திக் கொள்ள முன்வருவதே இன்றைக்கு முக்கியம். ஜனாதிபதி தற்போது சர்வகட்சி அரசொன்றின் அவசியம் பற்றி தொடர்ச்சியாக பேசி வருகிறார். நாட்டை மீட்டெடுக்க வேண்டியது தனிமனிதர் அல்லது தனிக்கட்சி ஒன்றின் வேலையாக இருக்க முடியாது. பாராளுமன்றத்தில் மக்கள் பிரதிநிதிகளாக வீற்றிருக்கும் சகல கட்சிகளுக்கும் இப்பொறுப்பு உள்ளது. இப்பொறுப்பை, பொதுவாகவே விமர்சனங்களை முன்வைத்து பின்வாங்கி நிற்கக்கூடிய சிறுபான்மை சமூகங்களின் கட்சிகள், ஏற்க முன்வந்திருப்பது அவதானிக்க வேண்டிய ஒன்று. தமிழ் தேசிய கூட்டமைப்பு, விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் தேசிய கூட்டணி, மக்கள் காங்கிரஸ், தமிழ் முற்போக்குக் கூட்டணி என்பன சாதகமான கருத்துகளை வெளியிட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

தேசியப் பிரச்சினைகளில் சிறுபான்மையினர், குறிப்பாகத் தமிழர்கள், பங்களிப்பு செய்வதில்லை அல்லது தயங்கி பின்னிற்பதே வழக்கம் என்றொரு மனப்பான்மை தேசிய அரசியலில் நீண்ட காலமாகவே உள்ளது. இவ்வகையில், தேசிய அரசாங்கம் தொடர்பாக தமிழ்க் கட்சிகள் சாதகமான கருத்துகளை வெளியிட்டிருப்பது உற்சாகமளிப்பதாக உள்ளது.

2019 தேர்தல்களின் பின்னர் சிறுபான்மை இனங்களின் கோரிக்கைகள், தேவைகளை வேண்டுமென்றே புறக்கணிக்கும் ஒரு போக்கை அரசு கடைப்பிடித்து வந்தது. ஒரு தேசிய அரசாங்கம் அப்போக்குக்கு முடிவு கட்டும். தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களில் சிறுபான்மையின கட்சிகள் அக்கறை செலுத்துவதில்லை என்ற ஒரு கவலை தேசிய அரசியல் மட்டத்தில் இருப்பதால், சர்வகட்சி அரசில் அமைச்சர் மட்டத்திலோ அல்லது தேசிய சபையிலோ, இணைந்து கொள்வதன் மூலம் சிறுபான்மைக் கட்சிகள் நாட்டின் மீதான தமது அக்கறையை வெளிப்படுத்த முடியும்.

சர்வகட்சி அரசில் இணைந்து கொள்வதன் மூலம் அமைச்சுகளின் வாயிலாக மக்கள் சேவையாற்ற முடியும் என்று மக்கள் கருதக் கூடாது. இந்நெருக்கடியான காலக்கட்டத்தில் முக்கிய அமைச்சுகளுக்கு மட்டுமே நிதி ஒதுக்கீடு செய்ய முடியும். ஆனால் தேசிய மட்டத்தில், இந்நாட்டின் சிக்கல்களை தீர்த்து நாட்டை பழைய நிலைக்கு கொண்டு வருவதற்கான கட்டமைப்புகளை உருவாக்கும் பெரும் பணியில் ஈடுபடும் வாய்ப்பை தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகள் பெறுகின்றன.

வழமையான தேர்தல் அரசியலுக்கு அப்பால், தமிழர் பிரச்சினைகள் தீர்க்கப்படுவது நாட்டை மேலும் ஸ்திரப்படுத்தவும், ஒன்றுபட்டு உழைக்கவும் எவ்வாறு உதவ முடியும் என்பதில் ஒரு புரிந்துணர்வை சிங்களக் கட்சிகள் மத்தியில் ஏற்படுத்தும் என நம்புகிறோம். தமிழ்க் கட்சிகளுக்கு இது ஒரு நல்ல வாய்ப்பு. எதிர்ப்பு அரசியலுக்கு பதிலாக பரந்த மட்டத்தில் ஓர் இணக்க அரசியலை உருவாக்க இச் சந்தர்ப்பம் உதவும்.

editor.tkn@lakehouse.lk

# அட்டாளைச்சேனை பிரதேச வைத்தியசாலையின் அம்பியூலன்ஸை இயங்க வைத்த நலன்விரும்பிகள்

அட்டாளைச்சேனை பிரதேச அம்பியுலன்ஸ் வண்டியை இயக்குவதற்கான பட்டறி மற்றும் டீசல் ஆகியவை அன்பளிப்பாளர்களிடமிருந்து கிடைத்த நிதியிலிருந்து பெற்றுக் கொடுக்கப்பட்டன.

குறித்த அம்பியுலன்ஸ் வண்டியின் பட்டறி பழுதடைந்தமை மற்றும் எரிபொருள் இல்லாமை காரணமாக, கடந்த ஒரு மாத காலமாக அம்பியுலன்ஸ் சேவையினைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை காணப்பட்டது.

அத்தோடு எரிபொருள் இல்லாமையினால் – மின்சாரம் துண்டிக்கப்படும் நேரங்களில் வைத்தியசாலையிலுள்ள மின்பிறப்பாக்கியை (ஜெனரேட்டர்) இயங்க முடியாத நிலைவரமும் இருந்து வந்தது.




## பரோபகாரிகளின் உதவிக்கு பாராட்டுகள்

அத்தோடு இது தொடர்பில் கல்முனை பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர், அட்டாளைச்சேனை பிரதேச வைத்திய அதிகாரி மற்றும் வைத்தியசாலை அபிவிருத்திக் குழு செயலாளர் உள்ளிட்டோரை தொடர்பு கொண்டு விடயம் தொடர்பில் வினவியபோது தற்போது நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக வைத்தியசாலைகளுக்குத் தேவையான எரிபொருள் மற்றும் சில ஒதுக்கீடுகளை வழங்க முடியாத நிலையில் தாம் உள்ளதாக, கல்முனை பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டொக்டர் ஐ.எல்.எம். றிபாஸ் இதன்போது கூறினார்.

இதன் காரணமாக வைத்தியசாலைகளுக்குத் தேவையான இவ்வாறான உதவிகளை அந்தந்த ஊரவர்களே செய்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

இதனையடுத்து அட்டாளைச்சேனை பிரதேச வைத்தியசாலை பொறுப்பதிகாரி டொக்டர் யூ.எல்.எம். வபா, வைத்தியசாலை அபிவிருத்திக் குழு செயலாளர் எம்.ஐ.எம். நபீல் மற்றும் குழு உறுப்பினர்கள், அட்டாளைச்சேனை பிரதேசத்திலுள்ள தனவந்தர்களை இணைத்து, வைத்தியசாலையில் நிலவும் மேற்படி குறைபாட்டை நிவர்த்திக்கும் முயற்சியொன்றினை சிரேஷ்ட ஊடகவியலாளர் யு.எல்.மப்றூக் மேற்கொண்டிருந்தார்.

இதற்கமைய 2022.08.03ஆந் திகதி அட்டாளைச்சேனை பிரதேச வைத்தியசாலை அபிவிருத்திக் குழுக் கூட்டம் நடைபெற்றது. இதில் பிரதேசத்திலுள்ள தனவந்தர்கள் சிலருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இந்தக் கூட்டத்தில் வைத்தியசாலையின் அவசரத் தேவை குறித்து பேசப்பட்டமைக்கு அமைவாக, அங்கு வந்திருந்தோர் – ஆம்பியுலன்ஸ் வண்டிக்கு தேவையான பெட்டறியை உடனடியாகக் கொள்வனவு செய்யும் பொருட்டு சுமார் 01 லட்சம் ரூபா நிதி உதவியை வழங்கினர்.

இதன்பின்னர் அட்டாளைச்சேனை அக்ஷா (AQSHA) எரிபொருள் நிலையம் – வைத்தியசாலையின் ஆம்பியுலன்ஸ் மற்றும் ஜெனரோட்டருக்காக 50 லீட்டர் எரிபொருளை இன்று (03) வழங்கியது.

இதனையடுத்து கொள்வனவு செய்யப்பட்ட புதிய பட்டறியை வைத்தியசாலையின் பொதுப்பதிகாரி டொக்டர் வபாவிடம், வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவினர் மற்றும் நிதியுதவியளித்தோரில் சிலர் இணைந்து இன்று புதன்கிழமை பிற்பகல் வழங்கி வைத்தனர்.

இதன்போது, இந்த நற்பணிக்காக உதவிய அனைவருக்கும் வைத்தியசாலை பொறுப்பதிகாரி மற்றும் அபிவிருத்திக் குழு செயலாளர் ஆகியோர் நன்றியை தெரிவித்தனர்.

றிசாத் ஏ. காதர்...
(ஒலுவில் மத்திய விசேட நிருபர்)

# திராய்க்கேணியில் 54 பேர் படுகொலையுண்ட 32ம் வருட நினைவுதினம் இன்று அனுஷ்டிப்பு

அம்பாறை மாவட்டத்தில் உள்ள அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள தமிழ்க் கிராமம் திராய்க்கேணி கிராமமாகும். அங்கு 286 குடும்பங்கள் சீரும் சிறப்புமாக நிம்மதியாக வாழ்ந்து வந்தன.

ஆனால் 1990 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் ஆறாம் திகதி அந்த நிம்மதிக்கும், வாழ்க்கைக்கும் வேட்டு வைக்கப்பட்டது. அங்கு வந்தவர்கள் கிராம மக்களை ஆலயத்திற்கு வரவழைத்து ஏதுமறியாத 54 பேரை மிகவும் குரூரமாக ஈவிரக்கமின்றி கத்தியாலும், கோடரியாலும் வெட்டி கொலை செய்தார்கள்.

தமது கண்களின் முன்னால் தமது உறவுகள் இரத்த வெள்ளத்தில் துடிதுடித்து இறந்ததை கண்டவர்கள் மறுகணமே உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு காரைதீவு, விநாயகபுரம் ,கிரான்குளம், மட்டக்களப்பு என்று இடம்பெயர்ந்தார்கள். பலர் துன்ப வேதனைகளோடு காரைதீவில் இருந்த விபுலானந்த மகாவித்தியாலய அகதி முகாமில் தஞ்சம் அடைந்தார்கள்.

பின்னர் 04 ஆண்டுகளுக்கு பிறகு 1994 ஆம் ஆண்டு மீண்டும் சொந்த ஊரான திராய்க்கேணியில் குடியமர்த்தப்பட்டார்கள். ஆனால் 121 குடும்பங்கள் மாத்திரமே மீள்குடியேறின. ஏனையவர்கள் திரும்பவில்லை.



அங்கு கொல்லப்பட்டவர்களில் கர்ப்பிணி, ஆண், பெண், குழந்தைள் என்று பலரும் அடங்கியிருந்தனரென்பது குறிப்பிடத்தக்கது. வந்தவர்கள் தமிழிலே பேசினார்கள் என்று சம்பவத்தில் உயிர்தப்பியவர்கள் தெரிவித்துள்ளனர். பெண்கள் கண்முன்னால் மானபங்கப்படுத்தப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மூன்று மணி நேரம் கழித்து காரைதீவில் இருந்து செஞ்சிலுவைச் சங்கத்தினரும், இராணுவத்தினரும் வந்து எஞ்சிய மக்களை காப்பாற்றினார்கள்.

காயமடைந்தவர்கள் காரைதீவிற்கு கொண்டு செல்லப்பட்டார்கள். காயப்பட்டவர்களை வைத்தியசாலையில் அனுமதித்தார்கள். அங்கும் இரண்டு பேர் மரணித்தார்கள் .

இந்த சம்பவம் அனைவரையும் துக்கத்தில் ஆழ்த்தியது மாத்திரமல்லாமல் மாறாத வடுக்களையும் ,மிகுந்த பயபீதியையும் ஏற்படுத்தியிருந்தது.

இவ்வாறு பெரும் துயரம் கண்ட திராய்க்கேணி மக்கள் 32 வருடங்களுக்கு முன்பு அனுபவித்த அழியாத வரலாற்று வடுக்களை இன்று 32 ஆவது வருடமாக நெஞ்சில் சுமந்து கொண்டு நினைவு கூருகின்றார்கள். இன்று அங்கு 32 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பலியானோருக்கான ஆத்ம சாந்தி வைபவங்களும் இடம்பெறுகின்றன.

வி.ரி.சகாதேவராஜா...
(காரைதீவு குறூப் நிருபர்)

# SLT-MOBITEL-Softlogic IT உடன் கைகோர்த்து தரவு பரிமாற்றம், பகுப்பாய்வு சேவைகள்

தேசிய ICT தீர்வுகள் வழங்குநரான SLTMobitel ஆனது, Softlogic IT உடனான டிஜிட்டல் கூட்டு முயற்சியின் ஒரு பகுதியாக, தரவு பரிமாற்றம் மற்றும் தரவுப் பகுப்பாய்வு (Data Exchange and Analytics Services) சேவைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் Softlogic IT உடனான மூலோபாய ஒத்துழைப்பை அறிவித்துள்ளது.

தரவு பரிமாற்றம் மற்றும் பகுப்பாய்வு தளமான IZAC, மற்றும் Microstrategy (Nasdaq: MISTR) ஆகியவற்றின் கருவிகள் மற்றும் செயன்முறைகளைப் பயன்படுத்தி, சிக்கல்களைத் தீர்ப்பதில் தரவு சார்ந்த அணுகுமுறையைப் பின்பற்றவும், தரவுகளில் ஆழமான விடயங்களைப் பெறவும் இது முக்கியமாக உதவுகிறது. IZAC என்பது Whiteklay நிறுவனத்தின் உலகளாவிய தரவுப் பரிமாற்ற தளமாகும். MicroStrategy (Nasdaq: MISTR) ஆனது, சுயாதீன வெளிப்படையான வர்த்தகத்தை மேற்கொள்ளும் மிகப்பெரிய பகுப்பாய்வு மற்றும் வணிக நுண்ணறிவு நிறுவனமாகும்.




ஒரு வலுவான தரவு முகாமைத்துவ அமைப்பானது, ஒரு நிறுவனத்திற்கு அதன் விற்பனை மற்றும் செயற்பாட்டு முயற்சிகளுக்கு முன்னுரிமை அளிப்பதில் அதன் அடிமட்டத்தை உயர்த்த உதவும் என்பது பல நிறுவனங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாகும். முடிவெடுத்தல் விஞ்ஞானத்தின் திறனான பயன்பாடு, நிறுவன ரீதியிலான செய்திப்பரிமாற்றம் மற்றும் உத்திகளிலான அதிக தெளிவுக்கு வழிவகுக்கின்றது.

SLTMobitel Akaza கிளவுட் தளத்தை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் சந்தா அடிப்படையிலான நுண்ணறிவு தரவு முகாமைத்துவமானது, ஒரு சேவையாக நிறுவனங்களுக்கு கூட்டுத் தீர்வை வழங்கும். இந்தத் தீர்வு நிறுவனங்களுக்கு தரவு அமைவுகளைக் காட்சிப்படுத்தவும், நிறுவனங்கள் சரியான நேரத்தில் முடிவுகளை எடுப்பதற்கான எதிர்வுகூறல் கணிப்பு பகுப்பாய்வுகளைப் பயன்படுத்தவும், அதன் மூலம் அவர்களின் வணிகச் செயற்பாடுகளை மேலும் திறனாக்கவும் வசதியளிக்கும்.

SLTMobitel இனால் வழங்கப்படும் புதிய சேவை குறித்து கருத்து தெரிவித்த SLT இன் பிரதான நிறைவேற்று அதிகாரி ஜனக அபேசிங்க, “SLTMobitel தரவு என்பது நிறுவன வாடிக்கையாளர்களுக்கு நிலைபேறான வளர்ச்சியை அடைவதற்கும் புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவிப்பதற்குமான புதிய உண்மையின் ஆதாரம் என்பதை அங்கீகரிக்கிறது. இணைப்பு, கிளவுட் மற்றும் தரவு ஆகியவற்றைக் கொண்ட பயணத்தில், SLT உடன் தொடர்பை ஏற்படுத்துவதன் மூலம், நிறுவன டிஜிட்டல் மாற்றத்தை ஏற்படுத்தும் Whiteklay தளத்தின் Data Virtualization, Analytics மற்றும் AI கருவிகளைப் பயன்படுத்தி, முடிவெடுப்பதில் இலங்கையில் உள்ள நிறுவனங்களை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்ல நாம் எதிர்பார்க்கின்றோம்." என்றார்.

# தமிழகத்தின் பல மாவட்டங்களில் அடைமழை; வெள்ளத்தினால் மக்களுக்கு அதிக பாதிப்புகள்

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் பரவலாக தொடர்ந்து மழை பெய்து வருவதால், அப்பகுதிகளில் உள்ள அணைகள் நிரம்பியுள்ளன. ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால், பொதுமக்கள் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர்.

தமிழகத்தில் தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதால், பல்வேறு மாவட்டங்களில் கனமழை பெய்து வருகிறது. இதனால் நீர்நிலைகள் நிரம்பி வருகின்றன. மேலும், அப்பகுதிகளில் உள்ள அணைகளுக்கு நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து வருவதால், அணைகளின் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்து வருகிறது. குறிப்பாக 13 அணைகள், 30க்கும் மேற்பட்ட தடுப்பணைகள் நிரம்பியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. மேலும், பல்வேறு மாவட்டங்களில் உள்ள ஆறுகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக, தென்காசி மாவட்டத்தில் உள்ள இராமநதி மற்றும் கடனா நதி அணைகளுக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது. இதனால் 84 கன அடி கொள்ளளவு கொண்ட இராமநதி, தற்போது முழு கொள்ளளவை எட்டியுள்ளது. அணைக்கு 306 கன அடி தண்ணீர் வந்து கொண்டுள்ளது. சுமார் 300 கன அடி உபரி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

கர்நாடகா பகுதியில் உள்ள பாலாற்று நீர் பிடிப்பு பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அருகே புல்லூரில் உள்ள 12 அடி உயர தடுப்பணை நிரம்பியுள்ளது. பாலாற்றில் நீர் வரத்து அதிகரித்துள்ளதால், பாலாற்றில் படுகையில் விவசாயம் செய்து வரும் விவசாயிகளிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

திருவண்ணாமலை மாவட்டம் சாத்தனூர் அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளின் தொடர்ந்து கனமழை பெய்து வருவதால், சாத்தனூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. சாத்தனூர் அணையின் முழு கொள்ளளவு 119 அடியாகும். தற்போத அணையின் நீர்மட்டம் 113.5 அடியை எட்டியுள்ளது.

கோவை மாவட்டம் வால்பாறை, பொள்ளாச்சி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் கடந்த சில தினகளாக கன மழை பெய்து வருவதால் ஆழியார் அணையிலிருந்து 11 மதகுகள் வழியாக உபநீர் திறந்து விடப்பட்டுள்ளது. இதனால், அம்பராம்பாளையம், ஆத்து பொள்ளாச்சி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. மீனாட்சிபுரம் மற்றும் கோபாலபுரம் வழியாக செல்லும் பாலம் மூழ்க்கும்படி வெள்ளம் ஆர்ப்பரித்து செல்கிறது

மீனாட்சிபுரம் மற்றும் கோபாலபுரம் வழியாக பாலத்தை கடக்கும் பொதுமக்கள் பாதுகாப்பாக கடக்கும்படி காவல் துறையினர் அறிவுறுத்தியுள்ளனர். இந்நிலையில், இருசக்கர வாகனத்தில் பாலத்தை கடக்க முயன்ற நபர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டார்.

வேலூர் மாவட்டத்தில் பரவலாக கனமழை பெய்து வருவதால், மாநகரின் முக்கிய சாலையான அண்ணா சாலையில் மழைநீர் குளம் போல் தேங்கியுள்ளது. இதனால் வாகன ஓட்டிகள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகினர். மேல் அரசம்பட்டு உத்திர காவேரி ஆற்றிலும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இதேபோல் குடியாத்தம் பகுதியில் உள்ள மோர்தானா அணையும் நிரம்பி உபரி நீர் வெளியேறு வருகிறது

வேலூர் திருவண்ணாமலை மாவட்ட எல்லையில் அமைந்துள்ள ஜவ்வாது மலை தொடரிலும் கனமழை பெய்து வருவதால், அமிர்தி காட்டாற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. அமிர்தியில் இருந்து ஜமுனாமத்தூர் செல்லும் தரைபாலம் நீரில் மூழ்கியது. இதனால் போக்குவரத்து துண்டிக்கப்பட்டதால் பொது மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# சீன உளவுக் கப்பலின் இலங்கை வருகை; அயல்நாட்டுக்கு முன்னுரிமையளிக்கும் இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள வேதனை!

சீனாவின் உளவுத்துறைக் கப்பல் ஒன்று இலங்கையின் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வருகை தர விருப்பது தொடர்பான செய்திகள் உள்நாட்டில் மாத்திரமன்றி சர்வதேசத்திலும் பெரிதும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. சீனாவின் கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வருவதை இலங்கை பாதுகாப்புத்தரப்பு உறுதி செய்திருக்கிறது.

எதற்காக சீனாவின் உளவுக் கப்பல் இலங்கைக்கு வருகிறது? இதனால் இந்தியாவுக்கு பாதிப்புகள் ஏற்படலாமென புதுடில்லி அஞ்சுவதற்கான காரணங்கள் என்ன?

இவ்வினாக்கள் தொடர்பாக தற்போது சர்வதேச ரீதியில் இராணுவ ஆய்வாளர்கள் பலவிதமான விமர்சனங்களை முன்வைக்கின்றனர்.

கடந்த ஜூலை 13 ஆம் திகதியன்று சீனாவிலிருந்து புறப்பட்ட 'யுவான் வாங் 5' என்ற உளவுக் கப்பல் தாய்வான் நாட்டைக் கடந்து இந்தியப் பெருங்கடலில் பயணித்துக் கொண்டிருக்கிறது. இந்தக் கப்பல் இம்மாதத்தில் (ஓகஸ்ட்) அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வரும் என்ற தகவல் வெளியாகியிருக்கிறது. அப்போதே இது தொடர்பாகக் கவலை தெரிவித்திருந்தது இந்தியா. ஆனால் இப்போது அந்தக் கப்பல் இலங்கைக்கு வருவது உறுதியாகியிருக்கிறது.

இக்கப்பலின் வருகையானது ஏற்கனவே முன்னைய அரசாங்கத்தினால் அனுமதியளிக்கப்பட்டிருந்ததென அரசாங்க வட்டாரங்கள் கூறுகின்றன.

"இலங்கை கடற்பரப்பைக் கடந்து செல்ல, பல நாடுகளின் வர்த்தக, இராணுவக் கப்பல்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது. அதேபோல, சீனாவின் 'யுவான் வாங் 5' ஆராய்ச்சிக் கப்பலை, அம்பாந்தோட்டை துறைமுகத்தில் நிறுத்திவைக்க அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இந்தக் கப்பல் ஓகஸ்ட் 11 முதல் ஓகஸ்ட் 17 வரை அம்பாந்தோட்டையில் நிறுத்தி வைக்கப்படும். அங்கிருந்து செயற்கைக்கோள் கட்டுப்பாடு குறித்த ஆராய்ச்சிகள், இந்தக் கப்பல் மூலம் மேற்கொள்ளப்படும்" என்று இலங்கை பாதுகாப்பு வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

சீன உளவுக் கப்பல் இலங்கைக்கு வருகை தரவிருப்பதால் இந்திய மத்திய அரசு வேதனையடைந்திருப்பதாகத் தெரிகிறது. இலங்கையின் அத்தனை நெருக்கடி வேளையிலும் விரைந்தோடி வந்து அனைத்துவித உதவிகளையும் இந்தியா வழங்கிக் கொண்டிருக்கையில், சீனாவின் உளவுக் கப்பல் இலங்கைக்கு வரவிருக்கிறதென்ற செய்தி புதுடில்லிக்கு வேதனையையே ஏற்படுத்துமென்பது நிட்சயம்.

இலங்கையை இந்தியா தனது சகோதரன் என்ற கண்ணோட்டத்திலேயே நோக்குகின்றது. அயல்நாட்டுக்கே முன்னுரிமை என்ற ரீதியிலேயே இலங்கைக்கு இந்தியா அனைத்துவித உதவிகளையும் வழங்கி வருகின்றது. இன்றைய பொருளாதார நெருக்கடி வேளையில் இலங்கைக்கு இந்தியா வழங்கியுள்ள உதவிகள் அநேகம். உணவு, எரிபொருள், மருந்துப் பொருட்கள், இலகு முறை கடன்கள், பசளை என்றெல்லாம் இந்தியா சமீப காலமாக வழங்கியுள்ள உதவிகள் அதிகமாகும்.





இலங்கைக்கு வந்து சேர்ந்த இந்திய உதவிகள்

இவ்வாறான நிலையில் சீன உளவுக் கப்பலின் வருகையை இந்தியா கவலையுடனேயே நோக்குகின்றது. அதேசமயம் இக்கப்பல் இலங்கைக்கு வருவது தொடர்பாக இந்தியாவுக்கு சில சந்தேகங்களும் உள்ளன.

சீனாவின் இந்த 'யுவான் வாங் 5' உளவுக் கப்பல், 750 கி.மீ தூரம் வரையிலுள்ள பகுதிகளை உளவு பார்க்கும் எனச் சொல்லப்படுகிறது. அந்த வகையில் தமிழ்நாட்டிலுள்ள சில முக்கிய இடங்களையும், ஆந்திரா, கேரளாவின் கடலோரப் பகுதிகளையும் இந்தக் கப்பல் உளவு பார்க்க வாய்ப்பிருக்கிறது என்பது புதுடில்லியின் தவிர்க்க முடியாத அச்சம் ஆகும். தென்னிந்தியாவிலுள்ள ஆறு துறைமுகங்களை இந்தக் கப்பல் உளவு பார்க்கலாம் என்று இந்திய இராணுவ ஆய்வாளர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

சீனக் கப்பலின் உண்மையான நோக்கம் தொடர்பான தகவல்களை இந்திய மத்திய பாதுகாப்புத்துறை சேகரித்து வருவதாகத் தெரிகிறது. மேலும், இந்தக் கப்பல் ஏற்படுத்தப்போகும் தாக்கங்கள் குறித்தும் இந்திய மத்திய அரசு வட்டாரத்தில் பல விவாதங்கள் நடந்ததாகக் கூறப்படுகிறது. அத்தோடு, தென் மாநிலங்களைக் கவனமாக இருக்க வேண்டுமென மத்திய அரசு அறிவுறுத்தியிருப்பதாகச் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

இது தொடர்பாக மூத்த பத்திரிகையாளர்கள் சிலர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

"சீனக் கப்பலின் வருகையைத் தடுத்து நிறுத்த இந்தியா எடுத்த முயற்சிகள் வீண் போய்விட்டன. இலங்கை, பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்குக் கடன் வழங்கியதோடு, பல்வேறு உதவிகளையும் செய்தது இந்தியா மட்டுமே. அவ்வாறு இருந்தும் சீனாவின் கப்பல் இலங்கைக்கு வருவது கவலைக்குரியது" என்று பத்திரிகையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அதேசமயம் இந்த விடயத்தில் மற்றொரு விடயத்தையும் சிந்திக்க வேண்டியுள்ளது.சீனா அழுத்தம் கொடுத்தால், சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து இலங்கைக்கு நிதியுதவிகள் கிடைக்க வாய்ப்பிருக்கிறது. ஆனால், இந்தியாவிடமிருந்து தொடர்ந்தும் உதவிகள் கிடைப்பதில் சங்கடங்கள் உள்ளன. இலங்கைக்கு இந்தியா இத்தனை உதவிகளை வழங்கிய பின்னரும், சீன உளவுக் கப்பல் இலங்கைக்கு வருகை தருமானால் நிவாரண உதவிகளை இலங்கைக்கு அனுப்புவதில் இந்திய மக்கள் மகிழ்ச்சியடையப் போவதில்லை.

## இலங்கையின் இன்றைய பொருளாதார வீழ்ச்சி உட்பட அனைத்து நெருக்கடி வேளையிலும் விரைந்து வந்து ஆதரவளிக்கும் முதலாவது நாடு இந்தியா!

ஏனெனில் இந்திய மத்திய அரசு மாத்திரமன்றி தமிழ்நாடும் இலங்கைக்கு ஏராளமான உதவிகளை சமீப காலமாக வழங்கியுள்ளது. இந்திய மக்களும் மனம் விரும்பி இவ்வாறான உதவிகளை தனிப்பட்ட ரீதியில் இலங்கை மக்களுக்கென வழங்கியிருந்தனர். அவ்வாறிருந்தும் சீன உளவுக் கப்பலின் வருகை தருவதானால் இந்திய மக்கள் வேதனையடைவது தவிர்க்க முடியாததாகும்.

இலங்கைக்குச் செல்லும் சீன 'உளவுக் கப்பலின்' நடமாட்டத்தை இந்தியா உன்னிப்பாகக் கண்காணித்து வருவதாக புதுடில்லி தகவல்கள் தெரிவிக்கின்றன .ஓகஸ்ட் 11 ஆம் திகதி அந்தக் கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் நிறுத்தப்படுமென தகவல்கள் கூறுகின்றன. இலங்கை கடுமையான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டிருக்கும் நேரத்திலேயே இலங்கை துறைமுகத்திற்கு சீன உளவுக் கப்பல் வருகை தரவுள்ளது.

'யுவான் வாங்' வகை கப்பல்கள் செயற்கைக்கோள், ரொக்கெட் மற்றும் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை (ICB M ) ஏவுதல்களைக் கண்காணிக்க ப் பயன்படுகின்றன. பசிபிக் , அட்லாண்டிக் மற்றும் இந்தியப் பெருங்கடல்கள் முழுவதும் இயங்கு ம் திறன் கொண்ட இந்த கண்காணிப்புக் கப்பல் சுமார் 7 சீனாவிடம் உள்ளன. பெய்ஜிங்கின் நிலம் சார்ந்த கண்காணிப்பு நிலையங்களுக்கு இந்த கப்பல்கள் துணைபுரிகின்றன.

அ மெரிக்கத் பாதுகாப்புத் துறை அ றிக்கையின்படி, இந்த விண்வெளி ஆதரவுக் கப்பல்கள் சீனாவின் மக்கள் விடுதலை இராணுவத்தின் (பி.எல்.ஏ) உத்தி ஆதரவுப் படை (எஸ்.எஸ்.எஃப்) மூலம் இயக்கப்படுகின்றன.

' யுவான் வாங் 5' சீனாவின் ஜியாங்னான் கப்பல் கட்டும் தளத்தில் கட்டப்பட்டது. இது செப்டம்பர் 2007 இல் கடற்படை சேவையில் சேர்ந்த து. 222 மீற்றர் நீளமும் 25.2 மீற்றர் அகலமும் கொண்ட இந்தக் கப்பலில் கடல்கடந்த வான்வெளி கண்காணிப்புக்கான அதிநவீன கண்காணிப்பு தொழில்நுட்பம் உள்ளது. இக் கப்பல் ஓகஸ்ட் 17 ஆம் திகதி அம்பாந்தோட்டையிலிருந்து புறப்படும்.

"இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் பொருளாதார நலன்களைப் பாதிக்கும் எந்தவொரு நடவடிக்கையையும் அரசாங்கம் கவனமாக கண்காணிக்கிறது. அவற்றைப் பாதுகாக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் புதுடில்லி மேற்கொள்ளும்" என்று இந்திய பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இலங்கையின் இரண்டாவது பெரிய துறைமுகமான அம்பாந்தோட்டை துறைமுகம் தென்கிழக்கு ஆசியாவை ஆபிரிக்கா மற்றும் மேற்கு ஆசியாவுடன் இணைக்கும் பாதையில் அமைந்துள்ளது. சீனாவைப் பொறுத்தவரை, அதன் 'பெல்ட் அண்ட் ரோட்' திட்டத்தில் இது ஒரு முக்கியமான மைல் கல்லாகும்.

இந்தத் துறைமுகத்தின் மீதான சீன ஈடுபாடானது, இந்தியப் பெருங்கடலில் தங்கள் நலன்களுக்கு தீங்கு விளைவிக்கும் என்று இந்தியாவும் அமெரிக்காவும் பலமுறை கவலை தெரிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# வறிய நிலையிலுள்ள மாணவர்களுக்கு நிதியுதவி வழங்கும் இலங்கை மாணவர் கல்வி நிதியம்

அவுஸ்திரேலியாவில் கடந்த 34 வருடங்களாக இயங்கிவரும் இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் உதவியைப் பெற்றுவரும் இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கான 2022 ஆம் ஆண்டுக்கான முதல் ஆறு மாதங்களுக்குரிய நிதிக்கொடுப்பனவு வழங்கப்பட்டு விட்டது.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, நுவரெலியா மற்றும் கம்பஹா மாவட்டம் ஆகிய பிரதேசங்களில் வறுமைக்கோட்டில் வாழும் தமிழ் மாணவர்களுக்கு இந்நிதியம் உதவி வருகின்றது.

இலங்கையில் நீடித்த போரினால் தந்தையை அல்லது குடும்பத்தின் மூல உழைப்பாளியை இழந்த ஏழைத்தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவி வந்த தன்னார்வத் தொண்டு நிறுவனமான இலங்கை மாணவர் கல்வி நிதியம், கடந்த சில வருடங்களாக வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்களையும் தேர்ந்தெடுத்து உதவி வருகின்றது.

கடந்த காலங்களில் கொவிட் பெருந்தொற்றினை கவனத்தில் கொண்டு இம்மாணவர்களின் குடும்பங்களுக்கும் உலர் உணவுப்பொதிகளை வழங்கிய கல்வி நிதியம், இந்த ஆண்டு தொடக்கம் (2022) இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடியை கவனத்தில் கொண்டு மாணவரின் நிதிக்கொடுப்பனவையும் இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது. இதன் பிரகாரம் மாணவர்கள் மாதம் ஒன்றுக்கு இலங்கை நாணயத்தில் மூவாயிரம் ரூபா பெற்று வருகின்றனர்.










அவர்களின் கல்வி சார்ந்த தேவைகளுக்காக உதவும் இலங்கை மாணவர் கல்வி நிதியத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களின் ஆதரவுடன் இந்த தன்னார்வத் தொண்டு நடத்தி வருகின்றது. கடந்த 02 ஆம் திகதி கம்பஹா மாவட்டத்தில் நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரியில் அதிபர் புவநேஸ்வரராஜா தலைமையில் நடந்த நிகழ்வில் மாணவர்களுக்கான 2022 ஆம் ஆண்டுக்கான முதல் கட்ட நிதியுதவி வழங்கப்பப்பட்டது.

மாணவர்களின் தாய்மாரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். மாணவர் தொடர்பாளரான ஆசிரியை செல்வி வி. லோஜினி இந்நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.

லெ. முருகபூபதி...
அவுஸ்திரேலியா.

# பெற்றோல் பெறுவதற்காக நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்களை சேதமாக்கிய யானை!

எரிபொருள் நிரப்புவதற்காக தரித்து வைக்கப்பட்டிருந்த மோட்டார் வண்டிகளை காட்டுயானை உட்புகுந்து தாக்கி அழித்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

மட்டக்களப்பு மாவட்டம் போரதீவுப்பற்று பிரதேசத்திற்குட்பட்ட வெல்லாவெளியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோல் நிரப்புவதற்காக மாலை வேளையிலிருந்தே மோட்டார் வண்டிகள் ஒன்றன் பின் ஒன்றாக வைக்கப்பட்டிருந்தன. இந்நிலையில்இரவு அப்பகுதிக்கு வந்த காட்டு யானை ஒன்று வரிசையில் வைக்கப்பட்டிருந்த மோட்டார் வண்டிகள் மீது தனது பலத்தைக் காண்பித்து துவம்சம் செய்துவிட்டுச் சென்றுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.





குறித்த காட்டு யானை அப்பகுதியிலுள்ள புன்னக்குளம் கிராமத்தினூடாக கடந்து வெல்லாவெளி எரிபொருள் நிரப்பு நிலையம் அமைந்துள்ள பகுதிக்கு வந்துள்ளது. இந்நிலையில் அங்கு வரிசையில் வைக்கப்பட்டிந்த மோட்டார் சைக்கிள்களை துவம்சம் செய்ததில் 7 மோட்டார் சைக்கிள்கள் சேதமாக்கப்பட்டுள்ளன. அதில் 3 மோட்டார் சைக்கிள்கள் முற்றாக சேதமடைந்துள்ளதுடன், ஏனைய 4 மோட்டார் சைக்கிள்களும், பகுதியளவில் சேதமாக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி கிராம சேவை உத்தியோகத்தர் தெரிவிக்கின்றார். இதனால் சுமார் 30 இலட்சம் ரூபா சேதம் ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

"தாம் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு ஏற்றுவதற்கும், விவசாய நடவடிக்கைகளுக்குமாக பெற்றோல் இன்றி மிகவும் தவித்து வருகின்றோம். இந்நிலையில் பெற்றோல் நிரப்புவதற்காகவே எமது மோட்டார் சைக்கிள்களை வைத்தோம். எமது மோட்டார் சைக்கிள்களுக்கு தற்போது இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால் எமது பிள்ளைகளின் கல்வியும், வாழ்வாதாரமும் பாதிப்படையும். இது எமக்கு மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போன்றுதான் உள்ளது. எமக்கு அரசாங்கம் உதவி செய்ய வேண்டும்" என பாதிக்கப்பட்டவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

# இந்தியாவில் அதிகரிக்கும் மின்சார வாகனங்கள்

மின்சார வாகன உற்பத்தியாளர்கள் இந்தியச் சந்தையில் நுழைந்துள்ளனர். இந்திய நிறுவனமொன்று சாமானிய மக்கள் பயன்படுத்தும் வகையில் 2 மற்றும் 3 சக்கர வாகனங்களை முழுக்க முழுக்க இந்தியாவிலேயே தயாரிக்கத் திட்டமிட்டுச் செயல்படுத்தி வருகிறது. இதில் மோட்டரால் இயக்கப்படும் மிதிவண்டிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த மின்சார வாகனங்கள் அனைத்தும், சரக்கு போக்குவரத்து மற்றும் தனியார் வாடிக்கையாளர்களுக்கு என இரு பிரிவுகளுக்கும் ஏற்றவாறு அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. குறைவான வேகம் கொண்ட இந்த இரு சக்கர வாகனத்தை மணிக்கு 45 கி.மீ வேகத்தில் இயக்க முடியும். இதை ஒருமுறை சார்ஜ் செய்தால் 50 முதல் 60 கி.மீ வரை பயணிக்க முடியும். லித்தியம் அயன் பற்றரி கொண்ட இந்த மின்சார இரு சக்கர வாகனங்களை 34 மணி நேரத்தில் முழுமையாக சார்ஜ் செய்துவிட முடியும். நகரங்களில் இருந்து வெளியேறும் நச்சு கலந்த புகையினால் சுற்றுச்சூழல் பாதிப்பு அடையாமல் இருக்கும் வகையில் ஏராளமான எலெக்ட்ரிக் வாகனங்கள் களமிறங்கி உள்ளன. எலெக்ட்ரிக் வாகனங்களின் பயன்பாட்டை அதிகரிக்கும் பொருட்டு அரசாங்கமும் மானியங்களை வழங்கி வருகிறது. தற்போது இதுவரை எலெக்ட்ரிக் பைக் வாங்குவதற்காக ஒதுக்கப்பட்ட பட்ஜெட்டை மூன்று மடங்காக உயர்த்த இருப்பதாக இந்திய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்த நிறுவனத்தின் சொந்த தயாரிப்பான இஸ்கூட்டர்கள், இமோட்டார்பைக்குகள் (EMotorbikes), இரிக்க்ஷாக்கள், இஓட்டோக்கள், இலோடர்கள், இஃபுட்கார்ட்கள் மற்றும் இகுப்பை வாகனங்கள் உள்ளிட்ட பிரிவுகளில் உள்ளன. இதன் மூலம், இந்தியாவில் அதிகரித்து வரும் மின்சார வாகனச் சந்தையில் மற்றொரு அசைக்க முடியாத சக்தியாக இந்த நிறுவனம் அதிரடியாகக் களமிறங்கியுள்ளது.



## இலங்கைக்கு சர்வதேச... 03ஆம் பக்கத் தொடர்

நாம் அந்த முன்மொழிவுகளுக்கு செவிசாய்க்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன், இந்த முன்மொழிவுகள்குறித்து பாராளுமன்றம் முடிவெடுக்க முடியும்.

அரசாங்கங்கள் மற்றும் அரச பொதுக் கொள்கைகளில் ஏற்படும் மாற்றங்கள் சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகளில் நாம் எதிர்கொள்ள வேண்டிய ஒரு அடிப்படை பிரச்சினையாகும். அடுத்த 06 மாதங்களிலும் கண்டிப்பாக சிரமங்களை சந்திக்க நேரிடும்.

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மக்கள் மீது கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதை சர்வதேச நாணய நிதியமும் ஒப்புக்கொள்கிறது.

நாடு முதலில் வெளிநாட்டுக் கடன் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். மேலும், ஆசிய பிராந்தியத்தின் புவிசார் அரசியலில் சிக்கிக் கொள்ளாமல் பயணிக்க வேண்டும்.

நாம் அதிகளவிலான கடன்தொகையை மீள செலுத்த வேண்டியுள்ளது.

ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை, அணுசக்தி பயன்பாடு ஆகிய துறைகள் தொடர்பில் சம்பிரதாய கட்டமைப்பிற்கு வெளியே சிந்திக்க வேண்டும். நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தாமல் நாட்டின் எதிர்காலத்தை சீரமைக்க முடியாது.

தற்போது இலங்கை செய்ய வேண்டிய முதல் பணி இலங்கையின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதாகும்.

1997 ஆம் ஆண்டு ஆசிய நிதி நெருக்கடி மற்றும் 1997 ஆம் ஆண்டு தாய்லாந்து பொருளாதார நெருக்கடியின் போது, இந்த பொருளாதார நெருக்கடிக ளில் இருந்து மீள்வதற்கு சர்வதேச நாணய நிதியம் அவர்களுக்கு வழிகாட்டியது.

அண்மையில் நான் மகாநாயக்க தேரர்களை சந்தித்தபோது, விகாரைகளை மையப்படுத்தி மக்களுக்கு நிவாரணம் வ ழங்குவதற்கு தேரர்கள் ஒப்புக்கொண்டனர்.

சமீப காலமாக உள்ளவர்களுக்கும் இல்லாதவர்களுக்கும் இடையேயான இடைவெளி அதிகரித்து வருகிறது.

கொவிட் மற்றும் எரிபொருள் நெருக்கடி காரணமாக பாடசாலைக் கல்வி தடைபட்டுள்ளது.

அதை விரைவில் இயல்பு நிலைக்கு மீட்டெடுக்க வேண்டும். முதலாவதாக, பொருளாதார ஸ்திரத்தன்மை உருவாக்கப்பட வேண்டும், இரண்டாவதாக, அதன் மூலம் சமூக ஸ்திரத்தன்மையை உருவாக்க முடியும்.

விவசாயம் மற்றும் மீன்பிடித் துறையை நவீனமயமாக்குதல், உற்பத்தியில் புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல், காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் பாதிப்புகளைத் தணித்தல், பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள், மக்களின் வீட்டுத் தேவைகள், கிராமப்புறங்களில் உள்ள வறுமை போன்றவற்றில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

அதிக ஊதியம் பெறும், அதிக உற்பத்தி திறன் கொண்ட போட்டிப் பொருளாதாரத்தை நாம் உருவாக்க வேண்டும்.

பெரிய அளவில் அதிகரித்து வரும் சந்தைகளைக் கொண்ட ஆசிய நாடுகளுடன் வர்த்தக உறவுகளை உருவாக்க வேண்டும். தற்போதைய உலகப் பொருளாதாரச் சூழல் எந்த நாட்டுக்கும் சாதகமாக இல்லை.

தாய்லாந்தின் முன்னாள் வங்கித் தலைவர் கலாநிதி *Veerathai Santiprubhop* அவர்களும் இங்கு கருத்துத் தெரிவிக்கையில், சர்வதேச ஊடகங்களில் காட்டப்படுவது போன்று இலங்கையில் நிதி நெருக்கடி இல்லை என சுட்டிக் காட்டினார்.

தாய்லாந்தின் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு, அரச நிறுவனங்களை தனியார்மயமாக்குதல், மிகவும் பாதிக்கப்படக்கூடிய மக்களைப் பாதுகாத்தல், நிறுவன சீர்திருத்தங்கள், வங்கித் துறையில் நம்பகத்தன்மையை உருவாக்குதல், அமைச்சரவையில் பொருளாதார நிபுணர்களை உள்வாங்குதல், சர்வதேச நாணய நிதியத்துடன் செயற்படுதல், தேவையான சட்ட திருத்தங்கள் மற்றும் வெளிநாட்டு நிபுணர்களின் உதவியைப் பெறுதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டதாக அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களான கலாநிதி ஹர்ஷ டி சில்வா, கபீர் ஹசீம், மயந்த திஸாநாயக்க மற்றும் அட்வகாட்டா நிறுவனத்தின் தலைவர் *Murtaza Jafferjee* உள்ளிட்ட பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர்.



உடப்பு ஸ்ரீருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீபார்த்தசாரதிப் பெருமாள் திரௌபதியம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தில் புதன்கிழமை (3)விநாயகர் ஊர்வலம் ஆரம்பமானது. (படம்: உடப்பு குறூப் நிருபர்)

## கடந்த ஏழு மாதங்களில்... 03ஆம் பக்கத் தொடர்

திணைக்கள வரலாற்றில் அதிக எண்ணிக்கையிலான கடவுச்சீட்டுகள் 2016 இல் விநியோகிக்கப்பட்டுள்ளன.

2016 ஆம் ஆண்டில் 6,58,725 கடவுச்சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. எனவே இந்த ஆண்டின் ஏழு மாதங்களில் 5,90,260 கடவுச்சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டுள்ளமையால், 2016ஆம் வருடத்தின் சாதனை முறியடிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை மத்திய வங்கியின் அண்மைய அறிக்கையின்படி, இந்த ஆண்டின் முதல் பாதியில் 1,40,701 பேர் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களை சென்றுள்ளனர்.

எனினும் 2021ஆம் ஆண்டு முழுவதும் 01 இலட்சத்து 17 ஆயிரத்து 952 பேர் மட்டுமே வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களுக்காக சென்றுள்ளனர்.

## கண்டி பெரஹராவை... 03ஆம் பக்கத் தொடர்

கடத்தப்பட்ட சிறுவன் தலவத்து ஓய, மைலப்பிட்டிய பிரதேசத்தில் வசிப்பவரென விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

சந்தேகநபர் நேற்று முன்தினம் கண்டி தலதா பெரஹராவை பார்வையிட வந்த போது, பெற்றோருக்கு தெரிவிக்காமல் சட்டவிரோதமான முறையில் குழந்தையை அழைத்துச் சென்றுள்ளதாக தெரிய வந்துள்ளது. விளையாட்டு பொருட்களை வாங்கி கொடுப்பதற்காக சிறுவனை கொழும்புக்கு அழைத்து வந்ததாக சந்தேக நபர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். சிறுவனை காணவில்லையென கண்டி பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

## நாளை நள்ளிரவு... 03ஆம் பக்கத் தொடர்

பிரதேச விற்பனையாளர்களுக்கு தொடர்ச்சியாக சமையல் எரிவாயுவை விநியோகித்து வருவதாக தெரிவித்துள்ள அவர், தினமும் ஒரு லட்சத்து 40 ஆயிரம் சமையல் எரிவாயு சிலிண்டர்களை சந்தைக்கு விநியோகிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

## தனியார் பஸ்கள் நேற்று...

பஸ் சங்கம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளது.

இதனால், போக்குவரத்து சபை பஸ்கள் மட்டுமே சேவையில் ஈடுபட்டன. அரச பஸ்கள் போதியளவு சேவையில் ஈடுபடாமையால் மக்கள் அசௌகரியங்களுக்குள்ளாகினர்.

இதனால், அலுவலகங்களுக்கு செல்லும் மக்கள் வீதிகளில் பஸ்களுக்காக காத்திருந்ததை காண முடிந்தது. பலர், பல கிலோ மீற்றருக்கு நடந்து செல்லும் நிலைமை ஏற்பட்டது.

குறைந்தபட்ச பஸ் கட்டணம் 34 ரூபாவாக திருத்தி அமைக்கப்பட்டுள்ளதுது. பஸ் கட்டணத்தை குறைத்தும் எங்களால் நிம்மதியாக பஸ்ஸில் பயணிக்க முடியவில்லையென மக்கள் தெரிவித்தனர்.

அத்துடன், கியூ. ஆர். முறைமூலம் எரிபொருட்கள் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்தும், இதற்கு ஒத்துழைப்பு வழங்கி மக்களின் நலனுக்காக பஸ்களை சேவையில் ஈடுபடுத்தாமை மக்கள் மத்தியில் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

## கூரையை உடைத்துக்கொண்டு...

சுமார் 07 மணியளவில் வீட்டிலிருந்தோர் வெளியேறும் சந்தர்ப்பத்தில், சிறுத்தைப்புலி ஒன்று வீட்டில் புகுந்து கட்டிலுக்கு அடியில் மறைந்திருந்த து. இதனையடுத்து, சிறுத்தைப்புலியின் காலடிகளை பார்த்து டார்ச் லைட் வெளிச்சத்தில் வீட்டினுள் தேடிய போது, திடீரென சிறுத்தை பாய்ந்து தோள் பட்டை, கைகளை தாக்கி காயப்படுத்தியுள்ளது.இதில் கடும் காயங்களுக்குள்ளான நபர் நுவரெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சிறுத்தை புலி தொடர்ந்து வீட்டினுள் இருப்பதாக பொலிஸாருக்கும், வனவிலங்கு திணைக்கள அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டது.

இந்தச் சிறுத்தைப்புலியை மயக்கமுறச்செய்து வீட்டிலிருந்து, வெளியில் எடுக்கப்பட்டுள்ளது.

## இலங்கைக்கு இந்தியா எப்போதும்...

அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது,

ஜனாதிபதி பதவிக்கு ரணில்விக்ரமசிங்க தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது நாட்டின் வளர்ச்சிக்கு உந்து சக்தியாக அமையும் என்பதுடன் அவரது திறமையில் தனக்கு நம்பிக்கை இருப்பதையும் எகிப்து ஜனாதிபதி வெளிப்படுத்தியுள்ளார்.

எதிர்கால சந்ததியினரின் வளமான மற்றும் செழுமையான பொருளாதார மேம்பாட்டுக்கு, இலங்கை ஜனாதிபதியின் அரசியல் முதிர்ச்சி மேலும் வழிகோலும் என்ற இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். .

எகிப்து மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால நட்பு பொதுவான நலன்களை முன்னேற்றுவதற்கும், வளமான எதிர்காலத்தை உறுதி செய்து கொள்வதுடன், இரு நட்பு நாடுகளுக்கும் இடையிலான இரு தரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்த உதவும். நல்வாழ்வுக்காகவும், இலங்கையின் மக்களின் நலன் மற்றும் முன்னேற்றத்திற்காகவும் தனது மனப்பூர்வமான வாழ்த்துக்களை பகிர்ந்து கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைவதாகவும் எகிப்பது ஜனாதிபதி தெரிழவித்துள்ளார்.

## இலங்கையர் 46 பேர்...

எல்லைப் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களே, அவுஸ்ரேலிய கப்பல் மூலம் கொழும்புக்கு அழைத்து வரப்பட்டனர்.

அவுஸ்திரேலிய எல்லைப் படைக் கப்பலில் இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக குடியேறியவர்கள் குழுவொன்று, மீண்டும் இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவுஸ்திரேலிய எல்லைப் படையின் தெற்காசியாவுக்கான பிராந்திய பணிப்பாளர் கொமாண்டர் கிறிஸ் வோட்டர்ஸ், ஆட்கடத்தலை தடுப்பதில் இலங்கை பங்காளிகளுடனான உறவை அவுஸ்திரேலிய அரசாங்கம் உயர்வாக மதிப்பதாக குறிப்பிட்டார்.

இதேவேளை, கடந்த 2013ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதல் சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்குள் பிரவேசிக்க முயற்சித்த அனைவரும் திருப்பியனுப்பப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார் .

## அத்தியாவசிய பொருட்களின்...

பொருட்களின் விலைகள் குறைவடைந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க இதுவரை 600 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட பருப்பு ஒரு கிலோவின் மொத்த விலை தற்போது 400 ரூபாவாக குறைவடைந்துள்ளதாகவும் 330 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட சீனி ஒரு கிலோ தற்போது 270 ரூபாவாக குறைவடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் 1900 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட செத்தல் மிளகாய் ஒரு கிலோ 1300 ரூபாவாகவும் 600 ரூபாவு விற்பனை செய்யப்பட்ட வெள்ளைப்பூடு ஒரு கிலோ 400 ரூபாவாகவும் உருளைக்கிழங்கு ஒரு கிலோ 150 ரூபாவாகவும் பெரிய வெங்காயம் ஒரு கிலோ 135 ரூபாவாகவும் குறைவடைந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கேள்விப் பத்திரம் விடுவிக்கப்படாமல் நேரடியாக இறக்குமதியாளர்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாலேயே இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கான விலை குறைவடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் மொத்த விலைகள் குறைவடைந்திருந்தாலும் சில்லறை வர்த்தகர்கள் மற்றும் சில்லரை வர்த்தக நிலையங்களில் அதன் பயன்கள் நுகர்வோருக்கு வழங்கப்படுவதில்லை என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

## 80 அடி பள்ளத்தில் குடைசாய்ந்து பஸ்....

12 பேர் படுங்காயங்களுக்கு உள்ளாகினர்.

வழுக்கல் தன்மையுடன் வீதியிருந்ததால், சாரதிக்கு பஸ்ஸை கட்டுப்படுத்த முடியாமல் போனது.

இதனால்,இவ்விபத்து நிகழ்ந்தது.

காயமடைந்த 12 பேரும், கொத்மலை வைத்தியசாலையில் ஆரம்ப சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். மேலதிக சிகிச்சைக்காக சிலர்,கம்பளை மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு, சிகிச்சை பெற்று வருவதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

விபத்தில் உயிரிழந்தவர் புஸல்லாவ நவகடதொர பகுதியை சேர்ந்த தம்மிக்க ஹேமந்த யாப்பா (வயது 56) என அடையாளம் காணப்பட்டுள்ளார். விபத்து தொடர்பில் பூண்டுலோயா போக்குவரத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மக்களை நெகிழ்வுறச் செய்த...

என்பவர், வீதியில் கிடந்த ஒரு சிறிய பையை எடுத்துள்ளார். அந்த பையில் பெறுமதியான தங்க நகைகள் காணப்பட்டுள்ளன.

அந்த தங்க நகைகள் சுமார் 06 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியுடையதென தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு கண்டெடுத்த பையை அந்த பொலிஸ் சார்ஜன்ட் மதுரங்குளி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் ஒப்படைத்துள்ளார். கைப் பையிலிருந்த தேசிய அடையாள அட்டையின் தகவலின் படி, தங்க நகைகள் இருந்த கைப் பையின் உரிமையாளர் அடையாளம் காணப்பட்டதுடன், இதுதொடர்பில் அவருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

பின்னர், தங்க நகைகளின் உரிமையாளர் மதுரங்குளி பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டு,அவரது உடமைகள் ஒப்படைக்கப்பட்டன.

## ரஞ்சனுக்கு விரைவில்...

அவர் கூறினார்.

எவ்வாறாயினும், ஜனாதிபதி மன்னிப்பு வழங்குவது நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியின் தனி அதிகாரம் என்பதால், அவருக்கு எப்போது மன்னிப்பு வழங்க முடியுமென கணிக்க முடியாதெனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன்ராமநாயக்கவுக்கு கடந்த ஆண்டு ஜனவரி மாதம் நான்கு ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனை விதித்து உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

ஐந்து வருடங்களுக்கு முன்னர் கடந்த ஆகஸ்ட் மாதம் (21) நீதித்துறைக்கு எதிராக அவதூறான கருத்துக்களை வெளியிட்டமைக்காக முன்னாள் இராஜாங்க அமைச்சருக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. அலரிமாளிகையில் அப்போதைய பிரதமர் விக்கிரமசிங்கவை சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ராமநாயக்க, நாட்டிலுள்ள பெரும்பான்மையான நீதிபதிகள் பக்கச்சார்பான தீர்ப்புகளை வழங்குவதாகவும் அவர்கள் ஊழல்வாதிகள் எனவும் கூறியிருந்தார்.

ஓய்வுபெற்ற விமானப்படை அதிகாரி சுனில் பெரேரா மற்றும் வண. மாகல்கந்தே சுதத்த தேரர் ஆகியோர் உயர் நீதிமன்றத்தில் இரண்டு மனுக்களை தாக்கல் செய்தனர்.

இது போன்ற அவதூறு கருத்துக்கள் பொதுமக்களின் நம்பிக்கையை சிதைத்து, இலங்கை மக்களுக்கு நீதித்துறை பற்றிய ஒரு திரிபுபடுத்தப்பட்ட பிம்பத்தை அளிக்குமென்று குற்றம் சாட்டியிருந்தன ரென்பதும் குறிப்பிடத்தக்கது.

## அத்தியாவசிய சேவைகளுக்கு எரிபொருள்...

பொருளாதார நெருக்கடி நிலையால்,மக்களுக்கு எரிபொருள், மின்சாரம், உணவுப் பொருட்கள் மற்றும் மருந்துப் பொருட்கள் உள்ளிட்ட பொருட்களின் விநியோக சேவைகளை தொடர்ந்து தடையின்றி முன்னெடுக்கும் வகையில் நீண்ட கால மற்றும் குறுகிய கால வேலைத் திட்டம் ஒன்றை தயாரித்து நடைமுறைப்படுத்துமாறு அரசாங்கத்திற்கு உத்தரவு பிறப்பிக்கக் கோரியே மேற்படி அடிப்படை உரிமை மனுக்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இந்த மனு மீதான விசாரணை நீதிபதிகளான விஜித் மலல்கொட, அர்ஜுன ஒபேசேகர ஆகிய உச்ச நீதிமன்ற நீதிபதிகள் குழாம் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன் போது நீதிமன்றத்திற்கு கருத்து தெரிவித்த மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் தெரின் புள்ளே, எரிபொருள் விநியோகம் தொடர்பில் சட்டத்தரணிகள் சங்கத்தினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள யோசனைகளில், பெருமளவு தற்போது நடைமுறைப்படுத்தப்படுவதாக குறிப்பிட்டார்.

இதன் போது நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த சட்டத்தரணிகள் சங்கத்தின் பிரதிநிதிகள் இலங்கை போக்குவரத்து சபை மூலம் எரிபொருள் விநியோகிப்பதை தொடர்ச்சியாக முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர்.

மேற்படி, அடிப்படை உரிமை மனுக்கள் மீதான அடுத்த விசாரணை எதிர்வரும் ஆகஸ்ட் (31) ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## நாயை அடித்துக் கொன்ற...

கால்களையும் கைக்கோடாரியால் துண்டித்து, நாயின் முகத்தை மரக்கட்டை ஒன்றின் மீது வைத்து கைக்கோடாரியால் கொத்தி முகத்தை சிதைத்து படுகொலை செய்துள்ளனர். தமது கொடூரமான செயலை காணொளியாக பதிவு செய்து அதனை சமூக வலைத்தளங்களில் பகிர்ந்துமுள்ளனர். இந்த சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதனடிப்படையில் சம்பவத்தை காணொளி எடுத்தவர், அதனை சமூக வலைத்தளங்களில் பதிவிட்டவர் மற்றும் அதற்கு உடந்தையாக இருந்தவர்கள் எனும் குற்றத்தில் இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதேவேளை சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் தலைமறைவாகியுள்ளதாகவும் , அவரை கைது செய்வதற்கான நடவடிக்கையை முன்னெடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## போராட்ட இளைஞர்களுடன் இணைந்து...

அந்தப் பொருளாதாரப் போராட்டத்தின் வெற்றிக்கு போராட்டக் களத்தில் உள்ள அனைத்து இளைஞர், யுவதிகளையும் சகல வழிகளிலும் பங்கேற்கச் செய்ய தாம் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் காலி முகத்திடல் ஆர்ப்பாட்டத்தின் பல தரப்பினருக்கும் இடையில் இன்று (05) ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

ஜனநாயக விரோத அரசியலையும் வன்முறையையும் தாம் எதிர்ப்பதாகவும், ஒடுக்குமுறைக்காகவே செயற்படுபவர்கள், பல்கலைக் கழக செயற்பாட்டின் ஊடாக பகிடிவதையை நிறுத்தி சிறந்த சமூக ஜனநாயகத்துக்காக முன்வர வேண்டும் எனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

இன்று, நமது பல்கலைக்கழகக் கட்டமைப்பு சீர்குலைந்து இருப்பதற்கு முக்கியக் காரணங்களில் ஒன்று பகிடிவதை ஆகும். வேலைநிறுத்தங்கள் எல்லா காலத்திலும் தொடர்ந்தன.

வேலைநிறுத்தங்கள் மூலம் ஒரு நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியாது என்றும், பேச்சுவார்த்தை மூலம் மத்தியஸ்த நிலைக்கு வந்து கோரிக்கைகளை பெற்றுக்கொள்வதைப் போன்று, நாட்டுக்காக செய்ய வேண்டிய பணிகளை நிறைவேற்ற வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அனைத்து ஆர்ப்பாட்டக்காரர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதான குழுவொன்றை உருவாக்குமாறு கூறிய ஜனாதிபதி, அக்குழுவிற்கு அனைத்து மதங்களின் பிரதிநிதித்துவம் மற்றும் பெண்களின் பிரதிநிதித்துவம் அவசியமானது எனவும் குறிப்பிட்டார்.

இளைஞர்களின் தேவைகளுக்காக அரச அனுசரணையுடன் செயற்படுத்துவதற்கு, கொழும்பு கோட்டை மிதக்கும் சந்தை மற்றும் பல்வேறு இடங்களை முன்மொழிய தான் விரும்புவதாகத் தெரிவித்த அவர், அது தொடர்பில் முறையான ஆலோசனைகளை பெரும்பான்மையான ஆர்ப்பாட்டக்காரர்களின் பங்களிப்புடன் தயாரித்து கையளிக்குமாறும் தெரிவித்தார்.

அந்தச் செயற்பாட்டில், கல்விக்கான நூலகங்கள், அரசியல் கல்விக்கான வசதிகள், இசை, கலை, நாடகம் போன்ற இளைஞர்களின் திறன்கள் மற்றும் தேவைகளை பூர்த்தி செய்யும் ஒரு மத்திய நிலையமாக அது உருவாக்கப்பட வேண்டுமென்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அவசரகால நிலையை முடிந்தவரை விரைவில் நீக்குவது நாட்டின் பொருளாதார மற்றும் சமூக ஸ்திரத்தன்மைக்கு முக்கியமாகும். தற்போதுள்ள நிலைமைகள் காரணமாக நாட்டின் நிர்வாகத்திலும் அதன் தாக்கம் இருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

தற்போது LGBT சமூகம் தொடர்பில் அவசரகாலச் சட்டம் காரணமாக பிரச்சினைக்குரிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக தமக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அதனை நீக்குவதற்கு தேவையான சட்டப் பின்னணியை தயார் செய்யுமாறு சட்டமா அதிபருக்கு அறிவித்துள்ளதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

மேலும், பொதுமக்கள் சபைகளை ஸ்தாபிப்பது தொடர்பில் ஏற்கனவே பல தரப்பினரிடமிருந்து முன்மொழிவுகள் தமக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய அவர், அடுத்த வாரம் குறித்த வேலைத்திட்டம் தொடர்பில் உரிய தரப்பினருடன் கலந்துரையாடவுள்ளதாக தெரிவித்தார்.

ஆர்ப்பாட்டக்காரர்களை பிரதிநிதித்துவப்படுத்தி வருகை தந்தவர்களின் கோரிக்கையானது, அமைதியான பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஆர்ப்பாட்டக்காரர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களை சட்ட விரோதமாகவோ அல்லது தன்னிச்சையாகவோ கைது செய்வதைத் தடுத்து நிறுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்பதாக இருந்தது.

தற்போது எந்த தவறும் செய்யாது களத்தில் இருக்கின்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் பலர் கைது செய்யப்படுவதால், அங்கிருந்து வெளியே செல்ல பயப்படுவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

இப்போராட்டத்தின் மிகவும் கடினமான பகுதி தற்போது ஆரம்பமாகியுள்ளதாக குறிப்பிட்டுள்ள ஆர்ப்பாட்டக்காரர்கள், நாட்டின் ஒட்டுமொத்த மக்களின் சிந்தனைகளிலும் புரட்சி ஏற்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

இளம் தலைமுறையினர் எல்லையற்ற அர்ப்பணிப்புடன் நாட்டிற்கு பெரும் நம்பிக்கையை ஏற்படுத்தவே இந்தப் போராட்டத்தை முன்னெடுத்ததாகவும், அரசியலமைப்பு ரீதியில் சாதகமான பலனைப் பெறுவதே தமது எதிர்பார்ப்பு எனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் சுட்டிக்காட்டி னர். கல்வி சீர்திருத்தங்கள் மற்றும் சமூக சீர்திருத்தங்கள் உட்பட நாட்டை முறையான மற்றும் ஸ்திரமான நிலைக்கு கொண்டு வர விரைவான சீர்திருத்த செயல்முறையை நிறுவ வேண்டும் என்றும் அவர்கள் பரிந்துரைத்தனர்.

நாட்டின் முன்னேற்றத்தை விரும்புவோரின் ஆர்ப்பாட்டத்தின் முன்னேற்றம் கலந்துரையாடல் மற்றும் பேச்சுவார்த்தை மூலம் செய்துகொள்ளப்படுகின்ற இணக்கப்பாடுகளில் அடங்கியுள்ளதாகவும், அதற்காக ஜனநாயக நடவடிக்கைகள் பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியிலும் மேற்கொள்ளப்படும் என நம்புவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

போராட்டத்தின் மூலம் நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் பல பெரிய வெற்றிகளை இளைஞர்கள் பெற்றுத் தந்தமை, தங்களது தலைமுறையின் தனிச்சிறப்பு என போராட்டக்காரர்கள் தெரிவித்தனர். உலகம் முழுவதும் ஜனநாயகத்தைப் போற்றும் மக்களால் இந்தப் போராட்டம் மதிக்கப்படுதாகவும், அதன் காரணமாகவே நமது நாடு உலகின் கவனத்தைப் பெற்றதாகவும் அவர்கள் கூறினர். ரல்

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2022 ஓகஸ்ட் 6
சனிக்கிழமை

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள்

# பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வு வழங்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்

## ஜனாதிபதியிடம் அங்கஜன் எம்பி வலியுறுத்து

*சாவகச்சேரி விஷேட நிருபர்*

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு உடனடித் தீர்வு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குமிடையிலான முக்கிய சந்திப்பொன்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற போதே சுதந்திர கட்சியின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் இதனை வலியுறுத்தினார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்;

காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள் நீண்ட காலமாக ஓர் தீர்வுத்திட்டமின்றி சிரமப்படுகின்றனர்.



அவர்களுக்கு வீட்டு வசதி, வேலைவாய்ப்பு, உயர் கல்வி போன்ற நிலையான சிறந்த உதவித் திட்டங்களை விரைந்து வழங்கி அவர்களை மீட்டெடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் வடக்கு,கிழக்கு மாகாணங்களுக்கான பொருளாதார மறுமலர்ச்சியை ஏற்படுத்தி வறுமை ஒழிப்பை ஏற்படுத்தும் முகமாக ஜனாதிபதி செயலணி ஒன்றை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள வடமாகாணத்தின் முக்கிய தொழிற்துறைகளான கே.கே.எஸ் சீமெந்து தொழிற்சாலை, பரந்தன் இரசாயன தொழிற்சாலை, ஒட்டிசுட்டான் கூரை ஓட்டுத் தொழிற்சாலை மற்றும் ஆனையிறவு உப்பளம் ஆகியவற்றை மீள ஆரம்பித்து நாட்டின் உற்பத்தித் திறனை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென மேலும் அவர் ஜனாதிபதியிடம் கோரியிருந்தார்.

ஜனாதிபதியுடனான சந்திப்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட கட்சியின் பிரமுகர்கள் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழிலிருந்து கதிர்காமம் நோக்கி சைக்கிள் பயணம்



*யாழ்.விசேட நிருபர்*

யாழ்ப்பாணத்தில் இருந்து கதிர்காமம் நோக்கி இரு இளைஞர்கள் துவிச்சக்கர வண்டி பயணத்தினை ஆரம்பித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் கோட்டை முனியப்பர் ஆலய முன்றலில் இருந்து நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை காலை தமது பயணத்தினை ஆரம்பித்துள்ளனர். யாழ்ப்பாணம் தொல்புரம் பகுதியை சேர்ந்த குகநாதன் நிதுசன் (வயது 24) மற்றும் பாஸ்கரன் சுமித்தன் (வயது 22) ஆகிய இரு இளைஞர்களுமே தமது பயணத்தை ஆரம்பித்துள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, எரிபொருள் தட்டுப்பாடு இவற்றுக்கு மத்தியில் உடல் ஆரோக்கியத்தை பேண துவிச்சக்கர வண்டி ஓட்டுவது சிறந்ததாகும். அதனை மக்கள் மத்தியில் விழிப்புணர்வாக ஏற்படுத்தும் நோக்குடனேயே தாம் துவிச்சக்கர வண்டியில் கதிர்காமம் நோக்கி பயணிப்பதாக தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை

# கொவிட் தடுப்புமருந்தேற்றும் நடவடிக்கைகள் முன்னெடுப்பு

*கிளிநொச்சி குறூப் நிருபர்*

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் புதன் மற்றும் சனிக்கிழமைகளில் கொவிட் 19 தடுப்புமருந்தேற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட வைத்தியசாலை நிர்வாகம் பொது மக்களுக்கு அறிவித்துள்ளது.

தற்போது மீண்டும் அதிகரித்து வருகின்ற கொவிட்19 தொற்று காரணமாக இரு தினங்களிலும் காலை 8 மணி முதல் பிற்பகல் இரண்டு மணி வரை தடுப்பூசியினை பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளாத பொது மக்கள் மூன்றாவது மற்றும் நான்காவது தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் மாவட்ட வைத்தியசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது.

# தலைமன்னார் பாடசாலைக்கு 9 இலட்சம் ரூபாய் செலவில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி

*தலைமன்னார் விஷேட நிருபர்*

சுமார் 25 வருடங்களுக்கு மேலாக தலைமன்னார் பாடசாலை ஒன்றில் குடிநீருக்கு தவித்துக் கொண்டிருந்த மாணவர்களுக்கு மன்னார் றோட்டரி கழகம் குடிநீர் பெறுவதற்கான வசதிகளை வசதிகளை செய்து கொடுத்துள்ளது.



நீண்ட காலம் குடிநீர் வசதி இல்லாமல் இருந்த தலைமன்னார் பியர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கு 9 லட்சம் ரூபா செலவில் மன்னார் றோட்டரி கழகத்தின் ஏற்பாட்டில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டது

தலைமன்னார் பியர் பாடசாலையில் 450 அதிகமான மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். 25 வருடங்களுக்கு மேலாக தூய குடிநீர் வசதிகள் இன்றி ஆசிரியர்கள் மாணவர்களும் பாரிய சிரமங்களை எதிர் கொண்டு வந்தனர்.

இவர்கள் குடிப்பதற்காக பக்கத்து மருத்துவமனையில் இருந்து குடிநீர் பெற்று வந்தனர். இதை அறிந்த மன்னார் றோட்டரி கழக நிர்வாகத்தினர் மற்றும் அதன் மன்னார் மாவட்ட தலைவர் றொபின் ஜெயரூபன் தலைமையில் தலைமன்னார் பியர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து கொடுப்பது என்று முடிவு எடுக்கப்பட்டது

அதன் அடிப்படையில் பாடசாலை அதிபர், ஆசிரியர் மாணவர்களின் ஒத்துழைப்போடு கடந்த மாதம் ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டம் நிறைவு பெற்று வியாழக்கிழமை (4) குடிநீர் திட்டம் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டு பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டது

# மன்னாரில் அதிகரிக்கும் கொரோனா தொற்று

*தலைமன்னார் நிருபர்*

மன்னாரிலும் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் பூஸ்டர் தடுப்பூசியை இதுவரைக்கும் பெற்றுக்கொள்ளாதவர்கள் பெற்றுக் கொள்ளுமாறு மன்னார் மாவட்ட தொற்றுநோய் விஞ்ஞான பிரிவு வைத்திய கலாநிதி கதிர்காமநாதன் சுதாகர் இவ்வாறு தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட தொற்றுநோய் விஞ்ஞான பிரிவு வைத்திய கலாநிதி கதிர்காமநாதன் சுதாகர் இதுதொடர்பில் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் தற்பொழுது இம்மாதத் தொடக்கத்திலிருந்து நாளாந்தம் சுமார் பத்து கொரோனா தொற்றாளர்கள் இனம் காணப்பட்டு வருகின்றனர். மன்னாரில் நானாட்டான் முசலி பிரதேச பிரிவுகளில் அதிகமாக அடையாளம் காணப்பட்டு வந்த தொற்றாளர்கள் தற்போது மன்னாரில் பரவலாக அனைத்து பிரதேச செயலக பிரிவுகளிலும் காணப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

ஆகவே பூஸ்டர் மருந்து பெற்றுக்கொள்ளாதவர்கள் தற்பொழுது அவற்றை பெற்றுக்கொள்ளும் படி யாவருக்கும் அறிவுறுத்தப்பட்டு வருகின்றது.

தற்பொழுது உருவாகியிருக்கும் தொற்று நோயால் பெரும்பாலும் மரணம் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் குறைவாக காணப்படுகின்ற போதும் நோயின் வேகத்தை குறைப்பதற்காகவே பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக் கொள்ளும்படி வேண்டப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் சகல சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளிலும் ஒவ்வொரு சனிக்கிழமைகளில் வழங்கப்படுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இது தொடர்பாக அந்தந்த பகுதி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் கேட்டு அறிந்து கொள்ளும்படியும் பொது மக்கள் வேண்டப்பட்டுள்ளனர்.

அத்துடன் பொது இடங்களில் ஒன்றுகூடும்போதும் பிரயாணங்கள் செய்யும்போதும் கட்டாயம் ஒவ்வொருவரும் முகக்கவசம் அணிந்திருப்பது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட தொற்றுநோய் விஞ்ஞான பிரிவு வைத்திய கலாநிதி கதிர்காமநாதன் சுதாகர் இவ்வாறு மேலும் தெரிவித்தார்.



யாழ்.வரலாற்றுச்சிறப்பு மிக்க வண்ணையம்பதி ஸ்ரீ வேங்கடவரதராஜப்பெருமாள் ஆலயத்தில் ஸ்ரீ வரமஹாலட்சுமி உற்சவம் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை காலை சிறப்பாக இடம்பெற்றது. படம்: யாழ். விசேட நிருபர்

# ஈஸ்டர் குண்டு தாக்குதலின் போது கைது செய்யப்பட்ட இருவர் விடுதலை

*மன்னார் குறூப் நிருபர்*

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலின் போது கைது செய்யப்பட்ட இருவர் அவ்வழக்கிலிருந்து மன்னார் நீதிமன்றத்தால் முழுமையாக விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் பள்ளிமுனை பகுதியை சேர்ந்த நபர் ஒருவரும் தள்ளாடி இராணுவ முகாம் முன்னாள் இராணுவ அதிகாரி ஒருவருமாக இருவர் பயங்கரவாத தடைச்சட்டத்தில் கைது செய்யப்பட்டிருந்தனர்.

தனது உடமையில் பீரங்கிக்கு பயன்படுத்தும் திரியை வைத்திருந்தார் என்ற அடிப்படையில் பள்ளிமுனையை சேர்ந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

அவரிடம் பெறப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையில் அவருக்கு பீரங்கி திரியை வழங்கிய குற்றசாட்டில் தள்ளாடி இராணுவ முகாமை சேர்ந்த முன்னாள் இராணுவ வீரர் ஒருவரும் கடந்த 2019 ஆண்டு பயங்கரவாத தடைச்சட்டத்தில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் இருவரையும் விடுவிக்க கோரி அல்லது பொலிஸார் ஊடாக பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நீக்கக் கோரி சட்டத்தரணி எஸ்.டினேசன் கடந்த இரண்டு வருடங்களாக வாதாடிவந்தார். எனினும் நீண்ட காலமாக அவர்களுக்கு பிணை நிராகரிக்கப்பட்டு இருந்ததுடன் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனை பெற்று அவர்களை விடுவிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் சட்டத்தரணி எஸ். டினேசன் ஊடாக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு பல முறை நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்ததோடு நேரடியாகவும் சட்டமா அதிபர் திணைக்களத்தில் ஆலோசனை கோரப்பட்டிருந்தது.

இருப்பினும் வழக்கு காலம் தாழ்த்தப்பட்டு இலங்கை உயர் நீதிமன்றத்தில் மனித உரிமை மீறல் வழக்கு தாக்கல் செய்ய தயார் நிலையில் இருந்த பொழுது இவ்வழக்கு தொடர்பான விபரங்களை பரிசீலித்த சட்டமா அதிபர் திணைக்களம் இருவரையும் விடுவிப்பதற்கான கடிதத்தை மன்னார் நீதவான் நீதிமன்றத்திற்கு நேற்றைய தினம்(4) வியாழக்கிழமை அனுப்பி வைத்திருந்தது. அதற்கமைய அவர்கள் விடுதலை செய்யப்பட்டிருந்தனர்.

# மருமகன் தாக்கியதில் மாமியார் படுகாயம்

*சாவகச்சேரி விசேட நிருபர்*

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மீசாலை கிழக்குப்பகுதியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மருமகனின் தாக்குதலுக்கு இலக்கான மாமியார் மற்றும் மைத்துனர் ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காணித் தகராறு காரணமாக 46 வயதான மாமியார் மற்றும் 14 வயதான மைத்துனர் ஆகியோரை சந்தேக நபர் கடுமையாக தாக்கியுள்ளார். இதில் மாமியார் தலையில் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். தாக்குதல் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# வவுனியாவில் யானை தாக்கி முதியவர் பலி



வவுனியா, சேமமடு கிராமத்தில் யானை தாக்கி முதியவர் ஒருவர் நேற்று (05.08) உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். வவுனியா, சேமமடு பகுதியில் வசிக்கும் 68 வயதுடைய முதியவர் ஒருவர் காட்டில் தேன் எடுப்பதற்காகச் சென்றுள்ளார். இதன் போது, காடு நோக்கி சைக்கிளில் சென்றுகொண்டிருந்த போது வீதியின் குறுக்கே நின்ற யானை அவரை தாக்கியுள்ளது. சம்பவ இடத்திலேயே முதியவர் மரணமடைந்துள்ளார். வீதியால் சென்றவர்கள் அதனை அவதானித்து பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளதுடன், இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

படம்: வவுனியா விசேட நிருபர்

# வவுனியா வீரபுரத்தில் இருவருக்கிடையே மோதல்

## காது துண்டான நிலையில் வைத்தியசாலையில் ஒருவர் அனுமதி

*வவுனியா விசேட நிருபர்*

வவுனியா, வீரபுரம், சின்னத்தன்பனை பகுதியில் இரு தரப்பினருக்கிடையில் ஏற்பட்ட மோதலில் இளைஞன் ஒருவர் காதை கடித்து குதறியமையினால் படுகாயமடைந்த நபர் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் (04.08) இரவு 7.30 மணியளவில் வீதியில் சென்ற சமயத்தில் இரு தரப்பினருக்குமிடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. வாய்தர்க்கம் மோதலாக மாறியதில் வாள்வெட்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அதில் ஒர் இளைஞன் மோதலில் ஈடுபட்ட நபர் ஒருவரின் காதை கடித்து துண்டாக்கியுள்ளார். தலையில் வாள்வெட்டு காயம் மற்றும் காது துண்டாக்கப்பட்ட நிலையில் 45 வயதுடைய நபரொருவர் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை செட்டிக்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# மலைச்சாரல்

## பூண்டுலோயாவில் பஸ் விபத்து





(ஹற்றன் சுழற்சி,ஹற்றன் விசேட நிருபர்கள்)

பூண்டுலோயாவிலிருந்து கம்பளை நகரை நோக்கி பயணித்த தனியார் பஸ் ஒன்று நேற்று மாலை பூண்டுலோயா கொத்மலை பிரதான வீதியில் மல்லாவ பகுதியில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ்விபத்தில் பஸ்ஸில் பயணித்த 14 பேரில் ஒருவர் உயிரிழந்ததுடன், 12 பேர் படு காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

## மண்சரிவு அபாயம்

தலவாக்கலை குறூப் நிருபர்




நுவரெலியா மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் கடும் மழை காரணமாக நுவரெலியா ஹற்றன் வீதியில் நேற்று (05) நானுஓயா விண்டிகோனர் பகுதியில் மண் மேடுகள் மற்றும் மரம் ஒன்று சரிந்து வீழ்ந்தமையினால் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரஞ்சித் அழககோன், பொலிஸ், இராணுவம் மற்றும் நுவரெலியா வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஆகியன இணைந்து அப்பகுதியில் வீழ்ந்த மண்மேடுகளையும் மரத்தை வெட்டி அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுத்ததாக தெரிவித்தார். கனமழை மற்றும் பலத்த காற்று காரணமாக நுவரெலியா நகரம் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் அதிகளவான மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளதாகவும், இது தொடர்பில் மக்கள் அவதானமாக இருக்குமாறும் சாரதிகள் மரங்களுக்கு அடியில் வாகனங்களை நிறுத்துவதை தவிர்க்குமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## தலவாக்கலை புனித பத்திரிசியார் கல்லூரியில் மண்சரிவு – கட்டடங்கள் சேதம்



ஹற்றன் சுழற்சி நிருபர்)

மலையக பகுதிகளில் தொடர்ச்சியாக பெய்து வரும் அடை மழை காரணமாக பல பகுதிகள் வெள்ள நீராலும், மண்சரிவாலும் பாதிக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் தலவாக்கலை பகுதியில் பெய்து வந்த அடை மழை காரணமாக நுவரெலியா கல்வி வலயத்துக்குட்பட்ட தலவாக்கலை புனித பத்திரிசியார் கல்லூரிக்கு அருகாமையில் அமைந்துள்ள மண்மேடு சரிந்து வீழ்ந்துள்ளது.

இதன்போது, பாடசாலைக்கான வாகன தரிப்பிடம், நீர் தாங்கி என்பன முற்றாக சேதமடைந்துள்ளது. மேலும் வாகன தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்படிருந்த கார் ஒன்றும் பகுதியளவு சேதமடைந்துள்ளது.

மேலும் மண்சரிவு ஏற்படும் அபாயம் இப்பகுதியில் இருப்பதனால் அருகாமையில் உள்ள வகுப்பறையில் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

கடும் மழை காரணமாக பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளதால் பாதிப்பை தவிர்த்துக்கொள்ள கூடியதாக இருந்ததாக பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.

கல்வி நடவடிக்கைகளை முன்னெடுத்து செல்வது தொடர்பில் இறுதி தீர்மானம் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அதிபர் மேலும் தெரிவித்தார்.

## கெட்டபுலா அக்கரவத்தை தோட்டத்தில் பாலம் அமைத்தல் தொடர்பில் விசேட கலந்துரையாடல்

தலவாக்கலை குறூப் நிருபர்

நாவலப்பிட்டி கெட்டபுலா பிரிவிலிருந்து அக்கரவத்தை தோட்டத்திற்கு பாலம் அமைக்கப்படாமை குறித்து நுவரெலியா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் கேள்வியெழுப்பப்பட்டது. இச்சந்திப்பு மாவட்ட செயலாளர் நந்தன கலபடவின் உத்தியோகபூர்வ காரியாலயத்தில் இடம்பெற்றது. இச்சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜீவன் தொண்டமான், மருதபாண்டி ராமேஸ்வரன், இ.தொ.கா தேசிய அமைப்பாளர் எ.பி.சக்திவேல், பிரதேச சபைகளின் தவிசாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர் விதுர சம்பத், இடர் முகாமைத்துவ பிரதி பணிப்பாளர் ரஞ்சித் அலககோன் உட்பட கெட்டபுலா அக்கரவத்தை தோட்ட மக்கள் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இதுதொடர்பில் நுவரெலியா மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர் மற்றும் மாவட்ட இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் ஆகியவற்றின் கவனத்திற்கு நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொது செயலாளருமான ஜீவன் தொண்டமான் கொண்டுவந்துள்ளார்.



இதன்போது பாலத்தை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார். இச்சந்திப்பில் கலந்து கொண்ட மக்கள் பிரதிநிதிகள் கருத்து தெரிவிக்கையில், கெட்டபுலா கீழ் பிரிவிலிருந்து அக்கரவத்தை தோட்டத்திற்கு பிரதான ஆறு ஒன்றை கடந்தே மக்கள் நீண்டகாலமாக பயணித்து வருவதாக சுட்டிக்காட்டினர். இதுதொடர்பில் நீண்ட நாட்களுக்கு முன்னர் ஆற்றை கடந்து செல்ல பாதுகாப்பான பாலமொன்றை நிர்மாணித்து தருமாறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் பாலம் ஒன்றை அமைப்பதற்காக அங்கு கடந்த காலங்களில் அடிக்கல் நாட்டப்பட்டன. எனினும் நிர்மாணபணிகள் முன்னெடுக்கப்படவில்லை.

இப்பிரதேசத்தில் சீரற்ற காலநிலை காலங்களில் வெள்ளம் பாயும்.

ஆனால், அக்கரவத்தை மக்கள் ஆற்றை கடந்து தமது தோட்டத்திற்கு செல்ல வேண்டியுள்ளதால் உயிரை கையில் பிடித்து கொண்டே அங்கு இடப்பட்டிருந்த கயிறு ஒன்றின் உதவியுடன் ஆற்றை கடப்பது வழமை.

இவ்வாறான சூழ்நிலையிலேயே கடந்த முதலாம் திகதி மாலை பெய்த கடும் மழையில் தொழிலுக்கு சென்று ஆற்றை கடந்து தோட்டத்திற்கு செல்ல முற்பட்ட மூவர் ஆற்றில் திடீரென பெருக்கெடுத்த வெள்ள நீரில் அடித்து செல்லப்பட்டு உயிரிழந்ததாக அவர்கள் தெரிவித்தனர். அக்கரவத்தை மக்களின் கோரிக்கை ஏற்று அங்கு பாலம் ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால், இந்த உயிர்கள் பறிபோயிருக்காது என மாவட்ட செயலாளருக்கு பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதனையடுத்து நுவரெலியா மாவட்டத்தில் பெருந்தோட்ட பகுதிகளில் மக்கள் குடியிருப்புகளுக்கு அருகிலும், பிரதான மின் கம்பிகளுக்கு இடையிலும் காணப்படும் பாரிய மரங்களை அவ்வப்பகுதி கிராம சேவை அதிகாரிகள் ஊடாக அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட செயலாளர் உறுதியளித்தார்.

மேலும் வடிகால் அமைப்புகள் மற்றும் சிறுபாலங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தி அபிவிருத்திகளை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட செயலாளர் உறுதியளித்தார்.

### கெட்டப்புலா அக்கரவத்தை தோட்டம்

## காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு காவத்த பெருந்தோட்ட கம்பனியால் நிதியுதவி





நாவலப்பிட்டிசுழற்சி நிருபர்

நாவலப்பிட்டி கெட்டப்புலா அக்கரவத்தை தோட்டத்தில் மூன்று பேர் ஆற்றுநீரில் அடித்து செல்லப்பட்டுள்ளனர். இந்நிலையில் காவத்த பெருந்தோட்ட கம்பனி நிர்வாகம் மூன்று குடும்பத்தினருக்கும் நஷ்ட ஈடாக ஒருசிறுதொகையை வழங்கியுள்ளது. இதன் போது தோட்டத்தொழிலுக்கு சென்றிருந்த 3 பிள்ளைகளின் தாயான 45 வயதான ஜெயலெட்சுமி, 3 பிள்ளைகளின் தந்தையான 52 வயதான சத்தியசீலன் மற்றும் 3 பிள்ளைகளின் தந்தையான 56 வயதான சந்திரமோகன் ஆகியோர் நீரில் அடித்துசெல்லப்பட்டு காணாமல் போயிருந்தனர். உயிரிழந்த சத்தியசீலன் குடும்பத்திற்கு 75,000/=, சந்திரமோகன் குடும்பத்திற்கு 75,000/=, ஜெயலெட்சுமி குடும்பத்திற்கு 50,000/= வீதம் கம்பனியின் பிரதிபொது முகாமையாளர் சமிந்த டி சில்வா மற்றும் பெருந்தோட் இயக்குனர் சமிந்த குணரத்ன வழங்கியுள்ளனர்.

## உக்குவளை பிரதேசங்களில் மண்சரிவு அபாயம்

தம்புள்ள தினகரன் நிருபர்

தற்போது நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக மாத்தளை உக்குவளை பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு அனர்த்த அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மாத்தளை மாவட்டத்தின் உக்குவளை பிரதேச செயலகப் பிரிவு அனர்த்த ஆபத்து மிகுந்த வலயமாகப் பிரகடனப் படுத்தியிருப்பதாக தேசிய கட்டட ஆராய்ச்சி மையத்தின் மாத்தளை மாவட்ட பிரதானியும் புவியியலாளருமான சமிந்த மொறேமட தெரிவித்தார். கற்பாறைகள் உருண்டு விழுதல் மற்றும் மண்சரிவு முதலான அவதானம் மிகுந்த பிரதேசமாக இறத்தோட்டைப் பிரதேசத்தின் ஐந்து பிரிவுகளுக்கு இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை நக்கிள்ஸ் மலை உச்சியில் கடும் பனி நிலவுகின்றது. நக்கிள்ஸ் இழுக்கும்புர பிரதான வீதியில் தொடர்ந்து பனிமூட்டம் நிலவி வருவதாகவும் இதனால் இவ்வீதியில் பயணிக்கும் வாகனங்கள் எவ்வேளையிலும் சறுக்கக் கூடிய ஆபத்து காணப்படுவதாகவும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதனால் நக்கிள்ஸ் மற்றும் பிட்டவலபத்தன பிரதேசங்களைப் பார்வையிடுவதற்கு செல்லும் சுற்றுலாப் பயணிகள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டுமெனவும் பிரதேச சுற்றுச் சூழல் அமைப்புக்கள் சுட்டிக்காட்டி வருகின்றன.




இலங்கை வங்கி தனது 83 ஆவது ஆண்டு விழாவினை முன்னிட்டு நுவரெலியா கிளையின் முகாமையாளர் எம்.ராமன் தலைமையில் விசேட நிகழ்வுகள் இடம்பெற்றன. இதன்போது சர்வமத பிரார்த்தனைகள் நடைபெற்று கேக் வெட்டி கொண்டாடப்பட்டதுடன், விவசாய மற்றும் வீடமைப்பு கடன் உதவிகள் பயனாளிகள் சிலருக்கு வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் நுவரெலியா இலங்கை வங்கி கிளையின் முகாமையாளர் எம்.ராமன், அதன் பகுதி முகாமையாளர் பி.விஸ்வநாதன், நுவரெலியா பிரதேச செயலாளர் விதுர சம்பத், நுவரெலியா மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் உடுகம சூரிய, நுவரெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரேமலால் மற்றும் நுவரெலியா இலங்கை வங்கி கிளையின் உத்தியோகத்தர்கள் உட்பட பல முக்கியஸ்தர்கள் கலந்துக்கொண்டனர்.

படம் தலவாக்கலை குறூப் நிருபர்

## தலைமறைவான கைதிகளை தேடி பொலிஸ் விசாரணை தீவிரம்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

எம்பிலிப்பிட்டி நீதிமன்ற வளவிலிருந்து கைவிலங்குடன் கைதிகள் இருவர் தப்பிச் சென்ற சம்பவத்தில் சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகளின் ஒத்துழைப்பு கிடைத்துள்ளதா? எனத்தீவிர விசாரணை இடம்பெற்று வருவதாக எம்பிலிப்பிட்டிய பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவ்விரு கைதிகளும் நேற்று முன்தினம் நீதிமன்ற விசாரணைகள் முடிந்ததும் நீதிமன்ற வளவில் நிறுத்தப்பட்டிருந்த சிறைச்சாலை பஸ்வண்டியில் ஏற்றுவதற்கு அதிகாரிகளால் அழைத்துவரப்பட்ட போது கண்ணிமைக்கும் நேரத்தில் கைவிலங்குகளுடன் வீதியில் நிறுத்தப்பட்டிருந்த வாகனம் ஒன்றில் ஏறி தப்பிச்சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கூட்டுப்பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் போதைப் பொருள் வைத்திருத்தல் ஆகிய குற்றச்சாட்டுகளின் பேரில் கைதுசெய்யப்பட்டிருந்த 28 மற்றும் 29 வயதுகளையுடைய இருவரே இவ்வாறு தப்பிச்சென்றுள்ளனர். இவர்கள் இருவரும் தப்பிச்செல்கையில் பாதுகாப்பு வழங்கிய அதிகாரிகள் கையில் துப்பாக்கிகளை வைத்திருக்காமை தொடர்பில் விசாரணை இடம்பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். இவர்கள் தொடர்பான தகவல்களை வழங்குமாறு பொலிஸார் பொது மக்களின் உதவியை நாடுகின்றனர்.

## தொழிலாளர் தேசிய சங்கத்தினால் தோட்ட வைத்தியசாலைகளுக்கு மருந்து உதவிகள்



தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் மற்றும் சங்கத்தின் பிரதித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மயில்வாகனம் உதயகுமார் ஆகியோர் இணைந்து ஆரம்பித்துள்ள "உயிர்காக்க மருந்து"என்னும் திட்டத்தின் கீழ் தோட்டப்புற வைத்தியசாலைகளுக்கு அத்தியாவசிய மருந்து பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் தலவாக்கலை மடக்கும்பரை தோட்டம் மற்றும் வட்டகொடை தோட்டத்தை சேர்ந்த சுமார் 10க்கும் மேற்பட்ட பிரிவுகளில் வசிக்கும் 2000 ற்கும் அதிகமான மக்கள் பயன்பெறும் வகையில் மடக்கும்பரை தோட்ட வைத்தியசாலைக்கு தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித் தலைவர் மயில்வாகனம் உதயகுமார் தலைமையில் அத்தியாவசிய மருந்து பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

# நகர்வலம்



## கொழும்பு அளுத்மாவத்த அகில இலங்கை ஆனந்த ஐயப்பன் தேவஸ்தான வருடாந்த உற்சவத்தில் தேர்த்திருவிழா





வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்வில் தீர்த்தவாரி நடைபெற்று ஆனந்த ஐயப்பன் தேரில் எழுந்தருளி பக்தர்களின் தேர் தரிசனத்திற்காக அளுத்மாவத்த, மோதர, வீதி வழியாக ஊர்வலம் செல்வதையும், பக்தர்கள் தேரினை எதிர்கொண்டு அர்ச்சனை செய்வதையும் கலந்து கொண்ட பக்தர்களையும் காணலாம்.

# தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டம் வெற்றி மதவாச்சி பிரதேச செயலகம் பெருமிதம்

தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டம் தற்போது மதவாச்சி பிரதேச செயலகப் பிரிவில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இதன்படி, மதவச்சிய கட்டுவெல பிரதேசத்தில் உள்ள ஜயசக்தி சமூக சேவை அமைப்பின் கூட்டுப் பண்ணையில் குறைந்த நீரில் மேற்கொள்ளக்கூடிய பயிர்ச்செய்கைகள் பற்றிய வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் அநுராதபுரம் மாவட்ட அலுவலகத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சுரேகா ஏக்கநாயக்க தலைமையில் இந் நிகழ்வு நடைபெற்றது.

சாகுபடி திட்டத்தின் கீழ், இங்கு குழு பண்ணையில் பசுமை சாகுபடி செய்யப்படுகின்றது. இதிலிருந்து கிடைக்கும் அறுவடையை "ஜயசக்தி" என்ற பெயரில் சந்தைக்கு விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இங்குள்ள அதிகாரிகள் தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் தொடர்ச்சியான அறிவுறுத்தல்களின்படி பணிபுரிகின்றனர் மற்றும் சமூக அடிப்படையிலான இந்த அமைப்பில் சமூகத்தின் பங்களிப்பு மிக உயர்ந்த மட்டத்தில் உள்ளது.

அநுராதபுரம் வடக்கு நீர் திட்டத்தில், இந்த சமூக நீர் திட்டமும் நீர் வழங்கல் சபையின் கீழ் வரவுள்ளது. எனினும், இந்த சமூக அடிப்படையிலான அமைப்பு, வாடிக்கையாளர்களுக்கு நீர் விநியோகத்திற்கு அப்பாற்பட்ட புதிய வணிக வழிகளில் பல சேவைகளை வழங்குவதற்கு தற்சமயம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதன் ஆரம்ப கட்டமாக ஜயசக்தி என்ற பெயரில் நெல் ஆலை ஒன்றும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம், அரிசியை சந்தை விலையை விட அதிக விலைக்கு வாங்கி, அங்கத்தவர்களுக்கு சந்தை விலையை விட குறைந்த விலைக்கு விற்கப்படுகிறது. மேலும் கொப்பரை வாங்கி எண்ணெயாக மாற்றப்பட்டு உறுப்பினர்களுக்கு மானிய விலையில் வழங்கப்படுகிறது.

இக்களத்திற்குப் பொறுப்பான விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் கே.பியசேன மற்றும் மதவச்சி பிரதேச விவசாய ஆலோசகர் திருமதி ஷானிகா ஆகியோரின் நெருங்கிய உதவிகள் இதற்கு வழங்கப்படும் என களத்திற்குப் பொறுப்பான அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சுரேகா ஏகநாயக்க தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் அனுராதபுரம் மாவட்ட அலுவலக அதிகாரிகள், ஜயசக்தி பிரஜா மூல அமைப்பின் அதிகாரிகள் மற்றும் பலர் இதில் கலந்துகொண்டனர்.

# அதிக விலையில் விற்பனை செய்ய எரிபொருள் பதுக்கிவைத்திருந்த ஐவர் கைது

**அநுராதபுரம் மேற்கு தினகரன், திறப்பனை தினகரன் நிருபர்கள்**

திறப்பனை பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட பல சுற்றிவளைப்புக்களின் மூலம் அதிக விலையில் எரிபொருளை விற்பனை செய்வதற்கு பதுக்கி வைத்திருந்த ஐவரை கைது செய்துள்ளதாக திறப்பனை பொலிசார் தெரிவித்தனர்.

திறப்பனை தெமட்டகம, எத்துன்கம மற்றும் காகம ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே அவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளவர்களாவர்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களுடன் 165 லீற்றர் பெற்றோல் மற்றும் சிறிய ரக பட்டா லொறியொன்றினையும் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

திறப்பனை தெமட்டகம பகுதியில ஒருவரிடமிருந்து 18 லீட்டர் பெற்றோல் அதே கிராமத்தைச் சேர்ந்த மற்றுமொருவரிடமிருந்து 6,5 லீட்டர் பெற்றோல் எத்துன்கம பகுதியில் நபரொருவரிடமிருந்து 20 லீட்டர் பெற்றோல் காகம பகுதியில் நபரொருவரிடம் இருந்து 120 லீட்டர் பெட்றோலும் திறப்பனை பொலிசாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த சந்தேக நபர்கள் ஒரு லீட்டர் பெட்றோல் 2000 2500 ரூபாவிற்கு விற்பனை செய்வதற்கு பதுக்கி வைத்திருந்ததாக பொலிசார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களை பொலிஸ் பிணையில் விடுதலை செய்துள்ளதுடன் அனுராதபுரம் நீதி மன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.



இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் CITY.F.M. வானொலி ஏற்பாட்டில் நடைபெற்ற பிரபல பாடகி மரிய செல் குணதிலக்க வின் இசைக்கச்சேரி ஆனந்த சமரகோன் கலையரங்கத்தில் புதன் கிழமை (3) மாலை நடைபெற்ற போது கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் நவீன் குமார நிசான்க பாடகி மரிய செல் குணதிலக்க வுக்கு நினைவு சின்னம் வழங்கி வைப்பதையும், சிடி.F.M.கட்டுப்பாட்டாளர் அனுர பிரியந்த, இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் ஹாசீம் உமர், பிரதி பணிப்பாளர் மயூரி அபோசிங்ஹ மற்றும் ஜீவனி ஜயதிலக்க ஆகியோர் அருகில் இருப்பதையும் படத்தில் காணலாம்

# ஊடகங்கள், சமூக ஆர்வலர்கள் மூலம் விழிப்புணர்வு

நாட்டின் தற்போதைய அரசியல் சூழ்நிலை மற்றும் ஊடகங்களின் பொறுப்பு குறித்து ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் சமூக ஆர்வலர்கள் ஊடாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம் ஒன்று நேற்று முன்தினம் (31 ) அநுராதபுரம் கிறிஸ்டன்பார்க் ஹோட்டலில் இடம் பெற்றது.

இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் ஊடகங்கள் மற்றும் சிவில் சமூக செயற்பாடுகளும் அது தொடர்பான சட்டம் தொடர்பில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இதற்காக செலவு செய்யும் நேரம் மிகவும் பெறுமதியானது என்று நாளிதழின் ஒன்றின் ஆசிரியர் கே.டபிள்யூ. ஜனரஞ்சன இங்கு தெரிவித்தார்.

சமூகத்தின் நியாயத்தை சமநிலைப்படுத்தும் அளவீடாக இன்று



மக்களுக்காக ஊடகங்கள் பெரும் தியாகங்களைச் செய்து வருகின்றன என்பது உண்மைதான். ஊடகத் தளமாக விளங்கும் ஊடகவியலாளர் , பொது மக்களின் நிலையிலிருந்து வேறு பட்டவர்கள், மேலும், இவர்கள் ஊடக நிறுவனத்திற்கு நெறி முறையற்ற நபராக இருப்பதும் முக்கியம் என்றும் திரு.ஜனரஞ்சன தனது உரையில் மேலும் தெரிவித்தார்.

இக்கால சமூக நலன் கருதி ஊடகங்கள் மற்றும் சமூக செயற்பாடுகள் ஊடாக இவ்வாறான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் திட்டமிடப்பட்டுள்ளதாக செத் சவிய நிறுவனத்தின் பணிப்பாளர் ஃபாதர் பென்னட் மல்லவ தெரிவித்தார்.

ஒரு தொண்டு நிறுவனம் என்ற வகையில் சமூகத்திற்குப் பயனுள்ள பல செயற்பாடுகள் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் தந்தை மல்லவ இது பற்றி மேலும் தெரிவித்தார்.

இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் ஊடகவியலாளர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் என 30 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இது போன்ற மூன்றாவது ஊடக விழிப்புணர்வு நிகழ்ச்சியாக இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப் பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.



இந்துப் பெண்களால் சகல விதமான செல்வயோகங்கள்,சௌபாக்கியம்,புத்திரப்பேறு, சிறந்த கணவன்,போன்ற ஐஸ்வரியங்களையும் வேண்டி வரலெட்சுமி பூஜை இடம்பெறுவதுண்டு. அதன்படி உடப்பு ஸ்ரீருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீபார்த்தசாரதிப் பெருமாள் திரௌபதியம்மன் ஆலயத்தில் (5)வெள்ளிக் கிழமை நடைபெற்ற வரலெட்சுமி பூஜையில் பெண்கள் கலந்து கொண்ட போது பிடிக்கப் பட்ட படங்களாகும். உடப்பு குறூப் நிருபர்

# சுற்றுலாத்துறை தூதுவரானார் சனத்

## அமைச்சர் ஹரீனினால் நியமிப்பு

நாட்டின் சுற்றுலாத்துறை தூதுவராக கிரிக்கெட் ஜாம்பவான் சனத் ஜயசூரிய நியமிக்கப்பட்டுள்ளார். சுற்றுலா அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ இதனை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

புதிய சுற்றுலா ஆலோசனைக் குழுவுடன் இணைந்து நியமனத்தை அறிவிக்கும் சிறப்பு நிகழ்வு (04) நடைபெற்றது.

சனத் ஜயசூரிய உலகம் முழுவதும் மிகவும் பிரபலமானவர், மேலும் அவர், தானாக முன்வந்து இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் மாலைதீவை இலக்காகக் கொண்டு சுற்றுலாத்துறையை ஊக்குவிக்க ஒப்புக் கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வெள்ளவத்தை, மயூரபதி ஸ்ரீ பத்ரகாளி அம்பாள் ஆலய தேர்த்திருவிழா இன்று

கொழும்பு, வெள்ளவத்தை, மயூரபதி ஸ்ரீ பத்ரகாளி அம்பாள் ஆலய தேர்த்திருவிழாவும் இன்று காலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

இன்று காலை 5.30 மணிக்கு நடைபெறும் வசந்த மண்டப பூஜையைத் தொடர்ந்து ரதோற்சவம் நடைபெறவுள்ளது.

ஆலயத்தின் ரதோற்சவ நகர்வலப் பெருவிழா ஆலயத்தில் இருந்து புறப்பட்டு ஹெவலொக் வீதி வழியாக பாமன் கடை சந்தி, டபிள்யூ ஏ சில்வா மாவத்தை,வெள்ளவத்தை சமிக்ஞை விளக்கு சந்தி, காலி வீதி, டிக்மன்ஸ் வீதி வழியாக மயூரபதி கோயிலை வந்தடையுள்ளது.

இவ்வாலயத்தின் தீர்த்தத்திருவிழா நாளை நடைபெறவுள்ளது. இதனையொட்டி 2022.08.07ஆம் திகதி நாளை காலை 6 மணிக்கு அம்பாள் ஆலயத்தில் இருந்து புறப்பட்டு மயூரபதி, ஹெவலொக் வீதி, பாமன்கடை, டபிள்யூ ஏ சில்வா மாவத்தை, ஸ்டேசன் ரோட், மெரைன் டிரைவ் வீதி வழியாக பம்பலப்பிட்டி கின்ரோஸ் இந்து சமுத்திரத்தை அடைவார். அங்கு அம்பாளுக்கு தீர்த்தோற்சவம் நடைபெறும்.

இங்கு தீர்த்தோற்சவம் முடிவுற்றதும் அம்பாள் மீண்டும் அங்கிருந்து புறப்பட்டு சார்லிமன் ரோட், காலி வீதி வழியாக பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் கோயிலை வந்தடைவார்.

அன்று மாலை 6 மணிக்கு இந்திர விமானத்தில் அம்பாள் நகர வலம் வரும் நிகழ்வு நடைபெறவுள்ளது.

பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் கோவிலிருந்து புறப்படும் இந்திர விமான நகர வலம் காலி வீதி, ருத்திரா மாவத்தை, எம்டன் லேன், டபிள்யூ ஏ சில்வா மாவத்தை, பாமன்கடை, ஹெவலொக் றோட் வழியாக மயூரபதி ।ஆலயத்தை வந்தடையவுள்ளது.

எதிர்வரும்8ஆம் திகதி பூங்காவனம் , கற்பூரத் திருவிழா என்பன நடைபெறும். எதிர்வரும் 9 ஆம் திகதி காலை மாரியம்மன் தாலாட்டு, திருக்குளிர்த்தி என்பனவும் மாலை 4 மணிக்கு வைரவர் மடையும் நடைபெறும்.

**எஸ். ருக்மணி காந்தன்**

# கிழக்கின் குரல்



## ஜனநாயக போராட்ட செயற்பாட்டாளர்களை விடுதலை செய்யக் கோரிய போராட்டம்





**மட்டக்களப்பு விசேட நிருபர்**

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கைதினைக் கண்டித்தும் மற்றும் ஸ்டாலின் உள்ளிட்ட ஜனநாயக போராட்ட செயற்பாட்டாளர்களை விடுதலை செய்யக் கோரிய கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று (05) மட்டக்களப்பு காந்தி பூங்காவில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட ஆசிரியர் சங்கம் ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்வில் அடக்கு முறையைக் கைவிடு, உரிமைக் குரலை நசுக்காதே, ஜனநாயகத்தை குழிதோண்டிப் புதைக்காதே, சமத்துவ சட்ட வாட்சியை நடைமுறைப்படுத்து, போராட்டக்காரர்களின் முதுகில் குத்தாதே, போராட்டக்காரர்களை இரும்புக்கரம் கொண்டு அடக்காதே என எழுதப்பட்ட வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியிருந்தனர்.

இந்நிகழ்வில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் பொன்னத்துரை உதயரூபன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் ரி. சுரேஷ் உள்ளிட்ட ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

## பாரம்பரிய விதை நெல் உற்பத்தி அறுவடை விழா

**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**



பாரம்பரிய விதை நெல் உற்பத்திக் கிராமங்களை உருவாக்கும் முகமாக கிழக்கு மாகாண ஆளுநரின் நிதி உதவியின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் 187.5 ஏக்கரில் பாரம்பரிய நெல் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதில் மட்டக்களப்பு மத்தி வலயத்தின் கரவட்டி விவசாய போதனாசிரியர் பிரிவிற்கு 10 ஏக்கருக்கு பச்சைப் பெருமாள் என்ற பாரம்பரிய இனமும், மேலும் 20 ஏக்கருக்கு மடத்தவாலு என்னும் பாரம்பரிய இனமும், விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருந்தன.

இதன் அறுவடை விழா வியாழக்கிழமை (04) மாலை இடம்பெற்றது. மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் வி.பேரின்பராசாவின் தலைமையில் இவ்வறுவடை விழாவும், மதிப்பீட்டு நிகழ்வும் இடம்பெற்றது.

இதன்போது மட்டக்களப்பு மத்தி பிரதி விவசாயப் பணிப்பாளர் என். கணேசமூர்த்தி, பாடவிதான உத்தியோகத்தர்களான சி.எல்.செந்தீபன், என்.லெட்சுமணன், மற்றும் விவசாயப் போதனாசிரியர்களான ரி.கோசலரூபன், என்.விவேகானந்தராசா, எம். சிபான், மற்றும் விவசாயிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## மட்டக்களப்பு காந்தி பூங்காவில் கவனயீர்ப்புப் போராட்டம்

**வெல்லாவெளி தினகரன் நிருபர்**



வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் "கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல்" எனும் 100 நாட்கள் செயல்முனை கவனயீர்ப்பு போராட்டமானது மட்டக்களப்பு காந்தி பூங்காவில் நேற்று வெள்ளிக்கிழமை(5) காலை இடம்பெற்றது.

வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் க.லவகுசராசா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பெண்கள், பொது மக்கள், பாதிக்கப்பட்ட மக்கள், வடகிழக்கு ஒருங்கிணைப்புகுழு அங்கத்தவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

நாங்கள் நாட்டை துண்டாடவோ, தனியரசோ கேட்கவில்லை. இலங்கை நாட்டுக்குள் கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வையே கேட்கிறோம்", "வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரப் பரவலாக்கல் என்பது ஒரு ஜனநாயக உரிமையாகும்" "13 ஆவது திருத்தச்சட்டமானது அரசியலமைப்பு ரீதியாக அதிகாரப் பரவலாக்கத்துக்கான உரிமையை உறுதிப்படுத்துகிறது என போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் சுலோக அட்டையை தாங்கியவாறு கோசமெழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள்.

இதன்போது வடகிழக்கு மக்களின் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மகஜரை இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான பிராந்திய இணைப்பாளர் இஸ்ஸதீனிடம் கையளிக்கப்பட்டது.

## ஆசிரியர் இடம்மாற்ற விண்ணப்பம் 15 ஆம் திகதி வரை காலம் நீடிப்பு

**ஒலுவில் விசேட நிருபர்**

கிழக்கு மாகாண கல்வி வலயங்களுக்கு இடையிலான 2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த ஆசிரியர் இடம் மாற்றத்திற்கான விண்ணப்பம் எதிர்வரும் 15ம் திகதி வரை கால நீடிப்பு செய்யப்பட்டுள்ளதாக, கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் திருமதி என். பிள்ளைநாயகம் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலுள்ள சகல கல்வி பணிப்பாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு வலயத்தில் இருந்து இன்னும் ஒரு வலயத்திற்கு தமது விருப்பத்தின் பெயரில் இடம்மாற்றம் பெற விரும்புகின்ற ஆசிரியர்கள் மற்றும் தமது வலயத்திற்கென வலய இடமாற்ற அதிகாரியினால் தீர்மானிக்கப்படுகின்ற சேவை காலத்திற்கு மேலதிகமாக கடமை புரிகின்ற ஆசிரியர்கள் மற்றும் முதல் நியமன வலயத்தில் நியமன கடிதத்தின் படி கட்டாய சேவை காலத்தை பூர்த்தி செய்த ஆசிரியர்களிடமும், ஒரு வலயத்தில் 05 வருட கால சேவையை பூர்த்தி செய்த ஆசிரியர்களிடமிருந்தும் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண ஆசிரியர் இடமாற்ற கொள்கை அமைய தத்தமது வலயத்திலுள்ள சகல ஆசிரியர் மற்றும் அதிபர்களுக்கு இது தொடர்பாக அறிவித்து அதற்கமைய ஆசிரியர்களால் சமர்ப்பிக்கப்படும் அனைத்து இடமாற்ற விண்ணப்பங்களையும் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

## கதிர்காமத்தில் 10 ஆயிரம் பேருக்கு சித்தர்கள் குரல் அமைப்பினால் அன்னதானம்



**காரைதீவு குறூப் நிருபர்**

சித்தர்கள் குரல் அமைப்பின் பத்தாயிரம் பேருக்கான அன்னதானம் நேற்று முன்தினம் கதிர்காமத்தில் இடம்பெற்றுள்ளது.

பத்தாயிரம் பேருக்கான இந்த அன்னதானத்தை சித்தர்கள் குரல் அமைப்பின் ஸ்தாபக தலைவர் ஸ்ரீ சிவசங்கர் ஜி தலைமையில் நடத்தினர்.

சித்தர்கள் குரல் அமைப்பின் தலைவர் ஆதித்தன், துணைத் தலைவர் மனோகரன், ஸ்தாபக தலைவர் சங்கர் ஜி அவர்களின் நிதி உதவியோடு மற்றும் மகேஸ்வரன், தியாகராஜா, ரினோன், விவே, சில்வா ஆகியோரின் துணையுடன் அங்கே அன்னதானம் வழங்கப்பட்டது.

கதிர்காம பஸ்நாயக்க நிலமே அனுமதியோடு, வரலாற்றின் முதல் தடவையாக கதிர்காம ஆலயத்திற்கு முன்பாக உள்ள பிரதான மண்டபத்தில் சித்தர்கள் குரல் அமைப்பு பத்தாயிரம் பேருக்கு வழங்கி வைத்தது.

## நகர சபைக்கு சொந்தமான ஆறு பெரிய கேஸ் சிலிண்டர்கள் திருட்டு

**கந்தளாய் தினகரன் நிருபர்**

திருகோணமலை நகர சபைக்குச் சொந்தமான ஆறு பெரிய கேஸ் சிலிண்டர்கள் இனந்தெரியாதோரால் நேற்று முன்தினம் இரவு திருடப்பட்டுள்ளதாக திருகோணமலை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை சவக்காலையில் பயன்படுத்தப்பட்டு வந்த ஆறு கேஸ் சிலிண்டர்களே இவ்வாறு திருடப்பட்டுள்ளன.

சவக்காலையில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இரவு பகலாக இருந்தும் இவ்வாறு திருடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றன.

37.5 கிலோ நிறையுடைய பெரிய ஆறு சிலிண்டர்களே திருடப்பட்டுள்ளன.

சடலங்களை எரிப்பதற்காக பயன்படுத்தப்பட்டு வந்த நிலையிலே இவ்வாறு சிலிண்டர்கள் திருடப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பாக திருகோணமலை தலைமையக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## திருமலையில் ஈ.பி.டி.பி கட்சியினால் குடியேற்றப்பட்டவர்ளுக்கு காணி உரிமம்

### அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

திருகோணமலை மாவட்டத்தில் 1993 தொடக்கம் 1997 வரையான காலப்பகுதியில் ஈ.பி.டி.பி. கட்சியினால் சுமார் பத்துக்கும் மேற்பட்ட இடங்களில் குடியேற்றப்பட்ட மக்களுக்கான காணி உரிமங்களை விரைவாக பெற்றுக் கொடுப்பதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், காணி உரிமங்களை வழங்குவதற்கான முன்னோடி நடவடிக்கையாக வர்த்தமானியை வெளியிடுவதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் விரைவில் உரியவர்களுக்கான உரிமப் பத்திரங்கள் வழங்கி வைக்கப்படும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

மேலும், "திருகோணமலை மாவட்டத்தில் காணிகளற்று வாழ்ந்த மக்களையும், நாடு கடந்து அகதிகளாகச் சென்று மீண்டும் நாடு திரும்பிய மக்களையும், தொடர்ந்தும் அகதி முகாம்களிலும், உறவினர் மற்றும் நண்பர்கள் வீடுகளிலும் அந்தரிக்க விடாமல் அவர்களை வாழ வைக்கவேண்டும் என்பதே ஈ.பி.டி.பியின் நோக்கமாக இருந்தது. அதேவேளை திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் மக்களின் இருப்பினை உறுதிப்படுத்தி அங்கு தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை பாதுகாக்கும் நோக்கத்துடனும் அங்கு குடியேற்றங்களை அமைக்க வேண்டுமெனவும் கருதியே ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி செயற்பட்டது.

## மட்டக்களப்பில் பெண்களுக்கு தனியான ஒழுங்கமைப்பில் எரிபொருள் விநியோகம்

**மட்டக்களப்பு குறூப் நிருபர்**

மட்டக்களப்பில் உள்ள சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெண்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் பிரத்தியேக வரிசைகள் ஒழுங்கு செய்யப்பட்டு நேற்று முன்தினம் எரிபொருள் வழங்கப்பட்டது.



எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக பெண்கள் இரவு, பகலாக வரிசையில் காத்திருந்து சிரமத்தை எதிர்நோக்கி எரிபொருளை பெற்றுக்கொள்ள நேர்ந்தமையினால், பெண்களுக்கென தனியான வரிசையில் மட்டக்களப்பு நகர் பகுதியில் பெற்றோல் விநியோகிக்கப்பட்டிருந்தது.

அரச திணைக்களம் மற்றும் தனியார் துறையில் கடமையாற்றும் பெண்கள் எரிபொருளை பெற்றுக் கொள்வதில் அசௌகரியத்தினை எதிர்நோக்கி வந்திருந்த நிலையில் அவர்களும் இலகுவாக குறுகிய நேரத்திற்குள் பெற்றோலை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு கிடைத்திருந்தது.

தற்போது (QR) முறைமை அடிப்படையில் மிகவும் சுமுகமாக அனைத்து தரப்பினருக்கும் எரிபொருள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கந்தளாய் குளத்திற்கு குளிக்கச் சென்ற ஒருவர் நீரில் மூழ்கி பலி

**கந்தளாய் தினகரன் நிருபர்**

பாணந்துறை, அம்பலாந்துறைப் பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையொருவரே கந்தளாய் குளத்திற்கு குளிக்கச் சென்ற போது நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளதாக கந்தளாய் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்த நபர் கந்தளாய் பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தொழில் செய்து வந்த நிலையில் பாணந்துறையில் இருந்து கந்தளாயிக்கு சுற்றுலா சென்ற நண்பர்களுடன் சேர்ந்து குளிக்கச் சென்ற போதே கந்தளாய் குளத்தில் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக கந்தளாய் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கந்தளாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



Budfhas Light International Association எனும் அமைப்பின் அனுசரணையில் தம்பலகாமம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதியில் வாழும் தாய், தந்தையை இழந்த பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கான உலர் உணவு பொதிகள் வழங்கப்பட்டன. படம்: தம்பலகாமம் குறூப் நிருபர்

## கல்முனையில் மழையால் 500 ஏக்கர் நெற் காணிகளுக்கு பாதிப்பு

**நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்**

அம்பாறை மாவட்டத்தில் அண்மையில் பெய்த அடைமழை காரணமாக கல்முனை கமநலசேவை பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் அறுவடைக்குத் தயாராகவிருந்த சுமார் 500 ஏக்கர் நெல் வயல்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைப்புகள் தெரிவிக்கின்றன.

பண்டித்தீவு கீழ்கண்டம், மேல் கண்டம், இறைவெளிக்கண்டம், கல்முனை வெளிக்கண்டம் ஆகியவையே இதில் அடங்குகின்றன.

மழை காரணமாக ஆற்றில் அள்ளுண்டு வந்த நீரே இந்த பாதிப்புக்குக் காரணமாகும்.

பாதிக்கப்பட்ட விவசாயிகள் தமக்கு நஷ்டஈடு வழங்கப்படல் வேண்டுமென வேண்டுகோள் விடுக்கின்றனர்.

கல்முனை கமநலசேவை அலுவலகத்தால் பாதிப்பு விபரங்கள் தற்போது திரட்டப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# புதுப்புனல்

ஷம்ஸ் பாஹிம்



## கண் காணா தூரம் போய்விடு

துன்பத்தின் தொடக்க விழாவுக்கு
நாடா வெட்டும் சிறப்பு விருந்தாளியாய்
வந்த நீ இன்னும் போகவே இல்லை.

முன்னேற்றப் பரமபதத்தில்
பாம்பாகி காலைப் பிடித்திழுத்து
ஆரம்ப நிலைக்கே கொண்டு சென்று
கைகொட்டிச் சிரிக்கிறாய்

அதிவிரைவு பாதை நடுவே
காற்றிழக்கும் சக்கரமாகி வண்டியின்
வேகத்தை தடுத்து நிறுத்தி
தாமதத்தின் ஊர்வழியே
கூட்டிச் செல்கிறாய் .

ஏமாற்றும் முகங்களை
இலவச அறிமுகஞ் செய்யும்
தேர்தல் காலமாய் நிழலாடும்
உன்னிடத்தில் வாக்களித்து வாங்க
எனக்கான இலவசங்களும் இல்லை.

பட்டினியின் முகவரி சுமந்த
பசி கடிதமாய் வந்துவிடும் உன்னை
வாசிக்கும் வேதனைகளை
வயிற்றுக்கு சொல்லி ஆறுதலடைய
வக்கற்றுக் கிடக்கிறேன்.

இல்லாமையின் பகிரங்க பதாகை
ஏந்திய உனது வருகை
ஊரெங்கும் என் வாழ்தலின்
துயரை விளம்பரம் செய்ய
வாடிக்கிடக்கிறேன்

அளவுக்கதிக செல்வத்தை
பதுக்கிவைக்கும் செல்வந்தர்களாய்
அளவுக்கதிகமாய் வைத்திருக்கும்
என்னிலிருந்து நீ
விலகிவிடும் காலத்துக்காய்
காத்திருக்கிறது என் காலம்.

மகிழ்ச்சியின் கால்கள்
மனை வாசல் நுழையா வண்ணம்
கதவருகே நின்றிருக்கும் வறுமையே..
சற்று பொறு..
என்னிடமிருக்கும் காலி உண்டியலை
கடைத்தெருவில் விற்றுன்னை
கப்பலேற்றி விடுகிறேன்
கண்காணா தூரம் போய் விடு.

மெய்யன் நடராஜ்

## மூச்சு நிற்கும் நேரம்



கனவுகள்
கடந்த இந்த ஜடத்தை
கட்டில் எவ்வளவு நாள்
சுமக்கும்!

நட்பு எனும்
அனுபவத்தை
பரிசோதனைக்கு
விட்டேன்!

என் பணியைச்
சுமக்க
மனையாளும்
மக்களும்!

என் கால் புண்கள்
கூட
அவர்களுக்கு
பூக்களாகத்
தெரிந்திருக்கும்!

நோய் வரும்போது
பாவம் தெரிகிறது
பக்குவம் பிறக்கிறது
பிரியாவிடைக்கு
காலம் கேட்கிறது?'

மூடப்பட்ட கண்கள்
சிலவேளை
திறந்து நிற்கும்
வாரிசுகளின்
அழகுரலும்
ரம்மியமாய் ஒலிக்கும்!

செய்த பாவத்திற்கு
தீர்விதுவோ?
எத்தனை வேளைக்கு
மூச்சு
நிற்கும் நேரம்
மட்டும்!

தோப்பூர் எஸ் சிராஜுதீன்
நற்பிட்டிமுனை, கல்முனை.

## துளிர்க்கிறேன் நான் மீண்டும்

கவிதை இன்பம்
நீ தருகிறாய்
காதல் துன்பத்தைக்
கலந்து கலந்து

கடல்நீராகக்
காத்திருக்கிறேன்
மழை வேண்டும்
வானமே வந்துவிடு

ஆசையுடன் எழும்
ஆழிப்பேரலை ஆகிறாய்
அப்போதும் தீரவில்லை
என் காதல் தாகம்

நீ மட்டுமே
என் இலட்சியம்
மற்றயதை எழுத மறுக்கிறது
என் பேனா முனை

கவியே உன்னைக்
கவி எழுதினேன்
என்ன ஆச்சரியம்
நானும் கவியானேன்

'சரி' நீ இல்லாமல்
சரியாகவே இல்லை வாழ்க்கை
சராசரியாகவே இருக்கிறேன்
காதலே சரிநிகராக்க வா

வானம் பல கடந்து
பறந்து வருவேன்
பிரிந்த உன்னைப்
புரிந்து கொள்ள

வயது கடந்தாலும்
புதிதாகப் பூக்கிறாய்
புருவ இடைவழியில்
நெஞ்சைக் கோர்க்கிறாய்

என்றும் இளமையாக
இருக்கிறேன் நான்
காதல் மருத்துவத்தில்
கைகாரியா நீ?

பனிக்கூழ்
சாப்பிடாதே
உருகி வழிகிறது
எனக்குள்ளே

காதல் பறவையே
எங்கே போகிறாய்
உன் இன்னொரு சிறகு
என்னிடம் அல்லவா?

கடல் தாண்டி
மடல் எழுதுகிறேன்
மடியினில் சாயக்
கனாக் காண்கிறேன்

கவிதைச் சிறகுகளைக்
கழற்றி வீசாதே



காற்றாக இருப்பதே
நீ அணைக்கத்தானே

கைப்பிடி இதயம்
கவிதை அமுதசுரபி
உன் ஒற்றைக்
கண்ணசைவில்

எல்லோருடனும்
சிரித்துப் பேசுகிறேன்
உன்னிடம் மட்டுமே
அழுது காதலைச் சொல்கிறேன்

பட்ட மரமாய்
நின்றிருந்தேன்
உன் பார்வையில் பருவங்கள்
துளிர்க்கிறேன் நான் மீண்டும்

ஜலீலா முஸம்மில்
ஏறாவூர்

## இன்னமும் உணர்வுகள் உணர்த்தாதவர்களாய்...

நீண்ட தன் பெரும் துயரில்
நின்றும்
நிரப்பங்கள் வேண்டுமென
கனக்கும்
காலிரண்டும் ,

காலத்தின்
கொடும் காய்ச்சலால்
துவளும் மனமும்
விடுதலை வேண்டி நிற்க.


கனவோடு வழிகால்கள்
தறிக்கப்படும் ஓசை
கொஞ்சமும் எதிர்பார்த்திரா
திருப்பங்களென

இனியேனும்
கதவுகள் திறக்கப்படுமென
எதிர்பார்த்துக் காத்திருந்தவன்
இன்றும் அதே,
ஒட்டடை அலங்கார
வாயலின் முன்னே

இப்போதெல்லாம்
அடிக்கடி எழும்பும்
அடிவயிற்றின் வலி அறிந்திரா
நாட்டின் தலைமையும்

கைதட்டிச் சிரிக்கும் அரசியல்
வியாபாரிகளும்
இன்னமும் உணர்வுகள்
உறுத்தாதவர்களாய்.

வானம்பாடி.
நிந்தவூர்.



## என்னத்த சொல்ல

என்ன சொல்ல
எங்கே சொல்ல
நாடு போற
போக்க பாத்தால்
எதைச் சொல்ல

பெற்றோல் இல்லை
பதிவு மட்டும்
அதிகம் நடக்க
சைக்கிள் பயணம்
பழகிப் போச்சு

மக்கள் எல்லாம்
உரிமை வெல்ல
கூடி நின்றால்
அதிலும் இங்கே
கண்ணீர் புகை

பணம் இல்லை
என்று சொல்லி
நாடு கிடந்தால்
மாளிகையில் இங்கே
கட்டா காசு

என்ன சொல்
எமாற்றி அலையுறாங்க
விடியலை தேடி
மக்கள் இருக்க

பாரதி மைந்தன்
மந்துவில்
புதுக்குடியிருப்பு
முல்லைத்தீவு

## பூமித்தாய்

என் முதுகில்
நடமாடும் சுவர்க்க
பூமி மக்கள் நீங்கள்
உங்கள் செயலால்
நூற்றாண்டாய்
நரக வேதனை
துயர்மீண்டு
நிம்மதி பெருமூச்சு
விடும் காலம்
இக்காலம்.

உங்கள் வாகன எந்திரங்கள்
கக்கும் புகையும்
பெரும் புகை போக்கி
தொழிற்சாலை புகையும்
சோம்பேறிகள் வீசிய
பொலித்தீன்கள் கழிவை
இலகுவாய் எறித்ததெல்லாம்
என் நுரையீரலை
பாதித்ததை
நீங்கள் உணர்ந்ததில்லையே...

உங்கள் இல்லத்திற்காய்
என் மேனியை காயப்படுத்தி
பெரும் சத்தத்துடன் உடைத்த
கருங்கற்கல் கடத்தலும்
இரவினை பகல்போல்
என் உதிரத்திலிருந்து
வடித்தெடுத்த ஆற்றுமணல்
கொள்ளைக்கும் ஓய்வு
வழங்கியதால்
உங்களால் நிம்மதியாய்
வாழ்கின்றேன்...

நிம்மதி என்ற போலியில்
கடற்கரைக்கு கொத்து கொத்தாய்
வந்து உன் வயிற்றை நிரப்பி
வீசிய கழிவுகளால்
அலங்கோலம் கலைந்து
அழகின் உச்சத்தில்
என் உடன்பிறப்பு
இயற்கைக்கு எழில் கொடுத்து
நிம்மதியடைகின்றேன்
உங்கள் வருகையின்றி...

உங்களுக்காய் பல நன்மை
புரிய வனமாகி உறவுகூட்டமாய்
வாழ்ந்த வாழ்வை
உன் பேராசையால்
எந்திர மனிதன் கொண்டு



அழித்தொழித்த காலம் மாறி
அபாயமின்றி
மீண்டும் உறவாய் வனமாகி
வாழ தளைப்படும்
மகிழ்ச்சி உங்கள் வருகையின்றி...

இத்தனை என் சுகத்திற்கும்
உங்களுக்கு எரிபொருள்
குறைவே காரணம் எனில்
உன் பூமித்தாய் உங்களிடம்
விண்ணப்பமாய் வைப்பது
இந்நிலையினை
உங்கள் சந்ததிக்கும் கொடுக்க
பக்குவமாய் என்னிடமும்
கொஞ்சம் கருணை காட்டுங்கள்
எதிர்கால உங்கள் சந்ததிக்காய்.

முகம்மது முகைதீன் நௌபீக்
தோப்பூர்
தோப்பூர் குறூப் நிருபர்



## எனக்குள் நீ

தாண்டிப் போகையில்
கள்ளமாய் என்னைக்
கடத்திப் போகிறாய்....

எழுதும் கவியில்
மொத்தமாய்
என்னில்
நிறைந்து போகிறாய்...

மேகக் கூட்ட
விம்பமாய்
எனக்குள்
நிறைந்து போகிறாய்...

மேட்டுத் தோட்ட
தென்றலாய்
என்னில்
உரசிப் போகிறாய்...

வான் நிலவைத் தொடரும்
விண்மீனாய்
என்னை நோக்கி
கண்சிமிட்டிப் போகிறாய்...

வானவில்லைக் கலந்த
வண்ணமாய்
என்னுள்
கலந்து போகிறாய்....

என் காவிய ஓவியங்களின்
கருவாகிய கண்மணியே
மொத்தத்தின் மொத்தமாய்
நிறைந்து
என்னில்
நித்தில வித்தையாய்
உறைந்து போகின்றாய்...

மலையருவி பானு
( பாதிமா ஸகீனா )



# காலி தொழில்நுட்பக் கல்லூரியுடன் கைகோர்க்கும் எயார்டெல் லங்கா

இலங்கையின் இளைஞர்களை மையமாகக் கொண்ட தொலைத்தொடர்பு சேவை வழங்குநரான Airtel Lanka, புதிய தலைமுறை தொழில்நுட்பவியலாளர்களின் தொழில்நுட்ப மற்றும் தனிப்பட்ட திறன்கள் பற்றிய அறிவை மேம்படுத்தி நிபுணத்துவமுடையவர்கள் மற்றும் தொழில் முனைவோருக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் அண்மையில் காலி தொழில்நுட்பக் கல்லூரியுடன் (COT, Galle) கைகோர்த்துள்ளது.

இவ்வாறு கூட்டிணைந்ததன் மூலம், Airtel Lankaஆனது COT, காலியிலுள்ள கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட தொகுதிகளைச் சேர்ந்த 30 மாணவர்களுக்கு பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டிற்கான ஒத்துழைப்புகளை வழங்கவுள்ளதுடன் அவர்களுக்கு புதிய கணினிகள் மற்றும் உபகரணங்களையும் வழங்கவுள்ளது. சிறந்த மற்றும் திறமையான இறுதி ஆண்டு மாணவர்களுக்கு 612 மாதங்கள் வரை ஊதியத்துடன் கூடிய Internship திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

"உலகெங்கிலும் உள்ள பல நாடுகளைப் போலவே, இலங்கையும் மோசமான பொருளாதார நிச்சயமற்ற காலகட்டத்தை எதிர்கொண்டுள்ளது. உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கும், வளர்ச்சிக்கான புதிய வாய்ப்புகளை வெளிக்கொணருவதற்கும் அனைத்து கார்ப்பரேட் நிறுவனங்களும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டிய தருணங்கள் இதுவாகும். இந்த நிலைமையில் இருந்து மீட்பதற்கு ஊக்குவிப்



பதில் ICT மற்றும் தொலைத்தொடர்பு துறை முக்கிய பங்கு வகிக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம்." என எயார்டெல் லங்காவின் முகாமைத்துவ பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான அஷிஷ் சந்திரா தெரிவித்துள்ளார்.

அஷிஷ் மேலும் தெரிவிக்கையில், "வெற்றிப்பெற, இலங்கையின் இளம் வயதினரைப் பயிற்றுவித்து, இந்தத் துறைகளில் அவர்கள் சிறந்து விளங்குவதற்குத் தேவையான அறிவுத் திறன் மற்றும் கருவிகளை அவர்களுக்கு வழங்க வேண்டும்.

இது இலங்கை முழுவதும் துரிதமான, பரவலாக்கப்பட்ட பொருளாதார அபிவிருத்தி, வேலை வாய்ப்பு உருவாக்கம் ஆகியவற்றில் ஒரு புதிய முன்னுதாரணத்தை உருவாக்கும்.

காலி தொழில்நுட்பக் கல்லூரியுடன் எங்களின் கூட்டு இந்த முக்கியமான பயணத்தில் மற்றொரு குறிப்பிடத்தக்க மைல்கல் ஆகும்." என கூறினார்.

## தினகரன் வர்த்தக உலா

எம்.எஸ். பாஹிம் E-mail: businesstkn@gmail.com

9.5 வீதம் வரையான வட்டியினை வழங்கிடும்

# வெளிநாட்டு நாணய நிலையான வைப்பு திட்டத்தை அறிமுகம் செய்யும் கொமர்ஷல் வங்கி

கொமர்ஷல் வங்கி வெளிநாட்டு நாணய விஷேட நிலையான வைப்புக் கணக்குத் திட்டம் ஒன்றை அறிமுகம் செய்துள்ளது. வெளிநாட்டு மூலங்களில் இருந்து முதலீடுகளை கவருவதற்கான ஒரு மேலதிக செயற்பாடாக இந்தத் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

'Forex Plus'' என்று அழைக்கப்படும் இந்தப் புதிய திட்டம் ஐந்தாண்டுகள் வரையான வைப்புக் காலத்துக்கு வருடாந்தம் 9 வீதம் வரையான வட்டியை வழங்குகின்றது. இத்திட்டத்தில் நான்கு வகையான வெளிநாட்டு நாணயங்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

இலங்கையின் இன்றைய பொருளாதார சூழலில் மிகவும் அவசியமான வெளிநாட்டு நாணய முதலீட்டைக் கருத்தில் கொண்டே குழசநஒ Pடரள திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அத்தோடு தமது வாடிக்கையாளர்கள் போட்டிமிக்க சூழலில் மிகவும் கஷ்டப்பட்டு உழைத்த வெளிநாட்டு பணத்தை மிகவும் நம்பிக்கையான பின்னணியில் சேமிப்பதற்கான ஒரு வாய்ப்பை வழங்குவதும் இதன் நோக்கமாகும் என்று வங்கி அறிவித்துள்ளது.

இந்த வெளிநாட்டு நாணய வைப்புக் கணக்கை இலங்கையர்கள் அல்லாதவர்களும், இரட்டை பிரஜா உரிமை கொண்ட இலங்கையர்கள், இலங்கையில் வசிக்கும் அல்லது இலங்கைக்கு வெளியில் வசிக்கும் இலங்கையில் நிரந்தர வதிவிட வசதி உடையவர்கள், கடல் கடந்த நாடுகளில் தொழில்புரியும் இலங்கையர்கள், கடல்கடந்த நாடுகளில் ஒருங்கிணைக்கப்பட்ட கம்பனிகளில் பணிபுரிபவர்கள் என பல்வேறு தரப்பினர் ஆரம்பிக்கலாம்;.

இந்த தகுதிகள் உடையவர்கள் தமது 'Forex Plus' வெளிநாட்டு நாணய கணக்கை குறைந்த பட்சம் 5000 அமெரிக்க டொலருடன் அல்லது அதற்கு ஈடான யுரோ, ஸ்டேர்லிங் பவுண் அல்லது அவுஸ்திரேலிய டொலரில் மூன்று அல்லது ஐந்தாண்டு காலத்துக்குரிய வைப்பாகத் திறக்கலாம். வைப்புச் செய்யப்படும் வெளிநாட்டு பணத்தின் வகை மற்றும் அதற்கான காலம் என்பனவற்றின் அடிப்படையில் வட்டி வீதம் தீர்மானிக்கப்படும். தன்னிச்சையாகப் புதுப்பிக்கப்படும் வகையில் இந்த வைப்புத் திட்டம் அமையும் என்று வங்கி அறிவித்துள்ளது.

ஏற்றுமதி வருவாயை நாட்டிற்குள் கொண்டுவருவதற்கான

# இலங்கை மத்திய வங்கியின் விதிமுறைகளுக்கு முழுமையாக உடன்படுவதாக JAAF தெரிவிப்பு

அந்நிய செலாவணி பரிவர்த்தனைகள் மற்றும் வெளியேற்றங்களைக் கண்காணிப்பதில் இலங்கை மத்திய வங்கி எடுத்த நடவடிக்கைகளை வரவேற்பதாக இலங்கையின் ஆடை உற்பத்தி மற்றும் ஏற்றுமதி தொழில்துறையின் உச்ச அமைப்பான கூட்டு ஆடை சங்கங்களின் மன்றம் (JAAF) தெரிவித்துள்ளது.

இது குறித்து தனது கருத்துக்கள வெளியிட்ட JAAF, "நமது நாடு தற்போது எதிர்கொள்ளும் மோசமான நெருக்கடியை எங்கள் உறுப்பினர்கள் நன்கு அறிந்திருக்கிறார்கள்.

எங்கள் உறுப்பு நிறுவனங்கள் சட்டத்திற்கு இணங்கி, ஏற்றுமதி வருமானத்தை திரும்பவும் நாட்டிற்குள் கொண்டுவருவதை உறுதி செய்வதில் நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம். இதன் மூலம் மக்கள் எதிர்நோக்கும் தற்போதைய பொருளாதார நெருக்கடிகளுக்கு நிவாரணம் வழங்குவதற்கு நாங்கள் அர்ப்பணிப்புடன் செயற்படவுள்ளோம்."

"எங்கள் உறுப்பு நிறுவனங்கள் தற்போதுள்ள விதிமுறைகளுக்கு அமைய நடவடிக்கைகள முன்னெடுத்து வருவதுடன் இந்த சவாலான சூழ்நிலையின் கீழ் தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்த பங்களிக்கும் அனைத்து தரப்பினருக்கும் தேவையான ஒத்துழைப்புக்கள வழங்குவதற்காக இலங்கை மத்திய வங்கியும் அரசாங்கமும் முன்னெடுத்து வரும் அனைத்து முயற்சிகளுக்கும் தொடர்ச்சியான ஆதரவை வழங்க நடவடிக்கை எடுப்போம்." என JAAF தமது அறிக்கையில் வலியுறுத்தியுள்ளது.

இலங்கையில் மிக அதிகமான அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் துறையான ஆடைத் தொழிற்துறை, நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6% பங்களிப்பை வழங்குகிறது. இத்துறையானது சுமார் 350,000 தொழிலாளர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்புகளை உருவாக்கி மேலும் 700,000 பேரின் வாழ்வாதாரத்திற்கு உருதுணையாக இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பயிற்சி உபகரணங்களைத் தயாரிக்கும் DIMO வின் தொழிற்கல்விப் பிரிவு DATS



இலங்கையின் முன்னணியில் உள்ள பல்வகைப் பட்ட கூட்டு நிறுவனமான DIMO, அதன் தொழிற் கல்விப் பிரிவான DIMO Academy for Technical Skills (DATS) மூலம் பயிற்சி உபகரணங்களை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ளது.

இது GIZ இன் நிதியுதவியுடன் கிளிநொச்சியில் உள்ள இலங்கை ஜேர்மன் பயிற்சி நிறுவனத்திற்கான (Sri Lanka German Training Institute in Kilinochchi SLGTI) திட்டத்தை சமீபத்தில் நிறைவு செய்தது. ஹைப்ரிட் மற்றும் தொடர்ச்சியான மாறக் கூடிய ட்ரான்ஸ்மிஷன் (CVT) உள்ளிட்ட பல்வேறு வகையான gearboxes இனது cutaway மொடல்களை வழங்குவதை இந்த திட்டம் உள்ளடக்கியுள்ளது. இது வாகனங்கள் (automobile) தொடர்பான கற்கைகளை வழங்குவதுடன், வேலை செய்யும் வாகன காலநிலை கட்டுப்பாடு (Working automobile climate control) மற்றும் பெற்றோல் எரிபொருள் ஊசி சிமுலேட்டர்கள் (gasoline fuel injection simulators) மற்றும் ஒரு விசேட டேபிள்டாப் வீல் சீரமைப்பு அளவுரு சிமுலேட்டரும் (special tabletop wheel alignment parameter simulator) இந்த திட்டத்திற்காக வழங்கப்பட்டுள்ளன. தொழில்நுட்ப தரவு, பயனர் கையேடுகள், செயற்பாட்டு பயிற்சி ஆகியவையும் வழங்கப்பட்டன.

வாகன (automobile) பயிற்சி வகுப்புகளுக்கான பயிற்சி உபகரணங்களுக்கு மேலதிகமாக, கட்டட சேவைகள் துறைக்கான பயிற்சி உபகரணங்களையும் DATS வழங்குகிறது.பயிற்சி மாதிரிகள் மற்றும் சிமுலேட்டர்கள் என DATS இலங்கையில் பயிற்சி உபகரண உற்பத்தி துறையில் நுழைந்தது, அவற்றில் பெரும்பாலானவை ஐரோப்பிய வகையாகும். இவை மிகவும் விலை உயர்ந்ததாகும் என்பதுடன், தொழில் பயிற்சி வகுப்புகளில் பிரயோக ரீதியான அமர்வுகளை மட்டுப்படுத்துகிறது. இங்கு மலிவான தெரிவுகள் உள்ளன என்றாலும், தரம் மற்றும் நிறைவுத் தன்மை உலகளாவிய தரத்திற்கு இணையாக இல்லை. எனவே, நிபுணத்துவம் மற்றும் சமீபத்திய தொழில்நுட்பத்திற்கான அணுகலுடன் DATS, தற்போது உள்ளூர் நிறுவனங்களுக்கு தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சி தீர்வுகளை வழங்குகிறது.

தற்போது கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள DATS, வாகனத் துறையில் உலகத் தரம் வாய்ந்த தொழிற்பயிற்சியை வழங்கும் நோக்கில், Daimler AG ஜேர்மனியுடன் இணைந்து 1990 இல் நிறுவப்பட்டுள்ளது. 2018ஆம் ஆண்டில், இலங்கையில் ஜேர்மன் சான்றளிக்கப்பட்ட தொழிற்கல்வித் தகுதிகளை வழங்குவதற்காக இலங்கையில் ஜேர்மன் கைத்தொழில் மற்றும் வர்த்தக பிரதிநிதிகளுடன் DATS கூட்டுச் சேர்ந்துள்ளது.

2022 முதல் அரையாண்டில்

# உறுதியான நிதிப் பெறுபேறுகளைப் பதிவு செய்துள்ள யூனியன் வங்கி

2022 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டு பாரிய பொருளாதார சவல்களுக்கு முகங்கொடுத்திருந்தது. ரூபாய் மதிப்பிறக்கம்இ அதிகரித்துச் செல்லும் வட்டி வீதங்கள், வரிகள் அதிகரிப்பு, உயர் மதிப்பிறக்கங்கள்இ விநியோக கட்டுப்பாடுகள் மற்றும் இறக்குமதிகளை கட்டுப்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்பட்டிருந்த தீர்மானங்கள் போன்றவற்றினால் வங்கியியல் துறையானது பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்திருந்தது.

இந்தப் பின்னணியில்இ யூனியன் வங்கி தனது பிரிவுகள் மற்றும் வாடிக்கையாளர் பகுதிகளை கவனமான முறையில் நிர்வகித்திருந்ததுடன்இ கடுமையான மீட்சி செயன்முறைகளைப் பின்பற்றியிருந்தது. இதனூடாக, வாடிக்கையாளர்களுக்கு தடங்கலில்லாத வங்கிச் சேவைகள் கிடைப்பதை உறுதி செய்திருந்தது.

கடுமையான தொழிற்பாட்டு சூழலில் நிலவிய சவால்களுக்கு மத்தியில் மேம்படுத்திய பிரதான வங்கியியல் வினைத்திறனை வங்கி பதிவு செய்திருந்தது.

அதனூடாக முதல் அரையாண்டு காலப்பகுதியில், ரூ. 7,426 மில்லியனை ஒட்டுமொத்த வருமானமாக பதிவு செய்திருந்தது. முன்னைய ஒப்பீட்டு காலப் பகுதியுடன் கருதுகையில் இது 31 வீத அதிகரிப்பாகும்.

சொத்துகள் இலாகாவின் மீள விலையிடல் மற்றும் வட்டி செலவுகளின் கடுமையான நிர்வாகம் போன்றவற்றினூடாக தேறிய வட்டி வருமானம் 19வீதம் அதிகரித்திருந்ததுடன், தேறிய வட்டி எல்லைப் பெறுமதி 57 bps இனால் அதிகரித்திருந்தது.

தேறிய கூலி மற்றும் தரகு வருமானம் 24 வீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் இதில் உள்ளக மற்றும் சர்வதேச நிதி மாற்றங்கள் ATM கொடுக்கல் வாங்கல்கள், கிரெடிட் மற்றும் டெபிட் அட்டைகள், பண அனுப்புகைகள் மற்றும் வர்த்தக வியாபாரத்தின் அதிகரித்த செயற்பாடுகள் போன்றன பங்களிப்பு செலுத்தியிருந்தன.

இதர தொழிற்படு வருமானமும் அந்நியச் செலாவணி வருமானம் மற்றும் தேர்வுகளினூடாக 141 வீதத்தினால் அதிகரித்திருந்தது.

மதிப்பிறக்கங்களுக்கு முன்னதான தொழிற்படு வருமானம் ரூ. 3 575 மில்லியனாக பதிவாகியிருந்தது. இது 2022 ஜுன் 30 ஆம் திகதியன்று 18 வீத அதிகரிப்பை பதிவு செய்திருந்தது.

நெருக்கடியான பாரிய பொருளாதார நிலைகளினால் கடன் செலுத்துகைகள் தாமதமடைந்திருந்தன. வங்கியினால் முன்னாயத்த நடவடிக்கையாக அதிகரித்த மதிப்பிறக்கங்கள் மற்றும் நிர்வாக ஏற்பாடுகள் போன்றன மேற்கொள்ளப்பட்டிருந்தன. இந்தக் காலப்பகுதிக்கான மதிப்பிறக்க கட்டணம் ரூ. 961 மில்லியனாகும். இது முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 120 வீத அதிகரிப்பாகும்.

கடுமையான செலவு நிர்வகிப்பு செயற்பாடுகள் காணப்பட்ட போதிலும் வங்கியின் மொத்த தொழிற்பாட்டு செலவீனம் ரூ. 2,059 மில்லியனாக அதிகரித்திருந்தது. இது முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவாகியிருந்த பெறுமதியுடன் ஒப்பிடுகையில் 14 வீத அதிகரிப்பாகும். இலங்கை ரூபாயின் மதிப்பிறக்கம் மற்றும் அதனைத் தொடர்ந்து எழுந்த எரிபொருள் செலவுகள் போன்றன இதில் பிரதானமாக பங்களிப்பு செய்திருந்தன.

# பாதிக்கப்பட்டோருக்கு அவசரகால நிவாரணம் வழங்க 'மனிதநேய ஒன்றிணைவு' திட்டத்தில் இணையும் Huawei

நாட்டின் பொறுப்புள்ள பெருநிறுவனம் எனும் வகையில், 'மனிதநேய ஒன்றிணைவு' முயற்சியின் மூலம் நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார சவால்களால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு அவசரகால நிவாரணங்களை வழங்குவதற்கு Huawei Sri Lanka அண்மையில் உறுதியளித்துள்ளது. டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி, MAS Holdings Pvt Ltd, Hemas Holdings PLC, Execution Partner சர்வோதய சிரமதான சங்கம், சுயாதீன கணக்காய்வு நிறுவனமான PwC Sri Lanka நிறுவனங்களால் இந்த கூட்டுநிறுவன மனிதாபிமான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதோடு, CBL Group, Citi, Sunshine Holdings PLC, Huawei Technologies Lanka Co. ஆகியன இத்திட்டத்தின் பங்குதாரர்களாக இணைந்துள்ளன.

ஒரே எண்ணம் கொண்ட பெருநிறுவன பங்காளிகளுடன் இணைந்து முன்னெடுக்கப்படும் 'மனிதநேய ஒன்றிணைவு' முயற்சியானது, இலங்கை முழுவதிலும் உள்ள 200,000 இற்கும் அதிகமான பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அவசரகால நிவாரணங்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. 25 மாவட்டங்களிலும் அவசரகால நிவாரணம் தற்போது விநியோகிக்கப்பட்டு வருகிறது. இதில் 75,000 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இன்று வரை உதவிகளை பெற்றுள்ளன. உரிய பொருளாதார மீட்சித் திட்டத்தின் மூலம் நாட்டில் நிலைபேறான பலனுள்ள பரிமாற்ற முறை நிறுவப்படும் வரை, இந்த மனிதநேய ஒன்றிணைவு நிகழ்ச்சித் திட்டம், அதன் நிவாரண முயற்சிகளை மேற்கொள்ளும்.



Huawei Sri Lanka நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி Liang Yi இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில், "அண்மைக்காலமாக நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார சவால்களால், இலங்கையிலுள்ள கணிசமான அளவிலானோர் பாதிப்படைந்துள்ளமை தொடர்பில் நாம் வருத்தமடைகிறோம். நாடும் அதன் மக்களும் நெருக்கடிக்கு முகம்கொடுத்தவாறு, மிகுந்த நம்பிக்கையையும், மீளெழுச்சியையும் கொண்டுள்ளதையும் நாம் காண்கிறோம்.

ஒரு உலகளாவிய ICT வழங்குனர் என்ற வகையிலும், பொறுப்புள்ள பெருநிறுவனம் எனும் வகையிலும், இலங்கையில் ICT துறையில் மட்டுமன்றி இலங்கையின் எதிர்காலத்தின் மீதும் அதிக நம்பிக்கையை Huawei வைத்துள்ளது. 'மனிதநேய ஒன்றிணைவு' திட்டம் தொடர்பான Dialog நிறுவனம் கொண்டுள்ள உறுதி தொடர்பில் நாம் ஆழமாக ஈர்க்கப்பட்டுள்ளோம். " என்றார்.

சர்வோதய சிரமதான இயக்கத்தின் தலைவர் டொக்டர். வின்யா ஆரியரத்ன, Huawei Technologies Lanka Pvt Ltd நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி Liang Yi, Dialog Axiata PLC குழும பிரதான தொழில்நுட்ப அதிகாரி பிரதீப் டி அல்மேதா, Huawei Technologies Lanka Pvt Ltd நிறுவனத்தின் சிரேஷ்ட தயாரிப்பு தீர்வு முகாமையாளர் காவிந்த மஞ்சுள ஆகியோரை படத்தில் காணலாம்.

# பொதுநலவாய டி20: இலங்கை மகளிர் அணிக்கு கடைசி போட்டியிலும் தோல்வி

பொதுநலவாய விளையாட்டு விழாவின் மகளிர் டி20 தொடரில், கடந்த வியாழக்கிழமை (04) நடைபெற்ற தனது இறுதி குழுநிலைப் போட்டியில் இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி, தென்னாபிரிக்காவை எதிர்கொண்டு 10 விக்கெட்டுக்களால் மோசமான தோல்வியை சந்தித்துள்ளது.

இந்த தொடரில் குழு பி இல் காணப்படும் இலங்கை அணி ஏற்கனவே இங்கிலாந்து, நியூசிலாந்து அணிகளிடம் தோல்வியை சந்தித்தது.

தொடர்ந்து பேர்மிங்ஹாமில் ஆரம்பமாகிய போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க மகளிர் அணி முதலில் இலங்கை வீராங்கனைகளை துடுப்பாடப் பணித்தது.

அதன்படி போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை மகளிர் அணி தென்னாபிரிக்க வீராங்கனைகளின் பந்துவீச்சினை சமாளிக்க முடியாமல் 17.1 ஓவர்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் பறிகொடுத்து வெறும் 46 ஓட்டங்களை மாத்திரமே எடுத்துக் கொண்டது. இது இலங்கை மகளிர் அணி டி20ஐ போட்டிகளில் பெற்ற அதிகுறைவான ஓட்டங்களாகவும் பதிவானது.

இலங்கை மகளிர் அணியின் துடுப்பாட்டம் சார்பில் சாமரி அத்தபத்து 15 ஓட்டங்களை எடுத்ததோடு, அவர் மாத்திரமே அணியில் ஈரிலக்க ஓட்டங்கள் பெற்ற வீராங்கனையாகவும் மாறினார்.

மறுமுனையில் தென்னாபிரிக்க பந்துவீச்சில் நடைன் டி கிளர்க் வெறும் ஒரு ஓட்டத்தினை மாத்திரம் விட்டுக்கொடுத்து 3 விக்கெட்டுக்களைச் சாய்க்க, மசாபடா கிளாஸ் 2 விக்கெட்டுக்களை சுருட்டினார்.

தொடர்ந்து போட்டியின் வெற்றி இலக்காக நிர்ணயம் செய்யப்பட்ட 47 ஓட்டங்களை அடைய பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க மகளிர் கிரிக்கெட் அணி, வெறும் 6.1 ஓவர்களில் போட்டியின் வெற்றி இலக்கினை விக்கெட் இழப்பின்றி அடைந்தது.

தென்னாபிரிக்க மகளிர் அணியின் வெற்றியினை உறுதி செய்த அதன் துடுப்பாட்டத்தில் டஸ்மின் பிரிட்ஸ் 21 ஓட்டங்களையும் அன்னகே போஸ்ச் 20 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

இப்போட்டியின் தோல்வியோடு இலங்கை மகளிர் அணி தொடரில் மூன்று தொடர் தோல்விகளை பதிவு செய்ய, தென்னாபிரிக்க மகளிர் அணிக்கு இது தொடரில் முதல் வெற்றியாக மாறியது.



## 43.5 மில். ரூபா ஒப்பந்தத்தை இழந்தார் வனிந்து ஹசரங்க



இந்த ஆண்டுக்கான (2022) இங்கிலாந்தின் 'த ஹன்ட்ரட்' தொடரில் மென்செஸ்டர் ஒரிஜினல்ஸ் அணிக்காக விளையாட ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த வனிந்து ஹஸரங்க அந்த வாய்ப்பினை இழந்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் சபை வனிந்து ஹஸரங்கவிற்கு ஹன்ட்ரட் தொடரில் விளையாடுவதற்கான ஆட்சேபனை இல்லா சான்றிதழை வழங்க மறுத்ததனை அடுத்தே அவருக்கு இந்த தொடரில் ஆடும் வாய்ப்பு இல்லாமல் போயுள்ளது.

இதேநேரம் வனிந்து ஹஸரங்க ஹன்ட்ரட் தொடரில் விளையாடும் வாய்ப்பினை இழந்ததனை அடுத்து அவருக்கு மென்சஸ்டர் ஒரிஜினல்ஸ் அணி வழங்கிய சுமார் 100,000 பவுண்டுகள் பெறுமதியான (இலங்கை நாணயப்படி சுமார் 43.5 மில்லியன் ரூபா) வீரர் ஒப்பந்தத்தினை பெறுவதும் இல்லாமல் செய்யப்பட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட் சபையின் சிரேஷ்ட அதிகாரியான ஏஷ்லி டி சில்வா வனிந்து ஹஸரங்கவினை ஆசியக் கிண்ண டி20 தொடருக்கு உடல்நிலை மற்றும் உளநிலை அடிப்படையில் சிறந்த முறையில் தயார்படுத்தும் நோக்குடனேயே, அவருக்கு ஹன்ட்ரட் தொடரில் விளையாடும் சந்தர்ப்பத்தினை வழங்கவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் வனிந்து ஹஸரங்கவின் பிரதியீட்டு வீரராக மென்செஸ்டர் ஒரிஜினல்ஸ் அணி தென்னாபிரிக்க அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரர் ட்ரிஸ்டான் ஸ்டேப்சினை ஒப்பந்தம் செய்துள்ளது.

ஸ்டேப்ஸ் கடந்த வாரம் நடைபெற்று முடிந்த இங்கிலாந்து – தென்னாபிரிக்க அணிகள் இடையிலான தொடரில் அபார ஆட்டத்தினை வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பெட்மின்டனில் இலங்கை வீரர்கள் வெற்றிகள் குவிப்பு

இங்கிலாந்தின் பேர்மிங்ஹாமில் நடைபெற்று வரும் ஆண்களுக்கான தனிநபர் பெட்மிண்டன் இரண்டாவது சுற்றில் பார்படோஸ் வீரர் ஷே மைக்கல் மார்டினை எதிர்கொண்ட இலங்கை வீரர் நிலூக கருணாரத்ன 20 என இலகுவான வெற்றியை பெற்று, மூன்றாவது சுற்றுக்கு தகுதிபெற்றுள்ளார்.

போட்டியின் இரண்டு செட்களிலும் அற்புதமான ஆட்டத்தை வெளிப்படுத்திய இவர் 216 மற்றும் 215 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றிபெற்றார்.

அதேநேரம் மற்றுமொரு வீரரான துமிந்து அபேவிக்ரம இரண்டாவது சுற்றில் மோல்டா வீரர் சாமுவெல் கேஸரை 20 என வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு தகுதிபெற்றார். இவர் 2112 மற்றும் 2220 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றிபெற்றிருந்தார்.

அடுத்த சுற்றில் துமிந்து அபேவிக்ரம இந்திய வீரர் கிடாம்பி ஸ்ரீகாந்த்தை எதிர்கொள்ளவுள்ளதுடன், நிலூக கருணாரத்ன சிங்கப்பூர் வீரர் ஜியா ஹெங் தேவை எதிர்கொள்ளவுள்ளார்.

இந்நிலையில் கலப்பு இரட்டையர் பிரிவுக்கான இரண்டாவது சுற்றில் பங்கேற்ற இலங்கையின் சச்சின் டயஸ் மற்றும் திலினி ஹெந்தேவா ஆகியோர், கனடா அணியை எதிர்த்து 20 என வெற்றிபெற்றுள்ளனர்.

இலங்கை அணியானது 2111 மற்றும் 2118 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்றதுடன், இறுதி 16 அணிகளுக்கான சுற்றில் தென்னாபிரிக்க அணியை இன்றைய தினம் (06) எதிர்கொள்ளவுள்ளது.

அதேநேரம் பெட்மிண்டன் போட்டிகளில் நடைபெற்ற மற்றுமொரு போட்டியில் பார்படோஸை 20 என வீழ்த்திய இலங்கை ஆடவர் இரட்டையர் அணி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. சச்சின் குணதிலக்க மற்றும் புவனேக குணதிலக்க ஆகியோர் பார்படோஸ் அணியை 2112 மற்றும் 219 என வீழ்த்தினர். இவர்கள் இருவரும் தங்களுடைய அடுத்த போட்டியில் மாலைத்தீவுகள் அணியை எதிர்கொள்ளவுள்ளனர்.

இதேவேளை பெண்களுக்கான தனிநபர் இரண்டாவது சுற்றில் பங்கேற்ற இலங்கை வீராங்கனை விதுரா சுஷானி, இங்கிலாந்து வீராங்கனை பிரேயா ரெட்பனிடம் 02 என தோல்வியடைந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



## கடற்கரை கரப்பந்தாட்டத்தில் இலங்கை அணி காலிறுதியில்

இங்கிலாந்தின் பேர்மிங்ஹாமில் நடைபெற்றுவரும் பொதுநலவாய விளையாட்டுப் போட்டியில் செயிண்ட் கிட்ஸ் மற்றும் நெவிஸ் அணிக்கு எதிராக நடைபெற்ற ஆண்களுக்கான கடற்கரை கரப்பந்தாட்ட போட்டியில், இலங்கை அணி 20 என வெற்றிபெற்று காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இலங்கையின் மலிந்த மற்றும் அஷேன் ஆகியோர் 2111 மற்றும் 2111 என்ற புள்ளிகள் கணக்கில் செயிண்ட் கிட்ஸ் மற்றும் நெவிஸ் அணியின் ஹொட்ஜ் மற்றும் சீபுருக்ஸ் ஆகியோரை வீழ்த்தினர். இந்தப்போட்டியில் வெற்றிபெற்ற இலங்கை அணி காலிறுதிப் போட்டியில் அவுஸ்திரேலிய அணியை எதிர்கொள்கிறது.



இதேவேளை பெண்களுக்கான போட்டியில் இலங்கை அணி வெற்றிபெற்று, காலிறுதிக்கு முன்னேறியது. குறிப்பாக இந்தப்போட்டியில் டிரினிடாட் மற்றும் டொபெகோ அணியைச் சேர்ந்த வீராங்கனை உபாதைக்கு முகங்கொடுத்ததால், இலங்கை அணி அடுத்தச் சுற்றுக்கு முன்னேறியது. இலங்கை அணி காலிறுதியில் கனடா அணியை எதிர்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஸ்குவாஷில் இலங்கை வெற்றி

பொதுநலவாய விளையாட்டுப் போட்டியில் இலங்கை ஆண்கள் இரட்டையர் பிரிவு ஸ்குவாஷ் போட்டியின் இரண்டாவது சுற்றில் இலங்கை அணி 20 என வெற்றியை பதிவுசெய்துள்ளது. ரவிந்து லக்சிறி மற்றும் வகீல் ஷமீல் ஆகியோர் இணைந்து கயானா வீரர்களான வில்ஷையர் ஷொமரி மற்றும் கஹ்லீல் ஜேசன் ஆகியோரை வீழ்த்தியுள்ளனர்.



போட்டியின் முதல் செட்டை 115 கைப்பற்றிய இவர்கள், இரண்டாவது செட்டை 216 என இலகுவாக கைப்பற்றினர். இலங்கை அணியானது, அடுத்த சுற்றில் அவுஸ்திரேலிய அணியை எதிர்கொள்ளவுள்ளது.

இதேவேளை பெண்களுக்கான இரட்டையர் பிரிவு இரண்டாவது சுற்றில் இந்தியாவை எதிர்கொண்ட இலங்கை அணி 02 என தோல்வியடைந்தது. இலங்கை சார்பில் யெஹானி குருப்பு மற்றும் சினாலி சந்திமா ஆகியோர் இந்தியாவின் சுனைனா குருவில்லா மற்றும் அன்ஹட் சிங் ஆகியோரை எதிர்கொண்டு 911 மற்றும் 411 என்ற புள்ளிகள் கணக்கில் தோல்வியடைந்தனர்.

இதேவேளை ஆண்களுக்கான 51 54 கிலோகிராம் எடைப்பிரிவு குத்துச்சண்டையின் காலிறுதிப்போட்டியில் இலங்கை வீரர் ருக்மால் பிரசன்ன தோல்வியடைந்தார். போட்டியின் கானா வீரர் ஆப்ரஹாம் மென்ஷாஹ்விடம் தோல்வியடைந்த அவர், தன்னுடைய அரையிறுதிக்கான வாய்ப்பையும் இழந்தார்.

இதேவேளை, பெண்களுக்கான 54 57 கிலோகிராம் எடைப்பரிவு குத்துச்சண்டை போட்டியின் காலிறுதியில் போட்டியிட்ட இலங்கை வீராங்கனை சஞ்சீவனி குரே அரையிறுதி வாய்ப்பை இழந்திருந்தார். காலிறுதிப்போட்டியில் தென்னாபிரிக்காவின் பிவகுலே ஸ்பசிஸிவேயை இவர் எதிர்கொண்டு தோல்வியடைந்திருந்தார்.

